242
d. No. M. 2569
24 NOV 1937
MADRAS
1238

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 8

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 11

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1356, ஷஅபான்௴ 1937௵ நவம்பர்௴

1. அல்குர்ஆன் ... 265 2. அல்ஹதீது ... 267
3. றமலான் நோன்பு ... 269
4. ஷாம்தேச சுயேச்சை சரித்திரம் ... 271
5. ஹாஜிகளுக்குப் புதிய கப்பல் "அல்மதீனா" ... 275
6. துருக்கி, ஈரான் அரசாங்கங்களின் மார்க்க பக்தி ... 276
7. மதத்தின்மீது பாய்ச்சல் ... 277
8. வகுப்புவாதிகள் யாவர்? ... 280
9. நபீ என்பதான பொய் விவாதம் ... 285
10. முஸ்லிம் லீக் மகாநாடு ... 289
11. இப்பூவுலகிற்கு இஸ்லாம் ஈந்த பேருபகாரம் ... 295
12. ஹிஜாஸில் பயமின்மை ... 298
13. தொழிலை கைக்கொண்டதனாலேற்பட்ட மாறுதல் ... 300
14. நான்கு முஸ்லிம் அரசாங்கங்களின் ஒற்றுமை. 302

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்

208353
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1937
MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 1356 ஷஅபான் மீ 1937ஷூ நவம்பர் மீ	இதழ் 11

அல்குர்ஆன்

உங்கள் நாயன் சொல்கிறன் : என்னிடம் (உங்களுக்குத் தேவையானவைகளை) கேளுங்கள். யான் (அவைகளை) நிறைவேற்றிக்கொடுக்கிறேன். நிச்சயமாக எவர்கள் (என்னிடம் கேட்பதைவிட்டு) புறக்கணிக்கின்றனரோ அன்னோர் சமீபத்தில் நரகத்தை அடைவர்.

(திருகுர்ஆன்.)

சோதரீர் !

நமக்குத் தேவையானவைகளை யெல்லாம் அல்லாஹ் தஆலாவினிடமே கேட்டுக் கொள்ளவேண்டும். 'துஆ' வென்பது அடியான் தனதுஏலாத்தனத்தையும், தாழ்மைத்தனத்தையும் எஜமான்முன் வெளியாக்கி தனக்கு வேண்டுவனவற்றைக் கோரிக்கொள்வதாகும். இதில் முழுமனதையும் செலுத்தி, தனது தாழ்மைத் தனத்தை வெளியாக்காமலும், அல்லாஹ்தஆலாவின் பயத்தை மனதிலிருத்தாமலும் வாயினுல் மட்டும் பிரார்த்தனை புரிவதற்குள்ள வார்த்தைகளை உபயோகிப்பது கொண்டு எவ்வித பிரயோசனமுமேற்படமாட்டாது. உதாரணமாக, ஒரு மனிதன் ஓர் அதிகாரியிடம் ஏதாகிலும் விண்ணப்பித்துக்கொள்ள நாடி தனக்கு தேவையானவற்றை அவனிடம் சொல்லிக்கொண்டிருக்கும்போது தனது மனதை வேறு பக்கல் திருப்பி, வேறு சிநேகிதர்களிடம் இடைஇடையே ஏதாகிலும் பேசிக்கொண்டே அவ்விண்ணப்பத்தை அந்த அதிகாரியிடம் சமர்ப்பிப்பானுகில் அவ்விண்ணப்பத்தின் கதியாதாகுமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்! அவன் தான் கோரிய காரியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாய் தண்டனை அடைவதற்கு அருகனுப் விடுகின்றான். இத்தன்மைபோலதான் அல்லாஹ்தஆலாவிடம் நமக்குத் தேவையானவற்றைக் கேட்பதில் முழு மனதையும் அதில் செலுத்தாமலும், தாழ்மைத்தனத்தை வெளியாக்காமலும் இருப்போமாகில் நம்முடைய பிரார்த்தனைகள் ஒப்புக் கொள்ளப்படுகிறதில்லை என்பது திண்ணம். இன் நிலைமையில் ஒருவனுடைய பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்பட்டுப்போமாயின், அஃது அல்லாஹ் நம்மீது புரிந்த நன்றி என்று கருத

வேண்டுமேயல்லாது நம் பிரார்த்தனையின் பயனென கருதலாகாது.

இவ்வாயத்தின் ஆரம்பத்தில் 'றப்பு' என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருப்பதால், நாம் கேட்டுக்கொள்ளாதிருக்கும் நிலைமையில் நம்மை வளர்த்து காப்பாற்றிவரும் நாயன் நாம் பிரார்த்தனை புரிவதை நிறைவேற்றிக்கொடுக்காதிருப்பானு? அவசியம் நிறைவேற்றிக் கொடுப்பான் என்பதின்மீது சயிக்கினையிருக்கிறது. அல்லாஹ்தஆலா ஆரம்பத்தில் தாய் வயிற்றில் நம்மை வளர்த்தான். நாம் உலகில் தோன்றியபின் அவன் நமக்குப் புரிந்த நன்றிகள் அனந்தமாகும். ஆரம்பத்தில் நமக்கு எவ்வித அறிவு உணர்ச்சி முதலியவைகளுமிருக்கவில்லை. அதுபொழுது உலகிலுள்ள அறிவாளிகள் யாவரும் ஒன்று சேர்ந்து கொண்டு பிள்ளை பால் குடிப்பதற்கான வழியை கண்டு பிடிப்பதற்குள்ள முயற்சியிலீடுபடுவார்களாயினும் அஃது ஒருக்காலும் முடியாது. குழந்தை பால் சூப்பிக்குடிப்பதற்கான மார்க்கத்தை அச்சிசுவுக்குக் கற்பித்துக்கொடுத்தது அவ்வல்லோன் நம்மீது புரிந்த நன்றிகளிலொன்ருகும். இஃதொரு சிறு விஷயமாகும். இதற்குப்பின்னுள்ளவைகளை படிப்படியாக நாம் கவனிப்போமாக.

மேலே கூறப்பட்டுள்ள வாக்கியத்தின் கடைசியில் "எவர்கள் அல்லாஹ்விடம் கேட்பதைவிட்டு முகத்தைத் திருப்பிக்கொள்கின்றார்களோ அன்னோர் அதிசீக்கிரம் நரகத்தினுள் பிரவேசிப்பர்" எனக்கூறப்பட்டிருக்கிறது. இதனுல் மக்கள் தங்களுக்கு வேண்டுவனவற்றை அல்லாஹ்தஆலாவிடம் கேட்டுக் கொள்வதின் மகிமை நன்கு வெளியாகும். மனிதனுல் புரியப்படும் எந்த வணக்கமும், நன்மைகளும் உலகத்திற்காக இருக்குமாயின் அஃது வணக்கமாக எண்ணப்படமாட்டாது. ஆனுல் 'துஆ'—பிரார்த்தனை புரிவது மட்டும் உலகிற்காக இருக்குமாயினும் அப்பொழுதும் அது வணக்கமாக கணக்கிடப்படுவதுடன் அதன்மீது நற்கூலியும் கொடுக்கப்படுகிறது. காசு பணம் ஐசுவரியங்களைக்கேட்டபோதிலும் இன்னும் ஏதாகிலும் உலக சம்பந்தமான விஷமங்களைக்கேட்டபோதிலும் அதற்கும் புண்ணியம் கிடைக்கிறது. ஆனுல் வணக்கங்களில் உலக சம்பந்தமான எண்ணங்களேற்பட்டுவிடுமாயின் அதனுல் எவ்வித பயனுங்கிடைக்காது. உதாரணமாக, ஒரு வைத்தியர் ஒருசீக்காளியை நோக்கி, இன்று நீர் சாப்பிடலாகாது; சாப்பிடுவாயாகில் உனக்குத்தீங்கு ஏற்பட்டுவிடும் எனக்கூறுகிருர். அதுபொழுது அந்த வியாதியஸ்தன், சரி இன்று யான் நோன்பு பிடித்துக்கொள்கிறேன் என்று கூறி உபவாசமிருப்பானுகில் இதனுல் அவனுக்கு நோன்பின் நன்மை ஏதாகிலும் கிடைக்குமா? ஒருக்காலும் கிடைக்கமாட்டாது. இதுபோலதான் எந்த வணக்கமும் கலப்பற்ற முறையில் அல்லாஹ் தஆலாவுக்காகச் செய்யப்படாத வரைக்கும் அஃது பிரயோசனமளிக்கா. நமக்குள்ள உலகத்தேவைகளை எவ்வளவு தூரம் கேட்டபோதினும் அதற்கும் 'தவாப்' நன்மை கிடைக்கிறது. ஏனெனில் 'துஆ' வென்பதே தனது ஏலாத்தனத்தையும், தாழ்மைத்தன்மையையும் வெளியாக்குவதாகும். உலக சம்பந்தமான விஷயங்களைக் கேட்டுக் கொள்வதிலும் தாழ்மைத்தன்மையை வெளியாக்கலாம். மனிதன் தனது ஏலாத்தனத்தையும் தாழ்மையையும் வெளியாக்குவது அல்லாஹ் தஆலாவுக்கு மிகமிக விருப்பமானதாகும். தானென்ற அகம்பாவம், பெருமைத்தனம் ஆகியவைகள் மிக மிக கெட்ட வஸ்துக்களாகும்.

நாம் பூர்ண மனதோடும், முழு முயற்சி நம்பிக்கையோடும் நமக்கு வேண்டுவனவற்றை அல்லாஹ் தஆலாவிடம் கேட்போமாகில் நமது நாட்டம் கைகூடிவரும். ஹஜ்ரத் ஈசுப் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் தஆலாவின் மீது எவ்வாருன நம்பிக்கை ஏற்பட்டிருந்தது என்பதை நோட்டமிடுவோமாக: ஹஜ்ரத் அவர்களை பீபிஜுலைகா அவர்கள் ஏமாற்ற முற்பட்டபோது தலை வாயல்களெல்லாம் அடைக்கப்பட்டிருந்தது. வெளியில் புறப்பட்டுவிட எந்த வழியுமில்லாதிருந்தது. இந்நிலைமையிலும் ஹஜ்ரத் அவர்கள் அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைத்து இங்குமங்கும் ஓடி முயற்சித்ததன் பயனுக அல்லாஹ்தஆலா ஹஜ்ரத் அவர்களுக்கு ஒரு வழியைக் காண்பித்துவிட்டான். ஆகவே, நாமும் நம்முடைய் நாட்டங்களைப் பெற உண்மை மனதோடு முயற்சிப்போமாகில் நாம் கோரியவைகளை நிச்சயம் அடைவோமென்பது திண்ணம். ஆனுல் பாவமான காரியங்கள் புரிவதற்கு அல்லாஹ் தஆலாவினிடம் உதவி தேடலாகாது.

சிலர், தங்கள் முயற்சியால் கூடிவராத வஸ்துக்களைத்தான் இயலாத்தனத்தால் அல்லாஹ்தஆலாவினிடம் கேட்கவேண்டுமெனக் கருதுகின்றனர். ஆனால் எந்த விஷயம் மானிடரின் முயற்சியைக்கொண்டு நடைபெறுகின்றதோ அந்த விஷயங்களிலும் அல்லாஹ்தஆலாவிடம் கேட்டுக்கொள்வதுதான் பிரதானமாகும். ஒரு விஷயம் வெளிரங்கத்தில் மக்களின் யோசனை தந்திரத்தைக் கொண்டு நடைபெறுவதாய்த் தோன்றினும் சற்று ஆழ்ந்த கருத்தைக் கொண்டு நோட்டமிட்டுப் பார்ப்போமாயின் அவ்விஷயம் கைகூடுவதற்குள்ள பற்பல காரியங்கள் ஒன்று சேருவது நம்முடைய முயற்சியைவிட்டு தூரமானதா யிருக்கிறது. அக்காரியங்கள் ஒன்று சேருவதற்கு நாம் அல்லாஹ் தஆலாவிடம் பிரார்த்தனைதான் புரியவேண்டும். உதாரணமாக, வெள்ளாண்மை செய்வதை எடுத்துக்கொள்வோம். அதில் ஏர் உழுவது, விதை விதைப்பது முதலியவைகள் நம்முடைய முயற்சியைக் கொண்டு நடைபெறுகின்றது. ஆனால் வெள்ளாண்மைக்கு ஹானி உண்டாகக்கூடிய எவ்விஷயமும் அதிலேற்படாது காப்பாற்றவேண்டிய அவசியம் வேறு இருக்கிறது. இதற்காகத்தான் அல்லாஹ்தஆலா, "நீங்கள் வெள்ளாண்மை செய்வதில் அந்த வித்தை நீங்களா முளைக்க வைக்கின்றீர்கள்? இல்லை, நாம் அதனை முளைக்க வைக்கிறோம்" என்று கூறியுள்ளான். ஆகவே, நாம் நம்முடைய முயற்சியைக்கொண்டு எது செய்வதாயினும் அதில் அல்லாஹ்தஆலாவிடம் பிரார்த்தனை புரியவேண்டுவது அவசியமாகும். மேலும் ஒரு விஷயம் ஏற்படுவதற்கு பிரார்த்தனை புரிவதுமட்டும் போதாது. அத்துடன் நம்முடைய முயற்சியும் பிரதானமாகும். உதாரணமாக, ஒரு மனிதன் தனக்கு சந்ததி ஏற்படவேண்டுமென கருதுவானாகில் அவன் விவாகஞ் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கை நடத்துவதுடன் அல்லாஹ் தஆலாவிடம் பிரார்த்தனையும் புரியவேண்டும். இவ்வாறில்லாது விவாகமின்றி சந்ததியை நாடி பிரார்த்தனை புரிவானாகில் அவனைப் பைத்தியக்காரனென்றே கருதும்படி ஏற்பட்டுவிடும்.

ஆகவே, நாம் நமது தேவைகள் பூர்த்தியடைவதற்கு அவ்வேலையில் முயற்சி செய்வதுடன் அதனை நிறைவேற்றித் தரவேண்டுமென அல்லாஹ் தஆலாவிடம் கேட்பதும் பிரதானமெனக் கருதி அதன்படி நடைமுறையில் காரியாதிகளை நடத்திச் செல்ல வல்லநாயன் கிருபை பாலிப்பானாக.

அல்ஹதீது

"அல்லாஹ் தஆலா உங்களது வெளிகோலங்களையும், ஐசுவரியங்களையும் பார்க்கமாட்டான். ஆனால் உங்கள் எண்ணங்களையும், உங்கள் 'அமல்' வேலைகளையும்தான் நோட்ட மிடுகிறான்" என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்கூறியுள்ளார்கள்.

எதில் அல்லாஹ் தஆலாவின் பார்வையும் நோக்கமு மிருக்கிறதோ அதில் மக்களின் பார்வையும் நோக்கமுமில்லை என்றும், எதன் மீது அல்லாஹ் தஆலாவின் பார்வையும் நோக்கமுமில்லையோ அதில் மக்களின் நோக்கமும் பார்வையுமிருக்கிறதென்றும் மேலே கூறப்பட்டுள்ள வாக்கியங்கள் மூலம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் விவரித்துக் காண்பித்துள்ளார்கள். மக்கள் அகப்பட்டுச் சிக்குண்டு போயிருக்கும் ஒரு வியாதியின் பரிகாரம் இதில் விபரித்துக் கூறப்பட்டிருக்கிறது. வெளிகோலம், ஐசுவரியம் இவைகள்மீது அல்லாஹ்வின் பார்வை ஏற்படுவதில்லை. ஆனால் மக்கள் இவைகளையே தங்கள் நோக்கங்களாகக் கொண்டிருக்கின்றனர். எண்ணம், அமல் செய்வது இவைகளின்மீது அல்லாஹ்தஆலாவின் நோட்டமிருக்கும் நிலைமையில் மக்கள் இவைகளைவிட்டு தங்கள் பார்வையைத் திருப்பிக் கொண்டிருக்கின்றனர். இத்தவறைவிட்டு மக்கள் விடுதலை பெறுவதற்குள்ள மார்க்கத்தை தேடிக்

கொள்வதற்காக அத்தவறை எடுத்துக் காண்பிக்கவேண்டியது அவசியமாயிற்று. இவ்வியாதியில் மக்கள் மூழ்கியிருப்பதை நாம் காண்கின்ரோம்.

காலங்களில் சிரேஷ்டமான வற்றில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மேலே கூறப்பட்டவாறு திருவாய் மலர்ந்தருளியது பிற்காலத்தின் நிலைமையைக் கருதிக் கூறியவைகளாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உலகம் முடிவு நாள் வரைக்கும் நபியாக அனுப்பப்பட்டிருப்பதால் எக்காலத்திலும் ஏற்படும் சகல வியாதிகளுக்கும் பரிகாரங்கூறவேண்டிய அவசியமிருந்தது. நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் காலத்திலேற்பட்டுள்ள விஷயங்களுக்கும் பிற்காலத்திலேற்பட்டுள்ள விஷயங்களுக்கும் இனி ஏற்படப் போகும் விஷயங்களுக்கும் சன்மார்க்கத்தில் பரிகார மில்லாமலில்லை. ஆனால், சகலவிஷயங்களுக்கும் பரிகாரம் இருப்பதென்பதற்கு ஒவ்வொரு விஷயத்திற்கும் தனித்தனியான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதென்பது கருத்தல்ல. பொதுவான ஒரு சட்டம் கூறப்பட்டு அதற்குத் தாழால் அநேக விஷயங்களுக்குள்ள பரிகாரம் அமைந்திருக்கிறது என்பது கருத்தாகும்.

உதாரணமாக, தாடி வைக்கவேண்டுமென குர்ஆன் ஷரீபில் கூறப்படவில்லை என இது காலை சிலர் வாதாடுகின்றனர். இவ்விஷயம் வெளிரங்கமாய் குர்ஆன் ஷரீபில் கூறப்படவில்லையாயினும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தாடி வைக்கும்படி உத்திரவிட்டிருக்கின்ருர்கள். ஆகவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியது அல்லாஹ் தஆலா கூறியதுபோலாகும். இம்முறையில் தாடி வைக்க வேண்டுமென இடப்பட்டுள்ள கட்டளையும் குர்ஆனில் கூறப்பட்டவை போலவேயாகும். இதனல் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களால் உத்திரவிடப்பட்டவைகளெல்லாம் அல்லாஹ் தஆலாவால் உத்திரவிடப்பட்டவைகளே போலாகும். இந்நிலைமையில் மக்கள், அல்லாஹ்த ஆலாவின் கட்டளைகளையும், எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய விஷயங்களையும் நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருக்கிருர் களென்பதை உற்றுணர்ந்து பார்க்க நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிருேம்.

பாதங்கொட்டையின்மீது மூடிக்கொண்டிருக்கும் தொலிவேறு, அதற்குள்ளாலிருக்கும் பருப்புவேறு. அதன்மீதுள்ள தொலியை பாதமென்று கூறமுடியுமா? அத்தன்மைபோல்தான் மனிதனின் வெளிரங்கமும் உள்ரங்கமுமிருந்து வருகிறது. ஆதலால் மனிதனின் வெளிரங்கமான சிங்காரிப்பு அழகைப் பார்த்து நல்லவனென தீர்மானித்துவிட முடியாது. அவனை சிரேஷ்டமானவெனக் கூறுவதற்கு அவனது அகசுத்திதான் பிரதானமாக இருக்கிறது. இதற்காகத்தான் அல்லாஹ்த ஆலா அவனது எண்ணங்களை நோட்டமிடுகிருன்.

அல்லாஹ்தஆலா நமக்குப் புரிந்திருக்கும் காருண்யங்களை எண்ணிப்பார்க்க நாம் நாடுவோமாயின் அவைகளைப் பூர்த்திசெய்ய நம்மால் முடியாது. வானம் பூமி இவைகளிலுண்டாயிருக்கும் யாவற்றும் அவனுடையதாயிருக்கும். ஆகவே, மக்கள் அவ்வல்லோனின் கட்டளையை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர். நமக்கு ஏதாகிலும் கஷ்ட சங்கடங்கள் நேர்ந்துவிடின் உடனே அல்லாஹ்தஆலாவின் பக்கல் முகத்தைத் திருப்பி அதைவிட்டு விடுதலையாக்க பிரார்த்திக்கிருேம். அல்லாஹ்தஆலா நம்மைவிட்டு அக்கஷ்டத்தை நீக்கியவுடனே அந்நன்றியை நாம் மறந்து அவனது கட்டளைக்கு மாறுசெய்ய முற்படுகிருேம். இது மக்களது சுபாவமாகயிருந்து வருகிறது. இச்சுபாவங்களைவிட்டு தூய்மையான மனதோடு அல்லாஹ்தஆலாவின் கட்டளையை நாம் நிறைவேற்றுவதிலீடுபடவேண்டும்.

ஆகவே, நாம் வெளிரங்க சிங்காரிப்பு, அழகு முதலியவைகளைக்கொண்டு நம்மை முஸ்லிம்களென்று கூறி பறைசாற்றிக் கொண்டிருப்பதைவிட அல்லாஹ் தஆலாவின் பார்வையிடமாகிய உள்ரங்க சுத்தியைக் கைகொண்டு அவ்வல்லோனின் அருந்தொண்டை உன்னத முறையில் நிறைவேற்றி பாக்கிய சாலியாய்த் திகழ்வோமாக.



ரமலான் நோன்பு

சத்திய சன்மார்க்கமாகிய இஸ்லாம் மதத்தின் முக்கிய முதற்கடமைகள் ஐந்தினுள் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றலும் ஒன்று. ரமலான் மாதத்தில் ஏன் நோன்பு வைக்கவேண்டும்? வேறு மாதத்தில் நோன்பு வைக்கக்கூடாதா? என்பதைக் குறித்து அநேகம் மேதாவிகள் பற்பல காரணங்களையும் நன்மைகளையும் கூறி இருக்கின்றனர். திருகுர் ஆனும் இதனைப்பற்றிக்கூறி இருக்கிறது. இந்த மாதத்தில் திருகுர் ஆன் அருளப்பட்டது. உலக மாந்தர் உய்ய, இம்மை மறுமைப் பேற்றினை அடைய இறைவனால் அருளப்பட்ட ஒப்பற்ற வேதங்களில் இக்குவலயத்தில் எவ்வித மாறுதலுக்கும் திரித்தலுக்கும் வயப்படாமல் இருந்து உலகினருக்கு வழி காட்டியாக நின்றிலங்குவது திருகுர் ஆன் ஒன்றேயாகும். யூதராகட்டும், கிறிஸ்துவராகட்டும், பின்னை எச்சமயத்தவராயினும் தங்களுள் ஒரு சீர்திருத்தத்தைச் செய்ய விரும்பினாலும் இதே திருகுர் ஆன் காட்டியுள்ள வழியையே அவர்கள் பின்பற்றவேண்டியதாக இருக்கிறது. திருகுர் ஆனைத் தங்களுக்கு வழி காட்டியாக வைத்துக் கொண்டிருப்பதாக முஸ்லிம்கள் மட்டிலும்தான் கூறிக் கொள்கின்றனர். ஏனைய சமூகத்தினர் இவ்வாறு வாய்மொழியாகக்கூற விரும்பமாட்டார்கள். என்றாலும், அது காட்டும் வழியில்தான் நடந்து கொண்டிருக்கின்றனர். ஆகவே, இன்றைய உலகுக்கு ஒப்பற்ற ஒரே வழி காட்டியாகவுள்ளது திருகுர் ஆனேயாகும். ஆகவே, அத்திருகுர் ஆன் அருளப்பட்ட மாதம் ஏனைய மாதங்களைப் பார்க்கினும் விசேஷமானதேயாகும். இந்த மாதத்திற்குரிய விசேஷத்தினாற்றான் இறைவன் நம்மனைவரையும் இம்மாதத்தில் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டுள்ளான்.

நன்மைப் பயனை அளிப்பதற்குரிய நற்காரியங்கள் பலவுள. அவைகளை வரையறை செய்யமுடியாது. ஆயினும், அவைகளில் கடமையாகவுள்ள காரியங்கள் மிகச் சிலவேயாகும். இச்சில கடமைகளில்நோன்புவைப்பதும் ஒன்று. நோன்பு நோற்றவருக்குள்ள கூலியை அல்லாஹு தஆலாவே நேரடியாகக் கொடுப்பான் என்பதாக ஹதீது ஷரீபுகளில் வந்திருக்கிறது. ஒரு எஜமான் தனது வேலைக்காரர்களுக்கு ஏவலாள் மூலமாக எத்தனை வெகுமதிகளை அளித்தாலும், அவ்வெஜமானன் நேரடியாக அவர்களைப் பாராட்டி மிகவும் அற்பமான வெகுமதியைக் கொடுப்பானாயின் அவனது வேலைக்காரர்களுக்கு அவ்வற்ப வெகுமதியால் ஏற்படும் சந்தோஷமும் திருப்தியும் அவ்வெஜமானனது ஏவலாள் மூலமாகக் கிடைக்கும் அதிகமான வெகுமதியில் ஏற்படமாட்டாது. இதுபோலவே, அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா தனது அடியார்களுக்கு நேரடியாக அளிக்கிற நோன்பின் பயனானது மற்றெல்லா நற்காரியங்களுக்கும் கிடைக்கிற நன்மைப் பயனைப் பார்க்கினும் மிகவிசேஷமும் சிறப்பும் பொருந்தியதாகும். நோன்பு வைப்பவர்கள் தங்களது சரீர இச்சையை அடக்குவ

தான்து மிகவும் சிரமமாகும். அல்லாஹு தஆலாவின் மீது பக்தியும் விசுவாசமும் பயமுமில்லாதவர்கள் நோன்பு வைக்க விரும்பமாட்டார்கள். தவிரவும் பிறரை மெய்ப்பிப்பதற்காக நோன்பு வைப்பவர்களும் மிகச்சுருக்கம். அவ்வாறே நோன்பு வைத்தாலும் நீண்ட காலத்திற்கு நோன்பு வைக்கவும் முடியாது. ஆகவே, நோன்பாளிகளிற் பெரும்பாலர் உண்மையோடுங்கூடிய பக்தியின் காரணமாகவே நோன்பு வைப்பதால் அல்லாஹு தஆலா அவர்களுக்கு நேரடியாக அதற்குரிய பயனை அளிக்கிறான். தவிரவும், நோன்பு வைப்பதால் தேகாரோக்யத்திற்கு மிகவும் உதவியுண்டாகுவதாக பிரபல டாக்டர்கள் கூறுவதுடன் குறிப்பிட்ட சில வியாதியஸ்தர்களுக்கு நோன்பு வைக்கும்படியும் ஆலோசனை கூறுகின்றனர். இந்நோயாளிகள் நூற்றுக் கணக்கான பணங்களைச் செலவு செய்து ஒளஷதங்களைச் சாப்பிட்டும் குணமடையாமல் நோன்பு வைத்ததன் மூலமாக ஆச்சரியப்படும் விதத்தில் குணமடைந்திருக்கின்றனர். ஆகவே நோன்பு வைப்பதென்பது வணக்கமாக இருப்பது மட்டுமில்லாமல் தேகாரோக்கியத்தை அளிப்பதாகவும் இருப்பதால் நோன்பு வைக்கக் கடமைப்பட்ட ஒவ்வொரு முஸ்லிம்களும் அண்மையில் வருகிற றமலான் மாதத்தின் நோன்பைத் தவறவிடாமலிருப்பார்களாக.

நமது சமூகத்தார் மற்றெல்லா சமூகத்தாரைப் பார்க்கினும் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதிற் சிறந்தவர்களென ஒரு காலத்தில் கியாதி பெற்றிருந்தனர். நம்மவர் உண்மையாகவே மார்க்க பக்தி கொண்டவர்களாகவும் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுபவர்களாகவும் இருந்த காலத்தில் நம்மைப் பிறர் நன்கு மதித்து, நமது அபிப்பிராயத்திற்குச் செவிகொடுத்துக் கொண்டிருந்தனர். ஆனல், நூதன ஆராய்ச்சி, நவீன அறிவு மக்களுக்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிறதென்னும் தாவா நடைபெறும் இக்காலை, நம்மவருக்கு மார்க்க பக்தி முன்போல் அதிகமாக இல்லை. தங்களது சுயநலத்திற்காகவோ இச்சைக்காகவோ மார்க்கக் கடமைகளை நிறைவேற்றும் விஷயத்தில் தங்கள் சுயநலத்தையும் இச்சையையும் புகுத்தி அக்கடமைகளை அசட்டை செய்து, பிறமதத்தாரைத் திருப்தி படுத்தும் நோக்கத்துடன் மார்க்கத்திற்காகாத காரியங்களையும்கூடச் செய்து விடுகின்றனர். இதன் பயனுக இக்காலத்தில் பிறமதத்தார் நமது மார்க்கக் கடமைகளைப் பற்றிக் குற்றங்குறைகளைக் கூறவும், மார்க்கானுஷ்டானங்களைத் திருத்திக் கொள்ளும்படி கட்டளையிடவும்கூடத் தைரியம்பெற்றுவிட்டனர். ஆகவே, முஸ்லிம்கள் தங்களது பழைய பெருமையையும் கண்ணியத்தையும் மீண்டும் அடைவதற்கு தக்கமார்க்கம் அவர்கள் தங்களது மார்க்க பக்தியை அதிகப்படுத்திக்கொள்வதேயாகும். இதனைக்கிரியாம்சையில் மற்றவர்கள் உணரவேண்டுமாயின் சத்திய இஸ்லாம் மதத்தில் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்கு ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடில்லாமல் யாவரும் கீழ்ப்படிந்து நடப்பதே மிகவும் முக்கிய சாதனமாகும். ஆகவே, வருகிற றமலான் மாதத்தில் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் யாவரும் நோன்பு நோற்று தங்களது மார்க்க பக்தியைப் புதுப்பித்துக் கொள்வதுடன் ஏனைய மார்க்கக் கடமைகளையும் தவருது நிறைவேற்ற வேண்டுமென்று பிரதிக்ஞை செய்து கொள்வார்களாக.

ஏனைய மதத்தினர் எத்தனையோ விதத்தில் இஸ்லாம் மதத்தின்மீது போர் தொடுத்திருக்கின்றனர். "அண்டிக் கெடுத்தல்" என்பது அப்போர் முறைகளில் ஒன்ருகும். இம்முறை இப்பொழுது பிறமதத்தாரால் மிகவும் அதிகமாகக் கையாளப்படுகிறது. இஸ்லாம்

மதம் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது; இஸ்லாம் மதத்தின் ஒவ்வொரு சட்டதிட்டங்களையும் கவனித்தால் உலக முன்னேற்றம் அடையமுடியாது; ஆகவே, கிறிஸ்துவர்கள் லௌகீகத்தையும் வைதீகத்தையும் பிரித்துவிட்டது போல முஸ்லிம்களும் வெவ்வேறாக பிரித்துவிட்டால்தான் அவர்கள் முன்னேற்றமடைய முடியும்; கிறிஸ்துவ மதத்தினராகிய ஐரோப்பியர் மதத்திற்கு முக்கியாம்சத்தைக் கொடுக்காமல் அதனைப் புறம்பே தள்ளிவிட்டதால்தான் இக்காலத்தில் உலக முழுவதையும் ஆட்சி புரிகின்றனர்; எங்கும் அவர்களது அதிகாரமும் செல்வாக்குமிருந்து வருகிறது என்பதாக ஒரு கோஷ்டியினர் முஸ்லிம்களுக்கு உபதேசிக்கின்றனர். இந்தியாவிலுள்ள சகோதர வகுப்பினர் தேசம் தான் முதலில், அப்புறம் தான் மதம் என்பதாகக் கூறிப்பிரசாரம் புரிகின்றனர். மதபக்தியுள்ளவர்களை அஞ்ஞானி என்றும், மூடக் கொள்கைக்காரன் என்றும் ஏளனஞ் செய்கின்றனர். இவ்விதமாக முஸ்லிம் அல்லாதார் பற்பல தோரணையில் முஸ்லிம்களை வழி கெடுக்க முயலுகின்றனர். உண்மையில் அன்னோர் தங்களது மதத்தை விட்டுவிடவுமில்லை, மதத்தை விட்டதால் முன்னேற்றமடையவுமில்லை. முஸ்லிம்களைக் கெடுப்பதற்காகவே இவ்வாறு வேஷம்போட்டுத் திரிகின்றனர். ஆகவே, இத்தகைய 'ஷைத்தான்'களுக்கு இரையாகாமல் நம்மவர் தங்களது சன்மார்க்கக் கடமைகளைக் குறைவர நிறைவேற்ற முன் வருவார்களாக. எல்லாம் வல்ல இறைவன் நம்மவர் செய்துவரும் சிறும் பெரும் பாவங்களை மன்னித்துத் தனது சன்மார்க்கத்தில் சீராக நடத்தி, நம்மவருக்கு இம்மை மறுமைச் சாதனங்களை நல்குவானாக—ஆமீன்.

ஷாம்தேச சுயேச்சை சரித்திரம்

துருக்கி உதுமானியா ஏகாதிபத்தியம் இருந்த காலத்தில் ஷாம்வாசிகள் அவ்வரசாங்கத்திற்கு அடிமைப்பட்டிருந்ததுபோல மகா யுத்தத்திற்குப் பிறகு பிரஞ்சுக்காரரின் ஆதிக்கத்தின்கீழ் அடிமைப்பட்டிருக்க நேர்ந்தது. இராக் தேசமும் மகா யுத்தத்திற்குமுன் துருக்கி ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டு மகா யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்டிருந்தாலும் சிலகாலத்திற்குப்பின், நல்லதோ கெட்டதோ எதேனும் ஒருவிதத்தில் ஒரு சுய அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. ஆனால், ஷாம்வாசிகள் இவ்வித ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்த நீண்டகாலம் வரை கஷ்டப்படவும் அநேகம் தியாகங்கள் புரியவும் வேண்டியதாக இருந்தது. அத்தேசம் இப்பொழுது பூரண சுயேச்சையுள்ள நாடாக இருந்தாலும் அங்கு இராக்கிலிருப்பதைப் பார்க்கினும் அதிகமான கஷ்டங்கள் இன்னமும் இருந்து வருகின்றன.

ஷாம் தேசம் துருக்கி ஏகாதிபத்தியத்தில் மிகச் சிறியதாகவுள்ள ஒரு மாகாணம். இயற்கையில் அது மிகச் சிறிய நாடாகும். இருந்தபோதினும் பிரஞ்சு அரசாங்கத்தார் அதனைப் பலபாகங்களாகப் பிரித்தனர். லப்னான் என்ற பிரதேசத்திற்கு ஆரம்பத்திலிருந்தே தனி அரசியல் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இப்பொழுது ஷாம் திருப்போலியையும், (ஆப்பிரிக்காவிலுள்ள திருப்போலி அல்ல—ப-ர்) ஜபலே ஆமிலையும் ஒன்றுசேர்த்து தனி அரசாங்கமாக "லப்னான் குடியரசு" என்ற பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வரசியல் திட்டப்படி ஷாம் திருப்போலியிலும், ஜபலேஆமிலிலுமுள்ள முஸ்லிம் பெரும்பான்மைக்கு மிகவும் அநீதி வழங்கப்பட்டது. அவர்களிலுள்ள

பெரும்பான்மை அந்தஸ்து மிகவும் பரிதபிக்கத் தக்க முறையில் மாற்றியமைக்கப்பட்டது.

டிரான்ஸ் ஜார்டோனியாவில் அமீர் அப்துல்லாஹ்வினது ஆட்சியின்கீழ் ஒருவிதமான அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. பாலஸ்தீனத்தை ஷாம்தேசத்தைவிட்டுப் பிரித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும், யூத ஆதிக்கத்திற்கும் தலைவணங்கும்படியாக அத்தேசம் விடப்பட்டது. இன்று ஷாம் தேசத்தில் எஞ்சியுள்ள பாகத்திற்கு சிரியா என்று சொல்லப்படுகிறது. இதுவும் துண்டுதுண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜபலுத்தரூஸ், பிலாதுல் உலுவ்வியீன் என்ற பெயர்களால் சிறுசிறு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய உடன்படிக்கையின்மூலமாக ஷாம் தேசத்தில் எஞ்சியுள்ள இப்பிராந்தியங்களுக்கு "சிரியா குடியரசு" என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதுதான் ஷாம் தேசத்தில் பிரஞ்சுக்காரர்களின் அரசியல் கொள்கை. இந்தக் கொள்கைதான் ஜனங்களை நெருப்புடன் விளையாடும்படிச் செய்துவிட்டது; தலைவர்களில் பெரும்பாலரை தேசப் பிரஷ்டம்செய்து பரதேசிகளாய் வாழவிட்டு வைத்தது.

ஷாம் தலைவர்களது 15 வருஷ தேசப் பிரஷ்டம்

ஷாம் தேசவாசிகள் சுயேச்சை அடைவதற்காக பலவித உபாயங்களைச் செய்தனர். எகிப்து, பாரிஸ், ஜினீவா, அமெரிக்கா ஆகிய இடங்களில் பிரசாரங்கள் செய்வதற்கான காரியாலயங்களை ஏற்படுத்தினர். எகிப்தில் ஷாம்வாசிகள் இதற்குமுன்பே ஏராளமாகக் குடியேறி இருந்தனர். ஸெய்யித் ரஷீத் ரிஜா, அப்துர் ரஹ்மான் ஷஹ்பந்தர், அஸ்அது கலீல், கைருத்தீன் ஜர்க்கலீ முதலிய தேசப் பிரஷ்டர்கள் எகிப்து தேசத்தில் ஷாம் தேசப் பிரசாரத்திற்குத் தலைவர்களாக இருந்தனர். அமரிக்காவிலுள்ள ஷாம் தேச அரபியரின் பிரயோஜனகரமான பிரசார ஆலயம் ஜினீவாவில் ஏற்படுத்தப்பட்டது. முஜாஹிதேஜலீல் அமீர் ஷக்கேப் அர்ஸலான், இஹ்ஸான்பேக்ஜாபிரி, ரியாஜ்பேக் ஸுல்ஹ், ஆகியவர்கள் ஜினீவாவில் "ஷாமி தூதுவர்கள்" என்ற பெயரால் நிரந்தரமாக வசிக்கத் தொடங்கினர். ஷாம் தேசத்திற்கும் இதர அறபி நாடுகளுக்கும் சுயேச்சை கிடைப்பதற்காகத் தொடர்ச்சியாக சென்ற 15 வருஷங்களாக இன்னோர் முயற்சிசெய்துகொண்டிருந்தனர்.

அமீர்ஷக்கேப் அர்ஸலானின் முயற்சிகள் ஷாம், இதர அறபிநாடுகள் வரைக்கும் மாத்திரம் இல்லாமல் இஸ்லாமிய உலகம் முழுவதற்காகவும், கீழ்நாடுகள் எல்லாவற்றிற்காகவும் இருந்துவருகிறது. இவர் செய்த இந்தக் "குற்றத்திற்காக" ஹிஜாஸ் ஒன்றைத் தவிர இதர கீழ்நாடுகளின் தலைவாசல் களெல்லாம் இவருக்கு அடைக்கப்பட்டுவிட்டன. எகிப்து தேசத்தில் இன்னமும்கூட அவர் பிரவேசிக்கக்கூடாது என்ற உத்தரவு இருந்துவருகிறது.

பிரான்ஸ் தேசத்திலுள்ள ராஜிய வாதிகளிடம் "தி அரப் நேஷன்" என்ற அவரது பிரஞ்சு வாரப்பத்திரிகையின் அபிப்பிராயத்திற்கு மிகச் செல்வாக்கிருந்துவருகிறது. இஹ்ஸான்பேக் ஜாபிரியின் செல்வாக்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவரது தியாகங்கள் நிகரற்றவை. ஷாமி தூதுவர்கள் ஜினீவாவில் சென்ற 15 வருஷகாலமாக தங்களுக்குள்ள எல்லாச் செலவுகளையும் தாங்களே சகித்துக்கொள்கிறார்கள் என்பதையும், அமீர்ஷக்கேப் அர்ஸலான் தமது சமஸ்தானத்தையும் பிரபுத்துவத்தையும்கூட தேசத்திற்காகவும் சமூகத்திற்காகவும் தியாகம் செய்துவிட்டார் என்பதையும் கேட்க, இந்திய முஸ்லிம்கள் ஆச்சரியமடைவர். இதனாற்றான் இப்பொழுது அத்தூதுவர்கள் ஷாம் தேசத்திற்கு வரும்போது ராஜோபசாரமாக வரவேற்கப்படுகின்றனர். மேலும் அமீர்ஷக்கேப்அர்ஸலான் "முடிசூடாமன்னர்" என்று அழைக்கப்பட்டு வருகிறார்.

தருஜிகளது யுத்தம்

தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட தலைவர்கள் எகிப்து, அமெரிக்கா, பாரிஸ், ஜினீவா முதலிய இடங்களில் பிரசாரம் செய்துகொண்டிருந்தார்களென்றால் நாட்டிலுள்ள வாலிபர்கள் சுதந்திர யுத்தத்தின் பின்னணியில் நிற்கவில்லை. சட்டப் பூர்வமாகவும், சட்ட விரோதமாகவும் பற்பல வழிகளிலும் பிரஞ்சு அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். பல முறை ரத்தக்களரிகள் நடந்தன. அநேகந் தடவைகளில் சமாதான உடன்படிக்கைகளேற்பட்டன. தேர்தல்கள் நடைபெற்றன. பார்லிமெண்டை தேசாபிமானிகள் கைப்பற்றினர். என்றாலும், அரசாங்கத்தின் நோக்கம் ஒரு நாளும்கூட எதிர்ப்பில்லாமல் சமாதானமாக நடைபெறுவதற்கில்லை. தீவிர வாதிகளது

தலைவர்கள், குறைவானதும் பூர்த்தியற்றதுமான அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அரசாங்கமும் தேசாபிமானிகளது கோரிக்கைகளைச் சுலபமாகச் செவியேற்றுக்கொள்ள விரும்பவில்லை. இராக் தேசத்தின் முன்னேற்றகரமான நிலைமையைப் பார்க்கப் பார்க்க ஷாம் தேசாபிமானிகளுடைய உணர்ச்சி மிக வேகமாகத் தூண்டப்பட்டது.

இறுதியாக சென்ற 1925-ம் வருஷக்கடைசியில் ஜபலுத்தரூஸிலுள்ள வீர அரபியர் சுதந்திரத்திற்காக யுத்தம் செய்யவேண்டும் என்று முடிவு செய்தனர். யுத்தத்தின் சங்கநாதம் மலையிலிருந்து ஒலித்தது. க்ஷண நேரத்திற்குள் ஷாம் தேசத்தின் எல்லாப்பிராந்தியங்களும் யுத்தகளமாக மாறிற்று. ஹிமாஹ், ஹலப், பஃலபக், கோத்தா முதலிய முக்கிய பட்டணங்களில் கடும்போர் நிகழ்ந்தது. அப்துர் ரஹ்மான் ஷஹ்பந்தர் எகிப்திலிருந்து ஒளிவு மறைவாக வந்து ஜபலுத்தரூஸிக்குள் நுழைந்தார். 22 வயதுள்ள வாலிபரான புவாத் ஸலீம்பேக் பாரிஸில் கல்வி பயின்றுக்கொண்டிருந்தவர் யுத்தந் தொடங்கிய செய்தியைக்கேட்டதும் மூட்டைக் கட்டிக்கொண்டு எகிப்து வந்தார். அங்கிருந்து கால்நடையாக ஹிமாஹ் நகரம் வந்துசேர்ந்தார். ஷஹாதத்து அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. யுத்தத்தில் அவர் பங்கெடுத்துக்கொண்டவுடன் மறு உலகுக்குச் சென்றுவிட்டார். அமீர் ஷக்கேப் அர்ஸலான் அவர்களால் சீரும்சிறப்புமாக வளர்க்கப்பட்ட அவரது இளைய சகோதரர் அமீர் ஆதில் அர்ஸலான் இந்த யுத்த வீரர்களுக்குத் தளகர்த்தராக இருந்தார். பூரணமாக ஒரு வருஷம் வரையில் ஷாம் தேசம் முழுதும் மஹ்ஷர் மைதானமாகிவிட்டது. படித்தவர் படியாதவர் யாவரும் சமமாகவே இதில் கலந்துகொண்டனர். இவர்கள் யாவருக்கும் பிரதம தளகர்த்தராக தரூஸிகளின் தலைவர் சுல்தான்பாஷா அத்ரஸ் என்பவர் இருந்து யுத்தத்தை நடத்தினர்.

56 மணி நேர குண்டுமாரியால் திமிஷ்கு அழிந்தது

நீண்ட நாட்களாகப் பிரஞ்சுப் பட்டாளங்களுக்கும் முஜாஹிதுகளுக்கும் பலத்த போராட்டம் நிகழ்ந்தது. தரூஸியரது தாக்குகைகள் பிரஞ்சு அரசாங்கத்தின் பல்லைப் பிடுங்கின. ஆகவே, வேறு வழியின்றி, நாகரீக முன்னேற்ற மடைந்த பிரஞ்சு அரசாங்கம் 'உரூஸுல்பிலாத்' என்று பெயர் விளங்கிய திமிஷ்கு நகரை அழித்துவிடவேண்டும் என்று முடிவு செய்து, திமிஷ்கு நகரவாசிகள் முஜாஹிதுகளுக்கு உதவி செய்தனர் என்ற குற்றத்தை அதன்மீது சாட்டிற்று. ஜலியன் வாலாபாக்கில் நடைபெற்ற படுகொலைகளை விட மும்மரமாய் 56 மணி நேரம் இடைவிடாமல் குண்டுகளைப் பொழியவாரம்பித்தது. 13 நூற்றாண்டுகளாக இருந்துவந்த ஞாபகச் சின்னங்களெல்லாம் அழிந்து தரைமட்டமாயின. ஆயிரக்கணக்கான குழந்தைகளும், கிழவர்களும், ஸ்திரீகளும் ஷஹீதானர்கள்; காயமடைந்தனர். நகரம் முழுதும் பிணக்காடாகமாறியது. பக்ரி முதலிய குலத்தவர்களது வானளாவிய மாளிகைகள் மண் குவியல்களாயின. குற்றமற்றவர்களைக் கொன்று ரத்த ஆறு ஓட்டியபின், எஞ்சிய அரபிக்கூட்டத்தார் மீது பிரஞ்சுக்காரர்களது ஒரு லக்ஷம் போர் வீரர்கள் வெற்றிக்கொண்டார்களாயினும், நாகரீகத்தைப் போதிப்பவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் பிரஞ்சுக்காரர்களுக்கு இஃது பெருமையையளிக்கக்கூடியதாக இருக்கவில்லை.

ராஜதந்திர முயற்சி

இந்த யுத்தம் முடிவடைந்தபின் சுல்தான் பாக்ஷா அத்ரஸும், இதர தலைவர்களும் நஜதுக்குப் பக்கத்திலுள்ள பாலைவனத்தில் குடியிருக்கத் தலைப்பட்டனர். வாளாயுதத்திற்குப் பதிலாக ராஜதந்திர முறைப்படி மறுபடியும் யுத்தம் ஆரம்பமாயிற்று. அநேகம் மந்திரிச் சபைகள் ஏற்பட்டன. ஒப்புக்கொள்ளத் தகாத அரசியல் திட்டம் பாஸாயிற்று. அரசாங்கப் பிரகடனம் வெளியிடப்பட்டது. என்றாலும், ஷாம் வாசிகளது கோரிக்கை மட்டிலும் இடைவிடாமல் வற்புறுத்தப்பட்டே வந்தது. ஷாம் தேசத்தின் சிதறுண்டுபோன அதன் பிரதேசங்களெல்லாம் ஒன்று சேர்க்கப்படவேண்டும், இராக் உடன்படிக்கையைப் போல ஷாம் தேசத்துடனும் சமத்துவ உடன்படிக்கை ஏற்படவேண்டும் என்பது ஷாம் தேசவாசிகளது கோரிக்கை. ஆனால், அரசாங்கம் இதற்குச் சம்மதிக்கவில்லை. சில சுயநலமிகளுக்கும் துரோகிகளுக்கும் மந்திரிப் பதவி களளிக்கப்பட்டிருந்தன. ஆனால், தேசம் அவர்களைப் பூரணமாகப் பகிஷ்கரித்துவிட்டது. பெயரளவிலுள்ள குடியரசின் மாஜிதலைவரான

தாஜுத்தீன் ஹஸனீ என்பவர் பேருத்திற்கு உல்லாச யாத்திரை சென்றபோது எந்த அரபி ஹோட்டலும் அவருக்குத் தங்க இடங் கொடுக்கவில்லை.

இராக் தேசம் சர்வதேச சங்கத்தில் ஒரு அங்கமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதைக் கண்டவுடன் ஷாம் தேசத்தின் சுதந்திர இயக்கம் இன்னும் பலமாக வீறுகொண்டெழுந்தது. அரசாங்கத்திற்கும் தேசாபிமானிகளுக்கு மிடையில் பலமுறை போராட்டங்கள் ஏற்பட்டன. அரஸ்டுகள் செய்யப்பட்டன. ஷாமி காங்கிரஸ் (அல்கதாலத்துல் வத்தனிய்யா) சபையின் காரியாலயத்தில் போலிஸ் பாரா ஏற்படுத்தப்பட்டது. இன்னும் பலவிதமான அடக்குமுறைகள் நிகழ்ந்தன. என்றாலும், ஷாம் வாசிகளது உறுதியும் கோரிக்கையும் கொஞ்சமும் தளரவில்லை.

கடைசி முயற்சி

அரசாங்கம் தேசத்தின் கோரிக்கையை அங்கீகரிப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படாததால் கடைசியான முயற்சி என்பதாக தேசியவாதிகள் பரிபூரண வேலைநிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். எல்லாத்தொழில்களும் நின்றன. ஸ்கூல், காலேஜ், மத்ரஸா எல்லாம் காலியாக இருந்தன. அரசாங்கம் பலத்தை உபயோகிக்க விரும்பிற்று. பெயரளவிலுள்ள குடியரசுத் தலைவர் லக்ஷம் முகமன் கூறிப்பார்த்தார். ஒரு கடையேனும் திறக்கப்படவேண்டும் என மன்றாடினர். என்றாலும் அவரது முயற்சி தோல்வியடைந்தது. தலைவர்களைத் தேசப்பிரஷ்டம் செய்தல், கைதிசெய்தல் முதலியவைகளால் எதிர்ப்புதான் அதிகமாகிக்கொண்டிருந்தது. இறுதியாக பிரஞ்சு அரசாங்கம் ஷாம் வாசிகளது கோரிக்கைகளை அங்கீகரிப்பதாக வாக்களித்தது. ஜினீவாவிலிருந்து அமீர் ஷக்கேப் அர்ஸலான் பாரிஸுக்குச்சென்றார். தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட ஷாமித் தலைவர்களெல்லோரும் பாரிஸுக்கு அழைக்கப்பட்டனர். போதியளவு விவாதங்களும் பரிசீலனைகளும் நடந்தபிறகு, ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்பிரகாரம் ஷாம் தேசத்திற்கு சர்வதேச சங்கத்தில் அங்கமாகச் சேர்ந்துகொள்ள உரிமையும் உள்நாட்டுச் சுதந்திரமும் கிடைத்தன. இந்த உடன்படிக்கை இராக், எகிப்து உடன்படிக்கைகளைப்போலிருக்கிறது. ஷாம் தேச உடன்படிக்கையில் பிரஞ்சுக்காரர்களுக்கு விசேஷ உரிமைகள் சேர்க்கப்பட்டிருந்தாலும், இதன்மூலமாக தேசத்திற்கு சுயேச்சை ஏற்பட்டுவிட்டது. சென்ற வருஷம் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது நேற்றுவரை கலகக்காரர்களாக இருந்தவர்கள் அரசாங்க அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டனர். ஜமீல் மர்தம் பேக் என்பவர் முதல் மந்திரியானார். பழைய தேசப்பிரஷ்டர்களெல்லோரும் ராஜோபசாரத்துடன் சுதேசத்திற்கழைத்து வரப்பட்டனர். சுல்தான் பாஷா அத்ரஷும் அவர் துணைவர்களும் மிக ஆடம்பரமாக அழைத்துவரப்பட்டனர். ஜபலுத்தரூஸ் என்ற பெயர் "ஜபலுல் அறப்" என்று மாற்றப்பட்டது. ஷாம் திருப்போலியும் பிலாதுல் உலுவிய்யியுடன் இணைக்கப்பட முயற்சி நடைபெற்றுவருகிறது. என்றாலும், டிரான்ஸ் ஜார்டோனியாவும் பாலஸ்தீனமும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு அரபி அரசாங்கம் நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணம் இன்னமும் இருந்து வருகிறது. இவ்விஷயத்தில் பெருந்தடையாக இருப்பது பாலஸ்தீனத்திலுள்ள நிலைமை பயங்கரமானதாக மாறிக்கொண்டு வருவதுதான். இதனைப்பற்றி இனியொரு சமயம் எழுதுவோம்.

சந்தா நேயர்கட்கு !

நமது நேயர்களிலநேகர் இதுவரை சந்தா சேலுத்தாமலே இருந்து வருகின்றனர். ஆகவே அன்பர்கள் தங்கள் பாக்கிகளை தாமதமின்றி உடனே அனுப்பி வைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இந்த நவம்பர்மீ கடைசிக்குள் சந்தா சேலுத்ாதவர்களுக்கு அடுத்த டிசம்பர் மாதப்பிரதி வி. பி. யில் அனுப்பி வைக்கப்படுமென தேரிவித்துக்கொள்கிறோம்.

ஹாஜிகளுக்குப் புதிய கப்பல் "அல்மதீனா"

இந்தியாவின் ஹை கமிஷனரான ஸர் பைரோஜ்கான் நூன் என்பவர் சென்ற செப்டம்பர் மாதத்தில் "அல்மதீனா" என்ற கப்பலை கிளாஸ்கோ நகரில் சமுத்திரத்தில் இறக்கிவிட்டார். இக்கப்பல் 4 ஆயிரம் டன் எடையுள்ளது. ஹாஜிகளை ஏற்றிச் செல்வதற்கென்றே சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் இக்கப்பலைக் கட்டுவித்தார்கள். இதில் 850 பிரயாணிகளுக்கு வேண்டிய இடவசதிகளிருக்கின்றன.

கப்பல்களைக் கடலில் முதல் முதலாக இறக்கிவிடும்போது மதுபானமுள்ள பாட்டிலை உடைப்பது வழக்கம். இவ்வழக்கத்திற்கேற்ப மது நிறைந்த ஒரு பாட்டில் வைக்கப்பட்டிருந்தது. ஆயினும், இந்தியா ஹை கமிஷனர் ஸர் பைரோஜ்கான் நூன் மதுவை உபயோகிப்பது ஷைத்தானிய வேலையாக இருப்பதால் ஹாஜிகளை ஏற்றிச்செல்லும் புனித வேலையை நிறைவேற்றும் இக்கப்பலுக்கு இந்தச் சடங்கை நிறைவேற்றக்கூடாது என்று கூறியதன்பேரில் மதுவுள்ள பாட்டில் அகற்றப்பட்டது. அது பொழுது ஸர் பைரோஜ்கான் உருக்கமான ஒரு பிரசங்கம் புரிந்தார். இந்தியர்கள் கப்பலோட்டும் தொழிலை விருத்திசெய்யவேண்டுமென்றும், தாய்நாட்டைப் பலப்படுத்தவேண்டுமென்பதை தேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும் விரும்புவர் என்றும், ஆதலால் இந்தியர்களும் தங்களது தாய்நாட்டின் நலங்கருதி இத்தொழிலை மிகவும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன், சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் அதிவிரைவில் முன்னேற்றமடைந்து வருவதைப் பிரஸ்தாபித்து இந்தக் கம்பெனியின் தொழில் மிக விசாலமாக இருப்பதால் இது அதிக முன்னேற்றமடையும் என்பதற்கு ஆதாரமாக இருந்தபோதிலும் இந்திய கம்பெனிகள் பிரிட்டிஷ் கம்பெனிகளுடன் போட்டிபோடவேண்டிய அவசியமேற்படாதென்றும், இந்தியாவின் கப்பல் வர்த்தகம் முப்பது சதவிகிதம் அந்நிய தேசக்கொடிகளை ஏந்திச்செல்லும் கப்பல்கள் மூலமாக நடைபெறுவதால் பிரிட்டிஷ் கம்பெனியுடன் போட்டியிடாமலே இந்தியக் கப்பல் தொழில் விருத்தியடைய இடமிருக்கிறதென்றும் குறிப்பிட்டார். தமது முடிவுரையில் சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியாரின் "அல்மதீனா" என்ற இந்தக் கப்பல் ஹாஜிகளுக்கும் கம்பெனி சொந்தக்காரருக்கும் நன்மையை நல்குவதாக இருக்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்தார். இக்கம்பெனியார் இன்னும் நான்கு கப்பல்களைக் கட்ட ஆர்டர் கொடுத்திருப்பதாகவும் அவைகள் கட்டப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இக்கப்பலின் சில விசேஷங்கள்

ஹஜ்ஜுக்குச் செல்லும் இதர கப்பல்களைப் பார்க்கினும் இது அதிக வேகமுள்ளதென்றும், 5 நாட்களில் ஜித்தா போய்ச்சேர்ந்துவிடும் என்றும் ஷை கப்பல் சொந்தக்காரர்கள் அறிவிக்கிறார்கள். பிரயாணிகளுடைய வசதியையும் சௌகரியங்களையும் விசேஷமாகக் கவனித்து அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கப்பலில் தேவையான அளவிற்கு ஏராளமான ஜலம் கொடுக்கப்படும். மூன்றாவது வகுப்பு அதாவது டெக் பிரயாணிகளுக்கு காற்று, வெளிச்சம் ஆகியவைகளுக்குத் தக்கவசதிகளும் மின்சார விசிறியுங்கூட மூன்றாம் வகுப்பில் ஏற்படுத்துப்பட்டிருக்கின்றன. பிரயாணிகளுக்கு அவர்களுக்கு வேண்டிய சுவையுள்ள உணவு கிடைக்கும். ஸ்திரீகளுக்கு மலஜலஉபாதைகளுக்குச் செல்லவும் குளிக்கவும் பிரத்தியேகமான கக்கூஸ்களும் குளிக்குமிடங்களும் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. இமாம் ஜமாஅத்தாகத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக தனி இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. தவிரவும், ஹாஜிகள் மத சம்மந்தமாகவும் இதர விஷயங்களைக் குறித்தும் அநேகம் விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்காக வாசகசாலையும் புத்தகாலயமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தவிரவும் ஹாஜிகளது வசதிகளையும் சௌகரியங்களையும் கவனித்து அவர்களுக்கு வேண்டிய உதவி புரிவதற்காக பொறுப்புள்ள கனவான்களை இக்கம்பெனியார் கப்பலுடன் அனுப்புவார்கள். இவ்வாறான சௌகரியங்கள் இக்கப்பலில் அமைந்திருக்கிறதென கம்பெனியார் குறிப்பிட்டிருக்கின்றனர்.

துருக்கி, ஈரான் அரசாங்கங்களின் மார்க்க பக்தி

கெட்ட பேச்சுக்களைக் கவனமாகக் கேட்டு அதன்படி நடப்பதும், நல்ல பேச்சுக்களைக் காதில்போட்டுக் கொள்ளாதிருப்பதும், அதன்படி நடக்காதிருப்பதும் நம்மவருக்கு வழக்கமாக இருக்கிறது. துருக்கி ஈரான் அரசாங்கங்களைப்பற்றித் தவறான செய்திகளை இந்திய முஸ்லிம்களிடம் பரவச் செய்வதில் ஹிந்துக்களுடையவும் ஆங்கிலேயர்களுடையவும் பத்திரிகைகள் எப்பொழுதும் சிரத்தை காண்பித்து வருகின்றன. ஆனால், இப்பொழுது அவ்வரசாங்கங்களைப்பற்றிய இரண்டு சுபச்செய்திகள் வந்திருக்கின்றன. இச்செய்திகளை லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் அங்கோரா நிருபர் பின்வருமாறு அறிவித்திருக்கிறார் :—

'மக்ரிப்' தொழுகைக்காக சீட்டி அடிக்கப்பட்டவுடன் ராணுவத்தினர் தொழுகைக்காக அணியணியாய்வந்து நிற்கத் தொடங்கினர். ஆனால், சில சிப்பாய்கள் உளுச்செய்வதாகப் பாவனை செய்துகொண்டு இங்குமங்கும் ஒதுங்கித் தொழுகைக்கு வராமலிருந்தனர். துருக்கியரின் தந்தையான முஸ்தபா கமால் பாஷா தொழுகை முடிந்தவுடன் ஜெனரல் இஸ்மத் பாஷாவிடம் இதனைக் குறித்துச் சம்பாஷணை செய்து "தொழுகை ராணுவக் கட்டளைகளில் சேர்ந்தது ; ஆகவே, தொழுகைக்கு வராமலிருக்கிற சிப்பாயிடம் இரட்டிப்பு டிரில் வாங்கப்படும் ; இதுதான் அவர்களுக்குரிய தண்டனை" என்பதாக ஒலிபரப்பும் கருவியின் மூலம் அந்த இடத்திலேயே கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தார்.

துருக்கி குடியரசுத் தலைவர் காஜீ முஸ்தபா கமால் பாஷா இவ்விதமான உத்தரவு பிறப்பித்தார் என்று மட்டும் நினைக்க வேண்டாம். ஈரான் தேசத்தை ஆட்சிபுரியும் முஸ்லிம் அரசாங்கம் இவ்விஷயத்தில் பின்னடைந்திருக்கவில்லை. அவ்வரசாங்கத்தின் தலைவரான ரிஜாஷாஹ் பஹ்லவீ என்பவர் பிறப்பித்த உத்தரவு வருமாறு: இவ்வுத்தரவு "புதிய ஈரான்" என்ற பத்திரிகையில் பின்வருமாறு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது :—

"கல்வி இலாக்கா மந்திரிச் சபையால் நியமிக்கப்படும் ஒரு கமிட்டி திருகுர் ஆனை பார்ஸி பாஷையில் மொழி பெயர்க்கவேண்டும். இக்கமிட்டியில் பல உலமாக்கள் கலந்திருக்க வேண்டும். இந்த மொழி பெயர்ப்பு அரசாங்கத்தாரால் நடத்தப்படும் ஸ்கூல்களிலும் அரசாங்கத்தாரால் நடத்தப்படாத ஏனைய ஸ்கூல்களிலும் போதிக்கப்படவேண்டும். எவர் திருகுர் ஆனைப்படிக்காமலும், திருகுர்ஆன் சட்டங்களை அறியாதவராகவும் இருக்கிறாரோ அவருக்கு அரசாங்க உத்தியோகப் பதவி எதையும் அளிக்கக்கூடாது. ராணுவத்திலுள்ள முஜ்தஹிதுகள் தினந்தோறும் மாலையில் இந்த திருகுர் ஆன் மொழி பெயர்ப்பை சிப்பாய்களுக்குக் கற்பிக்க வேண்டும். முதலில் மத சம்மந்தமான ஸ்கூல்களில் குர் ஆன் அல்லது அதன் மொழி பெயர்ப்பைப் போதிக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதனால் உத்தேச பலன் பூர்த்தியாகக் கிடைக்கவில்லை. ஆதலால், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள முஸ்லிம் வாலிபர்கள் மேலே எழுதப்பட்ட விபரத்திலடங்கிய சம்பவங்களை நன்கு கவனிப்பார்களாக. முஸ்லிம்களது ஜீவியத்தின் இரகசியம் மூன்று வார்த்தைகளுக்குள் அடங்கி இருக்கிறது. இம்மூன்றும் திருகுர் ஆன், தொழுகை, வாள் ஆகியவைகளேயாகும் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் உணரவேண்டும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது காலத்தில் இம் மூன்றும் ஒருங்கே அமைந்திருந்தன. ஆதலால், முப்பது வருஷகாலத்திற்குள் உலகம் முழுவதும் முஸ்லிம்களது காலடியில் இருந்தது. இப்பொழுது துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய தேசங்களில் இதே மூவகைச் சக்திகளும் மறுபடியும் முஸ்லிம்களிடம் ஒன்று சேர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு அர்த்தம் என்னவெனில், இனி முஸ்லிம்களுக்கு வெற்றியின் காலம் அண்மையில் நெருங்கிவந்துகொண்டிருக்கிறது என்பதுதான். இனி ஐரோப்பா மரித்துவிடும். இஸ்லாம் ஜீவியமடைந்துவிடும். வாருங்கள், இந்தியாவிலும் இஸ்லாத்தின் இப்புதிய திட்டத்தை வரவேற்பதற்காக வேண்டிய முஸ்திப்புகளைத் தயார் செய்வோம். சத்தியத்தையே கோஷிப்போம். குர்ஆன் வாழ்க, தொழுகை வாழ்க.

மதத்தின்மீது பாய்ச்சல்

தற்போதைய இந்திய ராஜீய உலகில் ஜனங்களுக்கு மதத்தின்மீது துவேஷமும் தப்பெண்ணமும் உண்டாகும்படிச் செய்வது தனி ஒரு இயக்கமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்தினால் ஹிந்துக்களுக்கு எவ்வித நஷ்டமுமில்லை. ஏனெனில், ஹிந்துக்களுக்கெனப் பிரத்தியேகமான மதக்கொள்கையோ சட்டமோ இல்லை. அவர்களுக்கு ஜனக்கூட்டம் மட்டிலும்தான் இருந்து வருகிறது. கிறிஸ்துவர்களுக்கும் இதனால் எவ்வித நஷ்டமுமில்லை. ஏனெனில், அவர்களது மதம் பெரும்பாலும் உலகாதாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. முஸ்லிம்களது மதமோ இம்மை, மறுமை இரண்டையும் பொதிந்ததாக இருந்துவருவதால், இவர்களுக்குத்தான் இந்த இயக்கத்தால் அதிக நஷ்டமேற்படுகிறது.

மதம் என்ற பெயர் பொதுப்பெயர். இதில் நல்லது, கெட்டது, சத்தியமானது, அசத்தியமானது ஆக எல்லாவிதமான மதங்களுக்கும் இந்தப் பெயர் சொல்லப்படுகிறது. தற்போதுள்ள மதங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது தற்காலமுள்ள மனிதருக்குத் திருப்தியளிக்கக்கூடியனவாயில்லை. அதிருப்தியடைந்தவர்கள் அந்தந்த மதங்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்வது ஒருவகையில் சரியேயாகும். என்றாலும், சில சாமான்ய முஸ்லிம்கள் இக்கிளர்ச்சியைப் பார்த்துத் தாங்களும் இஸ்லாம் மதத்திற்கு விரோதமாகப் பேச வாரம்பித்திருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

மதத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்பவர்கள் மதத்தின்மீது குறை கூறும்போது, நல்லதையும் கெட்டதையும் பாகுபாடுசெய்து பிரித்துக் கூறுகிறார்களில்லை. எல்லா மதங்களையும் ஒரே தடிகொண்டே வளாசுகின்றனர். இவ்வாறு செய்வது நீதிக்கு ஏற்றதல்ல. மிகப்பெரிய அநீதியும் தவறுமாகும். தவிர, மதத்தைப்பற்றிக் குற்றங் கூறுபவர்கள் மதக்கோட்பாடுகளை எடுத்துக்கூறி அதிலுள்ள குறைகளைக் கூறுவதில்லை. அம்மதத்தைப் பின்பற்றியவர்கள் செய்யும் தீயகாரியங்களையும் நடத்தைகளையுமே கூறி, மதத்தின் கோட்பாடுகள் தீயனவாக இருப்பதால்தான் அவர்கள் இப்படிச் செய்கின்றனர் என்று கூறுகிறார்கள். முஸ்லிம்களில் ஆயிரக்கணக்கானவர்கள் மதுபான மருந்துகிறார்கள் என்று விவாதத்திற்காக ஒப்புக்கொள்வோம். இஸ்லாம் மதம் மதுபான மருந்துவதை அனுமதிக்கவில்லை. ஆகவே, முஸ்லிம்கள் மதுபானமருந்துவதால் இஸ்லாம் மதத்தைத் தோஷம்கூறுவது நியாயமாகுமா? மதம் தனது கோட்பாடுகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவைகளுக்கு மட்டிலும்தான் பொறுப்பாளி. ஒரு மனிதர் அதன் சட்டதிட்டங்களையும் கோட்பாடுகளையும் பின்பற்றி நடக்கவில்லையானால் அது மதத்தின் குறையன்று. ஆகவே, மதத்தைவிட்டு விலகிக்கொண்டவர்கள் செய்யும் தீய காரியங்களுக்கு மதத்தின் சட்ட திட்டங்களின்மீது குறை கூறுவது நீதிக்கு முற்றிலும் விரோதமானது.

மதத்தின்மீது குற்றங்குறை சொல்லி அதனைப் பரிசீலனை செய்வதற்கு நேர்மையான முறை மதத்தின் சட்டதிட்டங்களை ஆராய்வதேயாகும். அச்சட்ட திட்டங்களிலுள்ள குறைகளை எடுத்துக்கூறி அவைகளைப் பார்க்கினும் சிறந்த முறைகளை ஜனங்களிடம் சமர்ப்பிக்கவேண்டும். மதத்தின் மூலாதாரமான சட்டங்களைப்பற்றி ஆராய்வதுமில்லை, அவைகளைப் பார்க்கினும் சிறந்ததான சட்டங்களை ஜனங்களுக்குக் கூறுவதுமில்லையானால் மதத்திற்கு விரோதமாகக்கூச்சலிடுவதற்கும், ஆக்ஷேபனை செய்வதற்கும் அர்த்தமேயில்லை.

இரு ஹிந்துத் தலைவர்களது பிரசங்கங்கள்

சில தினங்களுக்குமுன் லாகூரிலுள்ள அபேதவாத வாலிபர்களது லிட்டரரி சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் லாகூர் பாரிஸ்டர் டாக்டர் நந்துலாலும் மிஸ்டர் கோஸ்லாவும் பிரசங்கம் புரிந்தனர். டாக்டர் நந்துலால் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

"மதம் இல்லாமல் மனிதன் முன்னேற்ற மடைய முடியாது என்ற அபிப்பிராயம் தவறானதென்பது ருஜுவாகிவிட்டது. மதங்களை ஏற்படுத்திய அநேகம் பெரியார்களது எண்ணம் களங்கமற்றது என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், அவர்களது போதனைகளால் ஏற்பட்ட பலன்களையும், இப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருக்கிற பலன்களையும் கவனிக்கும்போது மதம் மனிதத்தன்மையைத் துண்டு துண்டாகப்பிரித்து அதனை அழித்து நாசமாக்கி விட்டது என்றும், மனித வர்க்கத்திற்கு இனி என்றென்றுமே ஈடு செய்யமுடியாதவாறு அவ்வளவு அபாரமான நஷ்டத்தை அவைகள் உண்டாக்கிவிட்டனவென்றும் தைரியமாகக் கூறலாம். இதனை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. மனிதத்துவம் என்ற சபையைவிட்டு மதத்தைக் காதைப் பிடித்து வெளியேற்றி, அதன் பெயர் நாமம் கூட இல்லாதவாறு அழித்து விடவேண்டியகாலம் வந்துவிட்டது."

மிஸ்டர் கோஸ்லால் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு :—

"மதம் மனித மூளையில் ஏற்பட்டுள்ள ஒரு ஏமாற்றத்தைத் தவிர வேறு இல்லை. கடவுள் இருப்பதாக எங்கும் காணப்படவில்லை. மனிதனிலுள்ள மூட எண்ணமானது கடவுள் ஒருவன் உண்டு என்பதாக இட்டுக் கட்டிக்கொண்டிருக்கிறது. மாறுபாடடைந்து வருகிற காலத்தைத் தழுவி மதமும் மாறுபாடடைவதில்லை. அது எப்பொழுதும் ஒன்றுபோல உறைந்திருக்கிறது. இப்பொழுது ஹெர் ஹிட்லரின் ஆட்சி நடைபெறுகிற ஜெர்மனியில் இயேசுநாதர் மறுபடியும் பிறப்பாராயின் அவர் மறுபடியும் சிலுவையிலறையப்படுவார் என்பது உறுதி. ஆனால், இந்த முறை அவர் கிறிஸ்துவ மதத்தின் பெயராலேயே தூக்கிலிடப்படுவார். இந்தியாவிலுள்ள தற்போதைய கஷ்டங்களுக்கும் தொந்தரவுகளுக்கும் முழுப் பொறுப்பு மதத்தின் மீதுதான் ஏற்படுகிறது. இந்த மதம் ஸயன்ஸினுடையவும் யுக்தியினுடையவும் பரிசீலனையைத் தாங்க முடிவதில்லை. இப்பொழுது மதத்திற்குச் செல்வாக்கு குன்றிவிட்டது. அதன் உயிர் அதன் உடலத்தை விட்டு நீங்கிவிட்டது. அதனுடைய சவத்திலிருந்து துர்நாற்றம் கிளம்பிவிட்டது. வாருங்கள், நாம் எல்லோரும் சேர்ந்து அதனை மண்ணுக்குள் புதைத்து விடுவோம்."

டாக்டர் நந்தலாலின் பிரசங்கத்தில் மதம் மனிதத்துவத்தை துண்டு துண்டாகப் பிரித்து விட்டது என்று சொல்லப்பட்டது. ஹிந்து தர்மம் அல்லது கிறிஸ்துவ மதம் இவ்வாறு செய்திருக்கக்கூடும். ஆனால், இஸ்லாம் அவ்வாறு செய்யவில்லை. இஸ்லாம் மதம் மனிதத்துவமனைத்தையும் ஒன்று சேர்த்திருக்கிறது. மனிதவர்க்கம் முழுவதும் ஒரே சமூகம் என்பதாகவே முடிவு செய்திருக்கிறது. இஸ்லாம் மதம், குலம், வம்சம் ஆகியவைகளுக்கிடையிலிருந்த வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் ஒழித்துவிட்டது. பாஷையின் மூலமாக ஏற்பட்டுள்ள வித்தியாசத்தை அழித்தது; தேசம் நாடு என்ற பாகுபாட்டைத் தூரமாக்கிவிட்டது; நிறம், உதிரம் ஆகியவைகளாலேற்படுத்தப்பட்டிருந்த வித்தியாசத்தை இல்லாமலாக்கி விட்டது. டாக்டர் நந்தலால் திருகுர்ஆனை நன்கு படித்திருப்பாராயின் இஸ்லாம் மதம் சம்பந்தமாக இவ்வாறு கூற முன்வரவே மாட்டார் என்பது திண்ணம். திருகுர்ஆனிலுள்ள 'ஸூறத்துல் அன்பியா' என்ற அத்தியாயத்தில் எல்லா நபிமார்களையுப்பற்றியும் சுருக்கமாக விபரித்துக் கூறப்பட்டு மனித உலகிற்கு "நிச்சயமாக உங்களுடைய இந்த வர்க்கம் ஒரே ஒரு வர்க்கம்தான்" என்று வரையப்பட்டு மனிதர்கள் அனைவரும் ஒரே வர்க்கத்தினர் என்பதை உபதேசிக்கப்பட்டுளது.

இதுதான் இஸ்லாத்தின் கோட்பாடு. இஸ்லாம் மதத்தில் பிராமணன், அபிராமணன், வெள்ளையன் கருப்பன், இந்தியன் சீனன், தீண்டப்படாதவன், தீண்டப்படுபவன் என்ற பாகுபாடு நடைமுறையிலும் இல்லை. நீங்கள் உலகில் எந்த மூலைமுடுக்குக்கு வேண்டுமானாலும் சென்று, அங்குள்ள ஒரு முஸ்லிமை அழைத்து நீர் யார்? என்று வினவிப் பாருங்கள். "நான் முஸ்லிம்" என்றுதான் பதில்வரும். உலகம் முழுவதிலும் முஸ்லிமாகவுள்ள எவரிடம் கேட்டாலும் இந்த பதிலைத்தவிர வேறு பதிலைச் செவியிலேற்றுக் கொள்ளமுடியாது. தன்னை அவர் தீண்டத்தகாதவர் என்றோ, ராஜபுத்திரர் என்றோ, அல்லது வேறு ஒரு குலப் பெயரையோ கூறமாட்டார். குடும்பம், வம்சம், ஜாதி ஆகியவை சம்பந்தமான பெயர் சொல்லவே மாட்டார். எல்லா முஸ்லிமும் ஒரே வார்த்தையைத்தான் கூறுவர். இந்த ஒரு காரணமே

"இஸ்லாம் மதம் மனிதவர்க்கத்தை அழிக்க வராமல் அதனை இணைக்கவே வந்திருக்கிறது" என்பதற்குப் போதுமானது.

மிஸ்டர் கோஸ்லாவிற்கு கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதுகூடச் சந்தேகத்திலிருக்கிறது. இன்றுவரை ஒருவரும் தனது நேத்திரக்கண்ணால் கடவுளைப் பார்க்கவில்லையாம். ஆதலால், கடவுள் இல்லவே இல்லை என்று சாதிக்க முன்வந்துவிட்டார். இவரது வாதம் மிகவும் நூதனமானது. மூடத்தனமுள்ளது. இரண்டு பொருள்கள் ஒன்றுடன் ஒன்று உரைவதால் மின்சாரசக்தி எவ்வாறு உண்டாகின்றது? ரோஜாவில் வாசனை எப்படி வந்தது? பூமி ஏன் சுற்றிவருகிறது? இவைகளைப்பற்றிய விபரம் கண்ணுக்குப் புலப்படுகிறதா? இவைகள் கண்ணுக்குப் புலப்படாததால் இவைகளை இல்லை என்று அடியுடன் மறுத்துவிடக்கூடாதா? இவர் ஏன் இவைகளை மறுப்பதில்லை என்று நாம் வினவுகின்றோம்.

காலம் மாறுபடுவதுபோல மதம் மாறுபடுவதில்லை என்பது மிஸ்டர் கோஸ்லாவின் மற்றொரு குற்றச்சாட்டு. அவசியம் ஏற்படும்போது மதத்தில் மாறுதல் ஏற்படவேண்டுமா அல்லது அவசியமில்லாதிருக்கும்போதே மாறுதலை ஏற்படுத்தவேண்டுமா என்று மிஸ்டர் கோஸ்லாவை வினவுகின்றோம். தவிரவும், தீங்காக இருக்கிற காரியத்தைமாற்றி நன்மையான காரியத்தை அமைக்கவேண்டுமா? அல்லது நன்மையான காரியத்தை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக தீமையான காரியத்தை ஏற்படுத்தவேண்டுமா என்றும் வினவுகின்றோம். உதாரணமாக, உண்மையே பேசவேண்டும், கஷ்டப்படுவோருக்கு உதவி புரியவேண்டும், எல்லோரிடமும் நீதியாக நடந்துகொள்ளவேண்டும், ஸ்திரீ புருஷர்களது சம்மதத்தின் பேரில் அவர்களுக்கிடையில் விவாகம் நடைபெற வேண்டும், எல்லா ஜனங்களும் தங்களது உடல், உடை ஆகியவைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும், ஒற்றுமையாக இருக்கவேண்டும், செல்வந்தர்கள் தங்கள் திரவியங்களில் நாற்பதிலொரு பாகத்தை ஏழைகளின் உதவிக்காக அளிக்க வேண்டும் என்பன இஸ்லாம் மதத்தின் அடிப்படையான சட்டங்களைச் சேர்ந்தவை. இந்தச் சட்டங்களை மாற்றி எல்லோரும் பொய் பேசவேண்டும், கஷ்டப்படுவோருக்கு உதவி புரியக்கூடாது, நீதி வழங்கலாகாது, ஸ்திரீ புருஷரது சம்மதமில்லாமல் பலவந்தமாக விவாகம் செய்விக்கவேண்டும், ஜனங்கள் சுத்தமாக இருக்கக்கூடாது, ஒற்றுமையாக இருக்கக்கூடாது, தனவந்தர்கள் ஏழைகளுக்குதவ தங்கள் திரவியங்களில் நாற்பதிலொருபாகத்தைக்கூட ஒதுக்கி வைக்கக்கூடாது என்று மாற்றிவைக்க வேண்டும் என்பது கோஸ்லாவின் அபிப்பிராயமா?

ஸயன்ஸு யுக்தி ஆகியவைகளுக்குமுன் மதம் ஊர்ஜிதமாகவில்லை என்பது கோஸ்லாவின் மற்றொரு குற்றச்சாட்டு. எல்லா மதங்களும் இம்மாதிரி இல்லை. மதத்தின் அஸ்திபாரம் யுக்திதான் என்பதாக ஹிந்துவேதங்களோ அல்லது இஞ்ஜீலோ கூறாமலிருக்கலாம். ஆனால், மனித வர்க்கத்திற்கு இஸ்லாம் மதம் விதித்துள்ள கட்டளைகள் அத்தனையும் யுக்திக்குப் பொறுத்தமானவைகள்தாம் என்பதாக திரு குர்ஆனின் நூற்றுக் கணக்கான இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. புத்திசாலிகள் தாம் திருகுர்ஆனின் பூரணபலனை அடையமுடியும் என்றும் அது கூறுகிறது. வானம், பூமி, காற்று, நெருப்பு, ஜலம், தாதுவர்க்கம் தாவர வர்க்கம் ஆகியவைகளைச் சிருஷ்டித்திருப்பதைப்பற்றி நன்கு கவனித்துப் பார்த்துத் தனது புத்தியை நன்கு உபயோகிக்க வேண்டும் என்று திருகுர்ஆன் கூறுகிறது. இவ்விதமான கட்டளைகள் திருகுர்ஆனிலிருக்கும்போது இஸ்லாம் மதம் புத்திக்கு எட்டிய மதமல்ல, அதற்கு விரோதமானது என்று இஸ்லாம் மதத்தைப்பற்றிக் குறைகூற மிஸ்டர் கோஸ்லாவிற்கு உரிமைஇல்லை. முஸ்லிம் வாலிபர்கள் திருகுர்ஆனைத் தங்கள் முன் வைத்துக் கொண்டு நாஸ்தீக இயக்கத்தார் கூறும் குணதோஷங்களைப் பரிசீலனை செய்வது அவசியமாகும். அது பொழுது மதத்திற்கு விரோதமாக நாஸ்தீகர்கள் கூறும் தாவாக்களில் எதுவும் இஸ்லாம் மதத்தைப் பாதிக்காது என்பது நன்கு விளங்கும்

நிற்க, ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் இப்பொழுது மறுபிறப்பு எடுத்து ஜெர்மனிக்கு வருவதை கோஸ்லா பிரஸ்தாபித்திருக்கிறார். ஹிந்து மதத்தில் மறுபிறப்புக்கொள்கை இருப்பது அவரது மூளையில் உறைந்திருப்பதால் அவர் அப்படிக்கூறி இருக்கிறார். மறுபிறப்புக் கொள்கையை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களைச் சிலுவையில் அறைவதைக் குறித்தும் அவர்கூறி இருக்கிறார். இஞ்ஜீல்வேதத்தில்தான் சிலுவையில் அறைந்த

தாகக்கூறப்பட்டிருக்கிறது. திருகுர்ஆன் அதனை மறுக்கிறது. ஆகவே, முஸ்லிம் என்ற முறையில் இவ்விரண்டையும் நாம் மறுக்கிறோம். இவைகளைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்பது கோஸ்லாவின் முக்கிய நோக்கமாக இல்லாததால் நாமும் அதனைப்பற்றி அதிகம் எழுதாமல் விட்டுவிடுகின்றோம்.

முஸ்லிம் வாலிபர்களே! நாஸ்திகர்களது கூற்றுக்களை மெய்யென்று நம்பி, இஸ்லாம் மதத்தைப்பற்றி நீங்கள் குறைகூறுவதற்குமுன் இஸ்லாம்மதக் கோட்பாடுகளை நன்கு தெரிந்துகொண்டீர்களாயின் உங்களை நாத்திகப் பிரவாகம் அடித்துக்கொண்டு போகமாட்டாது என்பதை உறுதியாக நம்புவீர்களாக.

வகுப்புவாதிகள் யாவர்?

தற்போது நாட்டில் வகுப்புவாதம், தேசிய வாதம் என்பனவற்றைப்பற்றி மிகவும் விவாதிக்கப்படுகிறது. இவைகளைப்பற்றிய சர்ச்சைகள் நடைபெறுகின்றன. ஹிந்துக்கள் வகுப்பு வாதிகளாக இருக்கின்றனர் என்பதாக முஸ்லிம்களும், முஸ்லிம்கள் வகுப்பு வாதிகளாக இருக்கிறார்கள் என்பதாக ஹிந்துக்களும் கூறுகின்றனர். ஆனால், எந்த ஹிந்துவும் இயற்கையாகவே வகுப்பு வாதமில்லாமல் பொது நோக்குள்ளவராக இருக்கமுடியாது. ஆனால், ஏதேனும் ஒரு காரியத்தை யுத்தேசித்து அக்காரியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக "தேசியம்" என்ற போர்வையைப் போர்த்திக் கொள்ளலாம். அவ்வாறு போர்த்திக் கொள்பவரை அவரது சிஷ்யர்கள் பிறரிடம் பெருமைப்படுத்துவதற்காக "தேசாபிமானி" என்று பிரபல்யப்படுத்திவிடலாம். ஆனால், இவ்வாறு வேண்டுமென்றே தேசாபிமானியாக்கப் படுவதாலோ அல்லது தேசாபிமானியாக நடப்பதாலோ இயற்கைக் குணம் ஒருபோதும் மாறிவிடப் போவதில்லை. ஹிந்து மனப்பான்மை உண்மையாகவே மாறிவிடுவதில்லை. பொதுவாக எல்லா ஹிந்துக்களுமே "சமூக வாதி"யாகவே இருக்கின்றனர். இது அவர்களது பிறவிக்குணம். இன்னும் அவர்கள் இதே குணமுள்ளவர்களாக எப்பொழுதுமே இருந்து வருவர். இது சரித்திரப் பூர்வமான விஷயம்.

வகுப்புவாதத்தின் அஸ்திவாரம்

வெறுப்புணர்ச்சியும், வேறாகப் பிரிந்திருக்கும் விருப்பமுமே வகுப்புவாதத்திற்கு அஸ்திவாரங்களாகும். அற்ப விஷயங்களுக்காகவெல்லாம் வருத்தமடைந்து கொள்ளல், குறுகிய மனப்பான்மையைக் காண்பித்துக்கொள்ளல், வெறுப்புக்கொள்ளல், விலகி இருத்தல், மற்றவர்களை அந்நியராகப் பாவித்தல், அப்புறம் அவருக்கு நஷ்டத்தை யுண்டுபண்ணல், அவரைக் கேவலப்படுத்த விரும்புதல் முதலியவைகளெல்லாம் இவ்வகுப்பு வாதத்திற்குஅஸ்திவாரங்களாகும். மேலும், ஹிந்து நாகரீகமும், ஹிந்து வாழ்க்கைமுறையும் இதே வெறுப்பு, துவேஷம், விலகி இருத்தல் ஆகியவைகளின் மீது அஸ்திவாரமிடப்பட்டிருக்கின்றன. இதனால்தான் ஹிந்து தர்மத்தின் ஜீவியத்திற்குரிய எந்தப் பிரிவும் துவேஷம், விலகி இருத்தல் ஆகியவைகளுக்குரிய அடையாளங்களில்லாம விருப்பதே இல்லை. உதாரணமாக, உணவை எடுத்துக்கொள்ளுங்கள். இது மனிதரது ஜீவியத்திற்கு அவசியமாகவுள்ளவைகளில் ஒன்று. இதனை ஹிந்துக்கள் ஒன்றுசேர்ந்து உட்கொள்ள மாட்டார்கள். ஜலம், இதுவும் ஜீவியத்திற்கின்றியமையாததான ஒரு பொருள். ஹிந்துக்கள் ஒன்று சேர்ந்து ஒருபாத்திரத்தில் அதனை அருந்த மாட்டார்கள். விவாகம் மனித அபிவிருத்திக்கு மிகமுக்கியமானது. ஹிந்துக்களில் ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பாரிடம் கொள்வினை கொடுப்பினை செய்து கொள்ள மாட்டார்கள். மதம் வாழ்க்கைக்கு அவசியமான ஒரு அம்சம். ஆனால், ஒரு வகுப்பினரின் கோவிலில் இன்னொரு வகுப்பினர் சென்று தங்கள் வகுப்பு ஆசாரப்படி மதச்சடங்கை நிறைவேற்றிக் கொள்ளமுடியாது. தவிரவும், தற்போதுள்ள ஹிந்து சமூகத்தார் ஹிந்து

வாகப்பிறக்காத வேறு எவரையும் ஹிந்துவாக ஆக்கி தங்கள் இனத்துடன் சேர்த்துக் கொள்ள முடியாது. ஹிந்துக்களில் விதவா விவாகம் இல்லை. "ஒருமுறை வேறு ஒரு வருக்கு மனைவியாக இருந்த ஸ்திரீயை நான் மணந்து எனது மனைவியாக ஏற்படுத்திக் கொள்வேனு" என்ற உணர்ச்சியுள்ளவனுக இருக்கிறுன். ஹிந்துக்களது வணக்கங்களும் ஒற்றுமையையுண்டுபண்ணக்கூடிய முறையில் இல்லை. தனித் தனியே வணங்கவேண்டியதாக இருக்கிறது. கோயில் வேருக இருக்கிறது. தேவதைகள் வெவ்வேருக இருக்கின்றன. ஆசாரங்கள் வேருகவிருக்கின்றன. இவர்களுக்குள்ளாகவே தீண்டாமையு மிருக்கின்றது. அவர்களது வேதங்களை குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் தவிர வேறுயாரும் தீண்டவும் கூடாது, படிக்கவும் கூடாது, தங்களுடைய ஒவ்வொரு காரியமும் பரிசுத்தமுள்ளது, புனிதத் தன்மை வாய்ந்தது என்றும் கருதுகிறுர்கள். தீண்டத்தகாத ஒருவன் தங்கள் வேதமந்திரத்தின் ஒரு சுலோகத்தைச் செவியேற்றுவிட்டால் அவனது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும் என்பது அவர்களது மார்க்கச் சட்டம். இன்றுங்கூட தென்னிந்தியாவின் சில ரஸ்தாக்களில் தீண்டப்படாதவர்கள் செல்லக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கின்றனர். அந்த ரஸ்தாக்களில் அவர்கள் வந்தால் தீட்டு உண்டாகிவிடும் என்று லக்ஷக்கணக்கானவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறுர்கள்.

ஹிந்துவல்லாதாரின் கதி

ஹிந்து சமூகத்திலுள்ள இவ்வர்ணுசிரம தர்மம், வகுப்புவாத உணர்ச்சி, பிராமணர்களது தலைமையின்கீழில் இந்தியாவின் சரித்திரத்தில் நிறைவேற்றியுள்ள படலம் மனித சரித்திரத்தில் மிகவும் துக்கம் நிறைந்த ஒருபாகமாக இருந்துவருகிறது. அந்நியர்கள், ஹிந்துக்களுக்குப் புறம்பானவர்கள் என்று ஹிந்து சமூகம் எந்தெந்த சமூகத்தார் மீது மார்க்கத் தீர்ப்பளித்ததோ அந்த சமூகத்தாரின் கடைசி முடிவு என்னவாயிற்று என்பதைச் சரித்திரத்தில் விசாரித்துப்பாருங்கள். அவ்வாறு மார்க்க தீர்ப்பு அளிக்கப்பட்டவர்கள் உலகிலேயே இல்லாதவாறு அடியுடன் அழிக்கப்பட்டனர், அல்லது இந்தியாவிற்கு வெளியில் துரத்தப்பட்டனர். இவ்விரண்டிலொன்றுதான் அவர்களுக்கு நிச்சயமாக நடந்திருக்கிறது. இதற்கு மேலிலும் அவர்களிருந்தால் அவர்களைத் தீண்டத்தகாதவர்களுடன் சேர்த்து ஒதுக்கித் தள்ளப்பட்டிருப்பர்.

ஆரியர்களைத் தவிர இந்தியாவிற்கு குடியேறிய எல்லா வகுப்பினருக்கும் இதேகதிதான் கிடைத்தது. ஜைன மதத்தின் சாஸ்திரங்களைப் படித்துப்பாருங்கள். அதிலுள்ள ஒவ்வொரு பக்கத்திலும் ஹிந்துக்களது கொடுமையைப்பற்றிய பிரலாபமில்லாதிருக்காது. இவ்விதமான அக்கிரமம் உலகில் ஹிந்துக்களைத்தவிர வேறு எவரும் செய்யமாட்டார்கள். முஸ்லிம்களை ஸ்பெயினில் அடித்துக்கொன்று நாசமாக்கியது போல இந்தியாவில் ஜெயின வகுப்பினர் கொல்லப்பட்டு நாசமடைந்தனர். இதுபோன்ற நிலைமையே புத்தர்களுக்கும் ஏற்பட்டது. இவர்களைத்தவிர இந்தியாவிற்கு வந்த ஏனைய வகுப்பினருக்கும் இதே கதிதான் கிடைத்தது. ரோஷமும் உணர்ச்சியுமுள்ளவர்கள் இந்த தேசத்தைவிட்டு வெளியேறினர். இல்லாதவர்கள் இங்கேயே குடிபதியாகி ஹிந்துக்களின் அசங்கிதங்களை எடுப்பவர்களாகிவிட்டனர். இந்தியாவிற்கு வந்த சமூகத்தாருக்கு இவ்வாறு நேர்ந்ததற்குக் காரணமென்னவெனில், ஹிந்து சமூகம் அதிலும் முக்கியமாக ஆரியர்கள் தங்களுக்குப் பக்கத்திலுள்ளவர்களது பாத்தியதைகளை மதிக்காதிருப்பதுதான். சில ஹிந்து வகுப்பினரை இந்தியாவில் குடியிருக்கக்கூட இவர்கள் அனுமதிக்கவில்லை. சில வகுப்பினரை அனுமதித்தாலும் இவர்கள் அசங்கிதங்களை எடுத்துத்தான் தங்கள் வயிறுகளை வளர்க்க வேண்டும். கல்வி கற்கக்கூடாது, வேதத்தைக் கற்றுக் கொள்ளக்கூடாது, கோவில்களுக்குள் வரக் கூடாது, சில குறிப்பிட்ட தெருக்களில் நடக்கக் கூடாது, கிணற்றில் ஜலமெடுக்கக்கூடாது என்றெல்லாம் கட்டளை விதித்தனர். எனவே, ஹிந்துக்கள் தீண்டாதாருக்கு அளித்துள்ள உரிமைகளை நீங்கள் அறியவேண்டுமாயின் மனுதர்ம சாஸ்திரத்தை வாங்கிப் படியுங்கள். சுருங்கக் கூறுமிடத்து, ஹிந்து சமூகம் வேறு எந்தச் சமூகத்திற்கும் எவ்வித உரிமையையும் எப்பொழுதும் அளித்ததில்லை.

ஒரு தப்பபிராயம்

"இப்பொழுது ஹிந்துக்கள் தீண்டாதார்களுக்கு அநேகம் உரிமைகளை அளித்திருக்கிறுர்கள்; இனியும் அளித்துக்கொண்டிருக்கிறுர்கள்; ஆதலின், ஹிந்துக்கள் குறுகிய மனப்பான்மை

யுள்ளவர்களென்று இன்னமும் தப்பு அர்த்தஞ்செய்துகொள்ள வேண்டாம்" என்று சிலர் சொல்லக்கூடும். இப்பொழுதுள்ள ஹிந்துக்கள் தீண்டாதாருக்கு இவைகளை அளிக்க முன்வந்ததற்கு அசல் காரணம் அவர்களது தாராள சிந்தையன்று. இஸ்லாம் மதம், கிறிஸ்து மதம், பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் ஆகிய மூன்றின் பயனே யாகும். தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சமபாத்தியங்கொடுத்து அவர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளாவிட்டால் அவர்கள் இஸ்லாம் அல்லது கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து விடுவார்கள்; அல்லது ஆங்கிலேயர்கள் இவர்களுக்குக்கென தனி உரிமைகளை அளித்து ஹிந்துக்களுக்கு எதிரியாக ஏற்படுத்தி விடுவர்; அவ்வாறு நிகழ்ந்து விட்டால் இந்தியாவில் ஹிந்துக்களுக்குள்ள பெரும்பான்மை அந்தஸ்து இனி என்றென்றைக்கும் இல்லாதவாறு ஒழிந்துவிடும் என்ற பயத்தினால் திண்டாதாருக்கு உரிமைகள் வழங்க ஆரம்பித்தனர். என்றாலும், ஹிந்துக்களுக்கு தீண்டாதார் விஷயத்தில் இவ்வளவு பயமிருந்தும் உரிமைகளளிப்பதாகச் சொல்லப்படுகிறதே யல்லாமல் காரியத்தில் ஒன்றையும் நியாயமாக அளித்துவிடவில்லை. அழுகிற பிள்ளைக்குக் கண்ணைத் துடைத்து விடுகிற காரியங்களே நடைபெறுகின்றன.

"வகுப்பு துவேஷம், விலகி இருத்தல், உயர்வு தாழ்வு என்ற ஜாதி உணர்ச்சி முதலிய வகுப்பு வாதக்கொள்கைகளிருப்பதாக நீங்கள் குற்றஞ்சாட்டும் இனத்தைச்சேர்ந்த ஹிந்துக்கள் இப்பொழுது நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறார்கள் ஆதலின், எல்லா ஹிந்துக்களேயும் ஒன்றுபோல் நினைத்துவிடக்கூடாது; பொது நல்லெண்ணங்கொண்டவர்களும் அவர்களிலிருந்து வருகிறார்கள்" என்று சிலர் கூறலாம். இவ்விதமான நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் இஸ்லாம் மதத்தின் செல்வாக்கும், முஸ்லிம்களது கூட்டுறவும், பிரசாரமுமேயாகும். ஹிந்து சமூகத்தார் இயற்கையிலேயே தாராள சிந்தையுள்ளவர்களாக இல்லை: வகுப்புணர்ச்சியும், குறுகிய மனப்பான்மையும்தான் அவர்களுக்கு இயற்கையாகவே இருந்துவருகின்றன. இக்காலத்தில் இவ்வகுப்பினரிடம் தோன்றியுள்ள அற்ப சொற்ப பொதுநல உணர்ச்சியானது முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் ஆகிய மூன்று வகைச் சக்தியின் கூட்டுச் செல்வாக்கினுலுண்டானதே யாகும். முஸ்லிம்களுக்கும், தீண்டாதாருக்கும், கிறிஸ்துவர்களுக்கும் பலங்கிடைத்து அவர்கள் ஒருவருக்கொருவர் அந்நியோன்யமாகிவிடுவார்களாயின் ஹிந்துக்களிலுள் உயர்வு தாழ்வு என்ற ஜாதி உணர்ச்சி இன்னமும் குறைந்துவிடும். என்றாலும், இம்மூவகை ஜாதியினரும் பலஹீனமடைந்து மரணத்திற்குரிய நிலைமைக்கு வந்துவிடுவார்களாயின் ஹிந்துக்களுக்கு மனதைரியமேற்பட்டு ஜாதி உணர்ச்சியில் மிக்கவர்களாகிவிடுவார்கள். "அந்நிய தேசத்தினர் இந்த தேசத்தைவிட்டு வெளியிற்செல்ல வேண்டும்; அவ்வாறு வெளியிற் செல்லாவிடில் தீண்டாதார்களைப்போலவே வாழவேண்டும்" என்றும் அவர்கள் முயற்சி செய்யவும் கூடும்.

ஜாதி அபிமானமுள்ள ஹிந்துக்களிடம் சுயராஜ்யம் என்பதற்கு அர்த்தம்

இந்தியாவில் ஹிந்துக்களல்லாதவருக்கு எவ்வித உரிமையுமில்லை என்ற எண்ணம் ஹிந்துத் தலைவர்கள் உணர்ச்சியில் வேரூன்றி இருக்கிறது. தங்களது பிரசங்கங்கள் பலவற்றிலும் அவர்கள் இவ்வுணர்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சுவாமி தயானந்தரின் உணர்ச்சியை "ஆரியா கெஜட்" பின்வருமாறு ஒருமுறை வெளியிட்டது.

"சுவாமி (தாயனந்தர்) சமஸ்கிருத பாஷையின் பால் விளக்குப் பூச்சியைப் போலிருந்தார்; அத்துடன் இந்தியா முழுவதும் ஆரிய மயமாக இருப்பதைக்காணவிரும்பினர். அதாவது, பாரதவர்ஷமும் இஸ்லாம் மதமும் ஒன்றுக்கொன்று நேர்முரணான இரண்டு வார்த்தைகள் என்பது அவர் கருத்து. இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் சமஸ்கிருதம் படிக்கவேண்டும் என்பதும், பராசீன மகாபுருஷரை வணங்கவேண்டும் என்பதும் அவரது வெகு காலத்தைய விருப்பம். இதர மதத்திலுள்ளவர்களைச் சுத்தி செய்யவேண்டும் என்பது அவரது மதக்கொள்கையில் மிக முக்கியமான கொள்கையாகும். இதற்கு மாறாக எத்தனை பிரவாகம் வந்தபோதினும் இவைகளைக் கடந்து சென்று, அவரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆரிய சமாஜிகள்தான் சுயராஜ்யத்தை வாங்குவர்."

இவை செல்வாக்குள்ள ஒரு ஹிந்து பத்திரிகையின் அபிப்பிராயங்கள். இப்பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள இவ்வாக்கியங்களுக்கு ஹிந்

துக்கள் தாம் பொறுப்பாளிகள். இதில் சுவாமி தயானந்தஜீயின் மதக் கொள்கையைப்பற்றி விபரித்துக்கூறி இருப்பதால் இவ்வாக்கியங்கள் அதிகமாகக் கவனிக்கத் தக்கனவாகும். நாம் மேலே எடுத்தெழுதி இருப்பதைத் திரும்பத் திரும்பப் பன்முறை படித்துப் பாருங்கள். இதில் உரிமைகள், சுயராஜ்யம், சுத்தி ஆகியவை கள் சம்மந்தமாகக் கடைசி முடிவான அபிப்பிராயம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், ஹிந்துக்கள் அல்லாதவர்கள் இந்தியாவிலேயே இருக்கக்கூடாது என்ற உணர்ச்சியுள்ள ஒரு வகுப்பினர் ஹிந்துக்களிலிருக்கின்றனர்; அவர்களுக்கு ஹிந்துக்களில் மிகச் செல்வாக்கு உண்டு; அவர்களுக்கும் சுயராஜ்யம் கிடைக்க வேண்டுமென்ற ஆசை இருக்கத்தான் செய்கிறது; என்றாலும், இதர ஜாதியினர் இந்தியாவிலேயே இருக்கக்கூடாது என்ற கொள்கையை அன்னோர் அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின்றனர் என்ற விபரம் "ஆரியா கெஜட்"டின் வியாசத்திலிருந்து வெளியாகின்றது.

தப்பபிப்ராயத்திற்கு இடங்கொடாதீர்கள்.

1. "ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் இருப்பது அவசியமாகும். 2. முஸ்லிம்களை வெளியேற்றிவிட வேண்டுமென ஹிந்துக்களும், ஹிந்துக்களை வெளியேற்றிவிட வேண்டுமென முஸ்லிம்களும் விரும்புவார்களாயின் அவர்களது இவ்விருப்பம் ஒருபோதும் ஈடேறப்போவதில்லை" என்பதாகச் சில முஸ்லிம்கள் இதுபோழ்து கூறிவருகிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கூறுவது சரிதான். இதில் கொஞ்சமும் பிசகில்லை. ஆனால், ஹிந்துக்களை முஸ்லிம்கள் வெளியேற்ற முடியாது என்பதும், முஸ்லிம்களை ஹிந்துக்கள் வெளியேற்ற முடியாது என்பதும் தவறான வாதமாகும். இவ்விரு சமூகத்தினரில் ஒரு சமூகம் மற்றொரு சமூகத்திற்கு அடிமையாகிவிடவோ அல்லது கலந்துவிடவோ கூடிய காலமும் வந்துவிட முடியும். ஸ்பெயின் தேசத்தில் என்னவாயிற்று என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அத்தேசத்தில் இஸ்லாமிய அரசாங்கம் அதிகாரத்திலிருந்தபோது அதற்கு நிகரான அரசாங்கம் உலகில் இல்லை. இன்று அந்த அரசாங்கம் எங்கே? இத்தேசத்தில் ஒரு முஸ்லிம்கூட இல்லாமற்போகுங்காலம் ஒருநாள் வாராமற்போகாது என்று ஒருவர் கூறுவராயின் ஹிந்து முஸ்லிம் சகோதரர்களில் எவரும் இதனை அங்கீகரிக்கவேமாட்டார். சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் இத்தேசத்தில் முஸ்லிம் அரசாட்சி இருந்து வந்தது. ஆனால், இன்று அதனைத் துருவித் துருவிப் பார்த்தாலும் அது இருக்குமிடம் தெரிவதில்லை. அக்பர் சக்கரவர்த்தி அரசுபுரிந்து கொண்டிருந்தபோழ்து முதல் முதலாவதாக இத்தேசத்தில் ஒரு ஆங்கிலேயர் அடியெடுத்து வைத்தார். இந்த ஒற்றை மனிதனின் பாதம் இந்தியாவிலுள்ள இஸ்லாமிய அரசாங்கம் முழுவதும் அழிந்து போவதற்குக் காரணமாக இருக்கும் என்று ஒருவரும் நினைத்திருக்கமாட்டார். எனவே, ஒரு காரியத்தைச் செய்வதாலேற்படும் பயன் யாது என்பதை உணராதவர்கள்தான் நாளையைப் பற்றிய சிந்தைகொள்ளாதவர்களேயாவர். இறந்தகாலத்தில் நிகழ்ந்ததையும், நிகழ்காலத்தில் நடந்துகொண்டிருப்பதையும் பற்றிச் சிந்தித்து ஆலோசனை செய்து எதிர்காலத்தில் நமது வாழ்க்கைக்கு வேண்டிய பாதுகாப்பை இப்பொழுதே தேடிக்கொள்வதவசியமாகும். இதனைச் செய்யாமலிருந்து விடுவது மூடத்தனமுமாகும். இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பூர்ண ஒற்றுமையாகவும் நேசமாகவும் வாழட்டும். ஆனால், முஸ்லிம்கள் சிறுபான்மையினர் என்பதற்காக அவர்களுடைய பாத்தியதைகளில் எதுவும் குறையக்கூடாது. தங்களுக்கு ஆதிக்கம் கிடைத்த முதற் சமயத்திலேயே நமது ஹிந்து சகோதரர்கள் முஸ்லிம்களது தனி வகுப்பு இருப்பதை அங்கீகரிக்க மறுப்பதோ அல்லது புறக்கணிப்பதோ எவ்விதத்திலும் சகிக்கமுடியாத காரியமாகும்.

முஸ்லிம்கள் தனித்து நிற்பதற்குக் காரணமென்ன?

இனி, முஸ்லிம்கள் வகுப்பு வாதியாக இருக்கமுடியுமா? என்பதைப்பற்றி கவனிப்போம். முஸ்லிம்கள் வகுப்பு வாதியாக இருக்க முடியாது. இது அவர்களது இயற்கைக்கு விரோதமானது. சரித்திர சம்பவங்களுக்கு முரணானது. முஸ்லிம்களது வணக்கம், கொள்கைகள், சரித்திரம், சாப்பாடு, விவாகம், பிரசாரம் முதலிய ஒவ்வொரு காரியங்களையும் நாம் கவனிப்போமாயின் இவை ஒவ்வொன்றும் தனித்து நிற்பதற்குரிய உணர்ச்சிக்கு மாறாகவே இருக்கின்றன. முஸ்லிம் என்ற

பெயரே ஒற்றுமை ஐக்கியம் ஆகியவைகளை வருவிப்பதாக இருக்கிறது. இவ்வித நிலைமையில் இந்திய முஸ்லிம்கள் ராஜிய விஷயத்தில் தங்களுடைய உரிமைகளை நிர்ணயஞ் செய்துகொள்ளவேண்டுமென்று தனித்து நிற்பதற்குக் காரணம் என்னவென்ற விஷயத்தைப் பற்றிச் சிறிது கூறுவது அவசியமாக இருக்கிறது. இந்த உணர்ச்சி இந்தியாவை மட்டிலும் பொருத்ததாகும். ஹிந்துக்கள் வகுப்புவாத உணர்ச்சியுள்ளவர்களாக இருப்பதனால் இவ்வுணர்ச்சி முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது. வட இந்தியாவில் ஹிந்துக்கள் முஸ்லிம்களது கடையில் உணவுப்பொருள்களை வாங்குவதில்லை. இவ்வித நிலைமையில் முஸ்லிம்கள் தங்களுக்கென கடைகளை ஏற்படுத்திக்கொண்டு அவைகளிலேயே தங்களுக்கவசியமானவைகளை வாங்கிக்கொள்ளவேண்டும் என்று முஸ்லிம்கள் கூறினால் இது ஹிந்துக்களால் ஏற்பட்ட வினையா அல்லது முஸ்லிம்களது வகுப்புவாதமா என்பதைக் கவனித்துப்பாருங்கள். இவ்விதமாகத்தான் முஸ்லிம்கள் தனித்தேர்தல் முறையையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் தங்களுக்கு அளிக்கவேண்டும் என்று கோரியது ஹிந்துக்களின் ஜாதிவித்தியாச உணர்ச்சியினாலேயாம். இந்தியாவில் கூட்டுத் தேர்தல் முறை எங்கேற்பட்டாலும் அங்கு ஆயிரத்தில் ஒரு ஸ்தானங் கூட முஸ்லிம்களுக்குக் கிடைக்கமாட்டாது என்பதை முஸ்லிம்கள் நன்கு உணர்ந்துகொண்ட பின்னர் தான் அவர்கள் தங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், தனித் தொகுதியும் வேண்டுமெனக் கோரினர். இதே நிலைமைதான் அரசாங்க உத்தியோகப்பதவியிலுமிருந்து வருகிறது. எவ்வாறாயினும், முஸ்லிம்களது வகுப்புவாதம் ஹிந்துக்களது வகுப்புவாதத்திற்குப் போட்டியாகத் தோன்றியதேயாகும். ஹிந்துக்கள் அவர்களது மதச்சட்டப்படியும், சரித்திரப் பூர்வமாகவும், பழக்க வழக்க ஆசாரப்படியும் வகுப்புவாதிகளாக இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு அவர்களது உரிமைகளை அளிக்கவேண்டும் என்ற விஷயத்தை அவர்கள் அறியவேமாட்டார்கள்.

ஆதலின், முஸ்லிம்களும் தங்களுக்குரிய பாத்தியதைகளை தனியே ஒதுக்கிக் கொடுத்துவிடவேண்டும் என்று கேட்கவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கேற்பட்டுவிட்டது. இவ்வாறு தனியே பிரிவது முஸ்லிம்களது இயற்கைக்கு மாறாக இருந்தபோதினும் தற்போதைய நிலைமையில் அவர்கள் தங்கள் பாத்தியதைகளைக் கேட்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அதிலும், தங்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பாத்தியதையை மட்டிலும்தான் கேட்கின்றனர். முஸ்லிம்களுக்கு அவர்களது நியாயமான உரிமைகளை அளிக்க இஷ்டப்படாத ஹிந்துக்கள் முஸ்லிம்களை வகுப்புவாதிகள் என்று கூறித் தூற்ற முனைந்திருக்கின்றனர். உண்மையில் முஸ்லிம்கள் இப்பொழுதுகூட வகுப்புவாதிகளாயில்லை.

இப்பொழுது செய்யவேண்டியதென்ன?

இனி என்ன செய்யவேண்டும் என்ற பிரச்னையைப்பற்றிக் கவனிப்போம். முஸ்லிம்கள் ஹிந்துக்களிடம் கலகஞ் செய்யலாகாது. சண்டை சச்சரவு செய்யலாகாது. ஹிந்து முஸ்லிம் நேசத்திற்குப் பங்கம் வரக்கூடிய காரியம் எதையுஞ் செய்யலாகாது. இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் அமைதிக்கும் பாதகமேற்படக்கூடியவைகளைச் செய்யலாகாது. தங்களது வகுப்புக்குள்ள தனிப் பாத்தியதைக் கோரிக்கையில் உறுதியாக இருக்கவேண்டும். இதில் கொஞ்சங்கூட அசட்டை செய்யலாகாது. இந்தியாவினுடையவும் இதர முஸ்லிம் நாடுகளினுடையவும் நன்மை, சீர்திருத்தம் முதலிய காரியங்களில் இதர எந்தச் சமூகத்திற்கும் பிந்தி நிற்கக்கூடாது. இந்தியாவில் மிகப் பலமாக "இஷாஅத்துல் இஸ்லாம்" வேலையைச் செய்யவேண்டும். இஸ்லாம் மதத்தின் கோட்பாடுகளைப் பிரசங்கித்து அவைகளைப் பரப்புவதுதான் முஸ்லிம்களை உயிர்வாழச் செய்வதற்கும் ஹிந்துக்களின் வகுப்புவாதத்தைக் குறைப்பதற்கும் ஏற்ற மருந்து. நமது மதம், பிரசாரம், சீர்திருத்தம் முதலிய காரியங்களுக்காக எல்லா முஸ்லிம்களையும் ஒன்றுசேர்த்து ஐக்கியப்படுத்தவேண்டும். வகுப்புவாதி என்று கூறுவதைக்கண்டு பயப்படலாகாது. இதுபோழ்து நாம் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவுமிருப்பதே மிக அவசியமானது.

நபீ என்பதான பொய் விவாதம்

ஊமை இஸ்ஹாக் என்பவர் அரபியர். இவர் 'மகுரிபு' தேசத்தில் பிறந்தவர். (வட ஆப்ரிக்காவிலுள்ள மொரோக்கோ, டுனிஸ், அல்ஜீரியா முதலிய தேசங்களுக்கு அரபியர் 'மகுரிபு' தேசம் என்று கூறுவர்.) இக்காலத்தில் அப்பாஸிய்யா வம்சத்து முதல் கலீபா 'ஸப்பாஹ்' என்பவர் இஸ்லாமிய நாடுகளை ஆட்சி புரிந்துவந்தார். ஊமைஇஸ்ஹாக்கின் தந்திரங்களைக் குறித்து சரித்திரக்காரர்கள் மிக ஆச்சரியகரமான தகவல்களை எழுதி இருக்கின்றனர். இவர் ஆரம்பத்தில் திருகுர்ஆன், பைபிள் பழைய, புதிய ஏற்பாடுகள் முதலியவைகளை நன்கு பயின்றார். பின்னர் புறக்கல்விகளைக் கற்றார். பிறகு அந்நிய பாஷைகள் பலவற்றையும் பயின்றார். பிறகு பற்பல தொழில்களையும், வித்தைகளையும், ஜாலங்களையும் கற்றார். இவ்வாறு பல துறைகளிலும் பாண்டித்துவம் பெற்றபின் ஹிஜ்ரீ 135-ல் இஸ்பஹானுக்கு வந்து, இங்குள்ள ஒரு அரபி மத்ராஸாவில் சரியாக 10 வருஷகாலம் வரை ஒரு இருண்ட அறையில் தாமதித்துவந்தார். இங்கு இவர் எவரிடத்திலும் பேசுவதுமில்லை, நேசங்கொள்வதுமில்லை. இவர் வாயைத் திறக்காமல் மிக ஜாக்கிரதையாக இருந்ததால் ஜனங்கள் இவரை ஊமையர் என்றே கருதி இருந்தனர். இவர் தம்மை கல்லாத மூடர் என்றும், பேசத் தெரியாதவர் என்றும் பத்து வருஷகாலம் வரை எல்லா ஜனங்களும் நிச்சயமாகவே நம்பி இருக்கும்படி நடித்தார். இதனாற்றான் இவருக்கு "ஊமையர்" என்ற பெயர் ஏற்பட்டது. இவர் பேசவேண்டுமாயின் கைஜாடையிலேயே பேசுவது வழக்கம். கிட்டத்தட்ட எல்லா ஜனங்களும் இவரை அதிகமாக நேசித்தனர். இவரும் வாய் பேசாமல் எல்லாரிடத்திலும் அன்பாக இருப்பதுபோலவே நடித்தார். சிறியோராயினும் பெரியோராயினும் இவரைக் காணும் எவரும் இவரிடத்தில் கைஜாடையாகப் பேசிப் பரிகசிக்காமலிரார். இத்தனை வருஷகாலம்வரை இவர் பேசாதிருந்துவிட்டு இறுதியாக தமது வாயைத் திறந்து பேசக்கூடிய காலமும் வந்தது.

இவர் வாய் பேசாதிருந்த காலத்தில் மிக இரகசியமாக ஒரு தைலம் தயார் செய்தார். இத்தைலத்தை ஒருவர் தமது முகத்தில் தடவிக்கொள்வாராயின் அவரது முகம் மிகப் பளப்பளப்பாகவும், அழகு பொருந்தியதாகவும் ஆகிவிடுவது இத்தைலத்தின் குணம். இதனைத் தடவிக்கொண்டிருப்பவர் முகத்தை ஒருவரும் எதிட்டுப் பார்க்கமுடிவதில்லை. இத்தைலத்தைத் தயார்செய்த பிறகு சில மெழுகுவத்திகளையும் தயார் செய்தார். இவ்விரு சாமான்களும் தயாரான பின்னர் ஒருநாளிரவில் யாவரும் அயர்ந்து நித்திரை செய்யும்போது அவர் தமதுமுகத்தில் அத்தைலத்தைத் தடவிக்கொண்டு, அம்மெழுகுவத்திகளையும் கொளுத்திவிட்டு, ஒருவகையான பயங்கர சப்தம் செய்தார். அம்மத்ராஸாவிலிருந்தவர்களெல்லோரும் அக்குரலைக் கேட்டுத் துயிலெழுந்து அவரது அறையை நோக்கி வந்தனர். ஜனங்கள் தம்மை நோக்கி வருவதைக்கண்ட இப்போலி ஊமையர் தொழுகைக்காகத் தக்பீர் கட்டிக்கொண்டு, மிகவும் இனிய குரலில் சட்டப்படி மிக அழகாக கிராஅத் ஓதவாரம்பித்துவிட்டார். இவரது கிராஅத்தைக் கேட்கும் காரிகளெல்லாம் தமது கிராஅத் எம்மாத்திரம் என்று ஏங்கும் நிலைமையிலிருந்தது. அத்துடன் அவர் தைலத்தைப் பூசி மெழுகுவத்திகளைக் கொளுத்தி வைத்திருந்ததால் அவரது முகத்தினழகும் தேஜசும் ஜனங்களைப் பரவசப்படுத்தின.

பிறவி ஊமையைப்போல் நடித்த இவருக்குப் பேசும் சக்தி ஏற்பட்டதுமல்லாமல் இவர் சட்டப்படி மிகத்திருத்தமாக திருகுர்ஆனை இனிய குரலில் ஓதுவதையும், இவரது முகத்தினழகையும் கண்ட மாணவர்களும் உபாத்தியாயர்களும் ஆச்சரியமடைந்தனர், திகைத்தனர். தலைமை உபாத்தியாயருக்கு தெய்வத்தின் அற்புதச் செய்கையைக்கண்டு அறிவு மழுங்கிவிட்டதென்றே கூறலாம்.

இவ்வரபி மத்ராஸாவின் தலைமை ஆசிரியர் கல்வியிலும், ஒழுக்கத்திலும் தெய்வ பக்தியிலும் நிகரற்றவராக விளங்கியதுடன் சமயவாதிகள், சமயோசிதம்போல் நடப்பவர்கள்,

வேஷதாரிகள் ஆகியவர்களின் மாயச் செய்கைகளை அறியாதவராகவிருந்தார். களங்கமற்ற மனத்தையுடையவராக இருந்ததால் ஊமையரான இஸ்ஹாக் என்பவர் உண்மையாகவே பேசவாரம்பித்துவிட்டார் என்றும், அல்லாஹ் தஆலாவின் அற்புத சக்தியைத் தம்மைப்போல் மற்றவர்களும் கண்டுகளிக்க வேண்டுமென்றும் விரும்பினர். எனவே, தலைமையாசிரியரும் ஏனைய மாணவர்களும் இவ்வதிசயத்தை ஜனங்களிடம் கூறுவதற்காக நகருக்குள் சென்றனர். நகரத்தின் கோட்டை வாசலண்டை வந்தபோது வாசல் பூட்டப்பட்டிருந்தது. சாவியைக் கொண்டுவந்து திறக்கலாம் என முயன்றதில் பயன் பெறவில்லை. இவர்களது மூளையில் இவ்வதிசயம் பலமாக ஏறிஇருந்ததால் தலைவாசல் பூட்டப்பட்டிருந்தும் கோட்டை மதில்கள் அவர்களுக்குத் தடையாக இருக்கவில்லை. ஏதோ உபாயஞ்செய்து நகருக்குட் பிரவேசித்துவிட்டனர். தலைமை ஆசிரியர் முதலாவதாகவும், இதர ஆசிரியர்கள் அவரைப் பின்றொடர்ந்தும் இவர்களை மாணவர்கள் புடைசூழ்ந்தவர்களாக நகர காஜியின் விடுபோய்ச்சேர்ந்தனர். அர்த்த ராத்திரியில் எதிர்பாராத வண்ணம் தமது வீட்டிற்கெதிரில் ஜனக்கூட்டம் கூடிக்கொண்டு கூச்சலிடுவதைக்கண்ட காஜியார் துடித்துக்கொண்டு வீட்டுத் தலைவாசலைத் திறந்து விஷயமென்னவென விசாரித்தார். துர்அதிர்ஷ்டவசமாக காஜியாரும் விஷயத்தை ஆழ்ந்து சிந்திக்காதவராக இருக்கும் நிலைமையில் இச்சமாசாரத்தைக் கேள்விப்பட்டவுடன் ஜனக் கூட்டத்தை அழைத்துக்கொண்டு முதல் மந்திரியின் வாசஸ்தலத்திற்கு விரைந்து சென்று கதவைத் தட்டினர். முதல் மந்திரியாக இருப்பதால் அவருக்குக்கொஞ்சம் தீர்க்காலோசனையும் நிதானமுமிருந்தது. ஆதலால் அவர் இவர்களது சொல்லைக் கேட்டுத் தன்னை மறந்துவிடவில்லை. "இது இராக்காலமாக இருக்கிறது; விடியட்டும்; எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளலாம்" எனக்கூறி அவர்களை அனுப்பிவிட்டார். எவ்வாறாயினும், நகரத்தில் இவ்வதிசயம் அவ்வர்த்த ராத்திரியிலேயே காட்டுத்தீபோல் பரவிவிட்டதால் இருளையும் பாராமல் ஜனங்கள் கூட்டங்கூட்டமாக மத்ரஸாவை நோக்கிச் சென்றனர். ஆனால், தலைவாசல் பூட்டிடப்பட்டிருந்தது. இஸ்ஹாக் மத்ரஸாவிற்குள் வீற்றிருந்தார். காஜியார் ஜன்னல் வழியாக அவரை நோக்கி "பெரியாரே! தங்களுக்கு இந்த அற்புதத்தை அளித்த அதே அல்லாஹு தஆலாவின்மீது பிரமாணமாகக் கூறுகிறேன். தாங்கள் தயவுசெய்து கதவைத் திறந்து தங்கள் தரிசனத்தை யாவருக்கும் அளிக்க வேண்டும்" என்று கூறினர். இதனைக்கேட்ட இஸ்ஹாக் உட்கார்ந்துகொண்டே "பூட்டே, திறந்துவிடுவாய்" என்றார். உடனே பூட்டுக் கீழேவிழுந்தது. பூட்டு விழுந்த சப்தங்கேட்டு ஜனங்களுக்கு இன்னும் அதிகமாக பக்தியும் விசுவாசமும் ஏற்பட்டது. ஜனங்கள் இந்த அற்புதத்தைப் பார்த்து இன்னும் அதிக மதிப்பும் மரியாதையும் வைத்தனர். அவர் எதிரில் மிகவும் பக்தி வணக்கத்துடன் அமர்ந்தனர். காஜியார் இஸ்ஹாக்கை நோக்கி "பெரியீர்! நகர முழுவதும் ஆண்டகையின் இவ்வற்புத சக்தியைக் கண்டு வியப்படைந்திருக்கிறது; இதன் விபரத்தைப்பற்றி கருணைகூர்ந்து எங்களுக்குக் கூறவேண்டும்" என்று தாழ்ந்த குரலில் மரியாதையாகக் கேட்டுக்கொண்டார்.

இஸ்ஹாக் கூறிய விபரம்

இவ்விதமான சந்தர்ப்பம் எப்பொழுது வாய்க்குமோ என்று முன்னதாகவே எதிர்பார்த்திருந்த இஸ்ஹாக், கொஞ்சம் அகம்பாவத்தொனியில் "நாற்பது நாட்களுக்கு முன்னதாகவே இறைவனின் 'தஜல்லி'யுண்டாக வாரம்பித்தது. பின்னர் நாளுக்குநாள் தெய்வ உதிப்பு அதிகரித்துக்கொண்டேவந்து இன்றிரவு இறைவனின் கருணைமாரி இவ்வடியேன்மீது பூரணமாகச் சொரிந்தது. கல்வி, ஞானம், அறிவு ஆகியவைகளின் தலைவாசல்கள் திறந்தன. இதற்கு முன் லக்ஷக்கணக்கான பெரியார்களுக்கு இத்துணை ஞானோதயம் உண்டாகவில்லை. எனக்கு வெளியான இரகசியங்களையும் அகமியங்களையும் குறித்து நான் விபரமாகக் கூறுவதாயின் இந்த ஒரு நா போதாது. அவைகளை வெளியிட மதம் தடையாக இருக்கின்றது. சுருக்கமாக வேண்டுமாயின் இதனைப் பற்றிக் கூறுகிறேன்: இன்றிரவு இரண்டு மலக்குகள் ஹௌதுல் கௌதரின் ஜலத்துடன் என்னிடம் வந்தனர். என்னை அந்த ஜலத்தினால் ஸ்நானஞ்செய்வித்து "அஸ்ஸலாமு அலைக்க யா நபியல்லாஹ்" (அல்லாஹ்வின் நபியே உமக்கு ஸலாம் உண்டாகட்டும்) என்று கூறினர். எனக்கு பதிற்கூற நா எழவில்லை. பயமுண்டாயிற்று. இதென்ன பெருஞ்

சோதனையாக இருக்கிறது என்று நினைத்தேன். இதற்குள் மற்றொரு மலக்கானவர் "யா நபியல்லாஹ் இப்தஹ் பாக பிஸ்மில்லாஹில் அஜலீ" (அல்லாவின் நபியே! அநாதியான அல்லாஹ்வின் திருநாமத்தால் உமது வாயைத்திறவாய் என்றார்) நான் கொஞ்சமாக வாயைத்திறந்து "பிஸ்மில்லாஹில் அஜலீ (அநாதியான அல்லாஹ்வின் திருநாமத்தால்) என்று மனத்தினுள் ஜபித்துக்கொண்டிருந்தேன். அந்த மலக்கானவர் வெண்ணிறமான ஒரு வஸ்துவை எனது வாயில் போட்டார். இது என்ன வஸ்து என்பது எனக்குத் தெரியாது. என்றாலும், அது தேனைப்பார்க்கினும் அதிக மதுரமாகவும், பனிக்கட்டியைப் பார்க்கினும் அதிகக் குளிர்ச்சியாகவும், கஸ்தூரியைப் பார்க்கினும் அதிக வாசனையுள்ளதாகவுமிருந்தது. இறைவனால் அளிக்கப்பட்ட இவ்வெகுமதி எனது தொண்டையினுட் சென்றவுடன் எனது நாவிற்குப் பேசச் சக்தியுண்டாகிவிட்டது. உடனே "அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹி" என்று கூறினேன்.

இதனைக் கேட்டவுடன் அந்த மலக்குகள் என்னை நோக்கி "முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களைப்போல் தாங்களும் ரஸூல்தான்," என்று கூறினர். அதற்கு நான் "நண்பர்களே, நீங்கள் கூறுவது ஒன்றும் புரியவில்லையே; நீங்கள் கூறுவது எனக்குப் புதுமையாக இருக்கிறது; எனக்கு வெட்கமாகவுமிருக்கிறது" என்றேன். அப்பொழுது அவ்விரு மலக்குகளும் என்னை நோக்கி "அல்லாஹு தஆலா உம்மை இந்த ஜனங்களுக்கு நபியாக அனுப்பி இருக்கிறான்." என்று கூறினர். அதற்கு நான் "அல்லாஹு தஆலா முஹம்மது (ஸல்.) அவர்களைக் "காத்தமுல் அன்பியா"வாக (கடைசி நபியாக) ஏற்படுத்தியுள்ளான்; அவர்களுக்குப் பிறகு வேறு நபி இல்லை; இவ்வித நிலைமையில் எனக்கு நுபுவ்வத்துக் கிடைத்திருப்பதாக நீங்கள் கூறுவதற்கு என்ன அர்த்தம்" என்று கூறினேன். அதற்கவர்கள் "மெய்தான், முஹம்மது (ஸல்.) அவர்களது நுபுவ்வத்து ஒரிஜனல், உமது நுபுவ்வத்து டூப்ளிகேட். (ஜில்லி-புரூஜி) என்று கூறினர். அதற்கு நான் "இந்த நுபுவ்வத்தை ஒப்புக்கொள்ள முடியாது; நான் நபியென்று தாவாச் செய்வதால் அநேகம் கஷ்டங்களேற்படும்; அதிலும் 'முஅஜிஸா' இல்லாமல் ஒருவரும் என்னை அங்கீகரிக்க மாட்டார்கள்" என்றேன். அதற்கவர்கள் "உம்மை ஊமையாகப் பிறக்கும்படிச் செய்து, பேசும் ஆற்றலை இப்பொழுது அளித்திருப்பது ஒன்றே உமக்குப் போதுமானது; உம்மை யாவரும் ஏற்றுக் கொள்வர்; வானம் பூமி எல்லாம் உம்மை அங்கீகரிக்கக் காத்துக்கொண்டிருக்கின்றன" என்று கூறினர். "முஅஜிஸா' இல்லாமல் வெறும் நுபுவ்வத்தை நான் ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கவில்லை; ஏதேனும் ஒரு முஅஜிஸா இருக்கவேண்டும்" என்று வற்புறுத்தினேன். அப்பொழுது அம்மலக்குகள் "அப்படியானால் முஅஜிஸாக்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்; நபிமார்களுக்கு அருளப்பட்ட எல்லா வேதங்களும் உமக்குப் பாடமாக இருக்கும்; இதனையல்லாமல் இன்னும் அநேகம் பாஷைகளையும், அவைகளின் அக்ஷரங்களையும் நீர் தெரிந்துகொள்வீர்" என்று கூறி, திருகுர்ஆனை ஓதுமாறு எனக்குக் கட்டளையிட்டனர். அதனை நான் அவர்களிடம் ஓதிக் காண்பித்தேன். பின்னர், தௌராத், ஜபூர், இஞ்ஜீல் வேதங்களை ஓதும்படிக் கூறினார்கள். அவைகளையும் அவர்களிடம் மனனமாக ஒப்புவித்தேன். மேலும், எனது இருதயத்தில் இவ்வேதங்கள் அருளப்பட்டது, ஆதியில் அந்தந்த நபிமார்களுக்கு அருளப்பட்டது போலவே அருளப்பட்டன. அவைகளில் எவ்விதத் திருத்தலும் மாறுதலும் இல்லை. வேதங்களை நான் ஓதக் கேட்டபின் மலக்குகள் என்னை நோக்கி "கும், அன்திரின்னாஸ" (எழுந்திரும், ஜனங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்) என்று கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். உடனே நான் தொழுகையிலும் ஜபத்திலும் ஈடுபட்டேன். இன்றிரவு எனக்கு வெளியான தோற்றங்களை விவரித்துக்கூற நா இடந்தர மாட்டாது. ஆனால், எனக்குக் கிடைத்த தோற்றத்தின் தேஜஸ் எனது முகத்தின் மூலமாக உங்களுக்கு வெளியாகலாம். இதுதான் எனது விருத்தாந்தம். ஆகவே, எவர் அல்லாஹ்வின் மீதும், முஹம்மது (ஸல்.) அவர்கள்மீதும், என் மீதும் ஈமான் கொள்ளவில்லையோ அவர் நரக வாதிதான். அவருக்கு முக்தி கிடைக்காது. நரகில் என்றென்றைக்குமாக வீழ்த்தப்படுவர். ஈமான் கொண்டவர்கள் ஈடேற்ற மடைவர்" என்று கூறினர்.

பாமரர்களது பக்தி

பாமரர்களுக்கு ஒரு காரியம் மனத்திற்குப் பிடித்தமாக இருந்தால் அதனைக் கண்மூடித்தன மாக நம்புவது இயற்கையல்லவா? இஸ்ஹாக்குடைய இந்தப் பிரசங்கம் பாமரர்களது மனத்தில் நன்கு பதிந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் அவருக்கு ஈமான் கொண்டனர். ஆனால், அல்லாஹுதஆலா எவரது இருதயத்தில் ஈமானின் மெய்யொளியை ஏற்படுத்தி இருந்தானோ அவர்கள் அவரை நம்பவில்லை. உலமாக்கள், வழி தவறிய இக்கூட்டத்தினருக்கு எவ்வளவோ உபதேசஞ்செய்தும் அவர்களது நன்னம்பிக்கையில் எவ்வித மாறுதலுமேற்படவில்லை. மேலும், சத்தியவான்களான உலமாக்கள் இவ் விஷயமாக உபதேசம் செய்தமட்டிற்கு அவர்களது இப்பைத்தியம் அதிக மாகிக்கொண்டே இருந்தது. இஸ்ஹாகிற்குப் பாமரர்களிடம் அதிக செல்வாக்கு ஏற்பட்டபின் நாடு பிடிக்க வேண்டுமென்ற ஆசையும் அவருக்கு உண்டாயிற்று. ஆகவே, அக்காலத்தில் கலீபாவாக இருந்த அபூஜஅபர் மன்ஸூர் அப்பாஸி அவர்களது அதிகாரிகளிற் சிலரை அடக்கி பஸரா, அம்மான் முதலிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர், கலீபாவின் போர்வீரர்கள் படையெடுத்தனர். இரண்டு கக்ஷிக்கும் பெருத்த போராட்டம் நடந்து இறுதியாக கலீபாவின் படைகள் வாகை மாலே சூடின. இஸ்ஹாக் கொல்லப்பட்டார். இவரது சிஷ்யர்கள் இப்பொழுதுங்கூட அம்மானில் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இவ்விருத்தாந்தம் ஷெய்கு இப்னுல் ஜௌஸி (றஹ்.) அவர்களால் எழுதப்பட்ட "கித்தாபுல் அத்கியா"விலும், அல்லாமா அப்துர் ரஹ்மானிப்னு பத்ரி திமிஷ்கி (றஹ்.) அவர்களால் எழுதப்பட்ட "கித்தாபுல் முக்தார்வ கஷ்புல் அஸ்ரார்" என்ற கிரந்தத்திலும் வரையப்பட்டிருக்கிறது.

சோதரீர், நபித்துவம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடன் முற்றுப் பெற்றிருந்தும் மிர்ஜாயிகளாகிய காதியானிகள் குலாம் அஹ்மதுவை 'ஜில்லி' நபியென்றும் 'புரூஜி' நபியென்றும் கூறி வருவது இதே இஸ்ஹாக்கின் தாவாவைப் பின் பற்றித்தான் என்று தோன்றுகிறது. குர்ஆன், ஹதீது, முன்னோர்களது உபதேசங்கள் முதலிய மார்க்கக் கிரந்தங்களெதிலும் 'புரூஜி நபி, 'ஜில்லி நபி' என்பதைப்பற்றிய பிரஸ்தாபமே இல்லை. ஆகவே ஜில்லி, புரூஜி நபியின் விருத்தாந்தம் ஷைத்தானுடைய ஏமாற்றத்தைத் தவிர வேறில்லை. இதே இஸ்ஹாக் பாமர ஜனங்களை ஏமாற்றியதுபோலவே போலிமிர்ஜா குலாம் அஹ்மதும் மக்களை ஏமாற்றி அநேகரைத் தம் வயப்படுத்திக்கொண்டார். அவர் காலம்வரை அவர் ஒருவிதமாக இதனைச் சமாளித்தாராயினும் அவருக்குப்பின் கலீபா என்று தம்மைக் கூறிக்கொண்டுள்ள அவரது புதல்வர் நாடில்லாவிட்டாலும் நாட்டாண்மை அதிகம் செலுத்தித் தம்மை வணங்காமுடி வேந்தர் என நினைத்துக் கொண்டு அநேகம் அட்டூழிய அக்கிரமங்களைச் செய்து வருவதும், அவைகளைப் பார்த்த அவரது சிஷ்யர்களும்கூடப் வெறுப்படைந்து அந்தக் கூட்டத்தைவிட்டு பிரிந்து வருவதும் பத்திரிகை படிப்பவருக்குத் தெரியாத விஷயமல்ல. இந்த தஜ்ஜால்களது ஏஜெண்டுகள் நமது நாட்டில் இத்துர் கொள்கைளைப் பரவச்செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலிதமடையவில்லை. அத்திபூத்தாற்போல் ஆங்காங்கு இரண்டொன்று முளைத்தாலும் சத்தியவான்களான நமது ஹிஸ்புல்லாஹ்வின் பிரசாரத்தால் அவர்களெல்லோரும் சாய்ந்துவிட்டனர். இனி இவர்கள் தலை தூக்காமல் நமது நாட்டை இறைவன் காப்பானாக. குருவின் சாயம் வெளுக்க வெளுக்க நம் நாட்டு சில்லரைத் தேவதைகளின் கொட்டம் அடங்கி மூலையில் பதுங்கி வேறு தோற்றத்தில் வெளிவந்திருக்கின்றன. காலம் மாற மாற இன்னும் எத்தனைவிதமான வேஷத்தில் அத்தேவதைகள் வெளிவரப்போகின்றனவோ நாம் அறிகிலேம். ஏகவல்ல பராபரனான அல்லாஹ் தஆலா அன்னோருக்கு நேரான பாதையைக் காண்பித்து அதில் சீராய்ச் செல்லுமாறு கிருபைபாலிப்பானாக.

திருத்தம்:—சென்ற மாதம் வெளியான நமது ஹி. இ. 264-ம் பக்கம், முதல் காலம் 41-ம் வரியில், ஆகவே இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி ஒலுவின் பர்லுகள் ஆறாகும் என்றிருப்பதை, இமாம் அபூஹனீபா (றஹ்.) அவர்கள் அபிப்பிராயப்படி ஒலுவில் பர்லுகள் நான்காகும். இமாம் ஷாபிஈ (றஹ்.) அவர்கள் அபிப்பிராயப்படி ஒலுவில் பர்லுகள் ஆறாகும். என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

முஸ்லிம் லீக் மகா நாடு

அகில இந்திய முஸ்லிம் லீக் 25-வது மகா நாடு லட்சுமணபுரியில் சென்ற அக்டோபர் மீ 15, 16, 17-ம் தேதிகளில் நடைபெற்றது. தேசத்தின் பற்பல பாகங்களிலுமிருந்து ஏராளமானோர் விஜயஞ்செய்திருந்தனர். அம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்த முஸ்லிம் தலைவர் ஜனப் முகம்மது அலீ ஜின்னு அவர்கள் ஆற்றிய அரும் சொற்பெருக்கின் முக்கிய சாராம்ஸம் வருமாறு :—

சகோதரர்களே !

அகில இந்திய முஸ்லிம் லீக்கின் இவ்வருஷாந்திரக் கூட்டம் சென்ற 30-வருடங்களுக்கிடையே கூடிய கூட்டங்களைவிட மிக நெருக்கடியான சமயத்தில் கூடியிருக்கிறது. இன்றைக்கு நீங்கள் நிர்ணயஞ்செய்யும் திட்டமும் கொள்கையும்தான் இந்திய முஸ்லிம்களுடையவும் பொதுவாக இந்திய மக்களுடையவும் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கிறது. சென்ற 1936-ம் வருடம் முஸ்லிம் லீக் தன்னுடைய சரிதையில் முதல் தடவையாக பொது ஜன இணைப்பு வைத்துக்கொள்ள வேண்டிய திட்டத்தை அங்கிகாரம் செய்தது. தற்போதைய நிலைமைகளை ஆலோசனை செய்து மாகாண சட்ட சபைகளின் தேர்தலுக்குப் போட்டிபோடுவதென்னும் முடிவுக்கும்வந்தது. மாகாண அரசியல் திட்டம் குறைவுகளுடன் கூடியதாக இருப்பினும் அதை நடத்திவைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தீர்மானித்தது.

அன்று செய்த முடிவுக்கிணங்க, 1936-ம்ஞு ஜுன்மாதத்தில் முஸ்லிம் லீக் மத்திய போர்டு ஸ்தாபிக்கப்பட்டு மாகாண கிளைகளும் ஏற்படுத்தப்பட்டன. முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவும், கல்வியிலும் செல்வத்திலும் பிற்போக்கடைந்தவர்களாகவும், பொருளாதார முன்னேற்றத்திற்கு எவ்வித முன்னேற்பாடும் செய்யாதவர்களாயும் இருக்கும் நிலைமையில் நாம் மேற்போட்டுக் கொண்டுள்ள இவ்வேலை மிகவும் சிரமமாகவே இருந்தது. ஆனால், தேர்தலுக்கு 6 மாதத்திற்கு முன் நாம் தொடங்கி வேலை செய்தபோதிலும் பலன் நம்பிக்கையை அளிக்கக்கூடியதாகவே இருக்கிறது. நாம் மனச் சோர்வடையக் காரணமில்லை. லீக் தேர்தல் போர்டு ஏற்படுத்திய மாகாணங்களிலெல்லாம் லீக் அபேக்ஷகர்களில் 100-க்கு 60-முதல் 70-பேர் வீதம் வெற்றிபெற்றிருக்கின்றனர்.

சென்ற ஏப்ரலுக்குப்பின் வடமேற்கு எல்லைப்புறம் முதல் சென்னைமாகாணம்வரை ஒவ்வொரு இடங்களிலும் கிளை லீக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் லீகில் அதிகமாக அங்கத்தினராகச் சேர்ந்து வருகின்றனர். லீக்கின் முறையையும் வேலைத்திட்டத்தையும் தெரிந்துகொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் அதில் உடனே சேர்ந்துவிடுவர். லீக், பூர்ண தேசிய ஜனநாயக ஆட்சி இந்தியாவில் ஏற்படவேண்டுமென்ற இலக்ஷியமுள்ளது. எழுதப்படிக்கத் தெரியாத பாமர மக்களின் மனதைக் கவருவதற்காக பூரண சுயராஜ்யம், சுய ஆட்சி, பொறுப்பாட்சி, சுதந்தர இயக்கம், குடியேற்ற நாட்டந்தஸ்துகளைப் போன்ற பல சொற்றொடர்கள் உபயோகிக்கப்படுகின்றன. வாயளவில் பூர்ண சுயேச்சை என்று சொல்லிக்கொண்டு 1935-ம் வருஷத்து இந்தியக் கவர்ன்மெண்ட் சட்டத்தைக் கையாளுவதில் பிரயோசனமில்லை. பூரண சுயேச்சை என்று பேசுபவர்களிலனேகர் அதன் அர்த்தத்தை உணரவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. காந்தி—இர்வின் ஒப்பந்தத்திற்கும் பூரண சுயேச்சை இலக்ஷியத்திற்கும் பொருத்தமிருக்கிறதா என்பதையும், பதவி ஏற்புக்குமுன் கேட்ட உறுதிமொழிகளும் மாகாண அரசியலை நடத்துவதும் பூர்ண சுயேச்சை இலக்ஷியத்திற்கிணங்கியதாகுமா ? என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உறுதிமொழி கோரிக்கை மறுக்கப்பட்ட பிறகு பார்லிமெண்டினுல் ஏற்படுத்தப்பட்டு ஏகாதிபத்திய கவர்ன்மெண்டால் இந்தியாவின்மீது நிர்ப்பந்த முறையில் சுமத்தப்படும் விதிமுறைகளை ஏற்று பதவி வகித்து அமுல் நடத்துவது காங்கிரஸ் கக்ஷிமுறைக்கும்

வேலைதிட்டத்திற்கும் அறிவிப்பிற்கும் இணங்கியதாகுமா? அரசியல் திட்டத்தை முறியடிப்பதென்பதற்கு பதவி ஏற்று அமுல் நடத்துவதென்பதுதான் அர்த்தம்போலும்! ஏட்டுச் சுரக்காயாயுள்ள அறிவிப்புகளும், வெறும் கூச்சல்களும், பயமுறுத்தல்களும் எவ்வித முன்னேற்றத்தையும் அளிக்கப்போவதில்லை.

இந்தியாவுக்கு இப்போது வேண்டுவது உண்மையோடு கூடிய பூர்ண ஒற்றுமைதான். ஆனால் அது ஜனங்களுக்காக இருக்கவேண்டும். சென்ற 10-வருடங்களாக காங்கிரஸ் கையாளும் முறை ஹிந்துக்களுக்கே சாதகமானதாயிருந்து வருவதால் அது முஸ்லிம்களின் ஆதரவை அதிகமாக இழக்க நேர்ந்திருக்கிறது. காங்கிரஸுக்கு மெஜாரட்டியுள்ள 6-மாகாணங்களிலும் அவர்கள் தங்களது சொல், செயல், வேலைத்திட்டம் இவைகளின் மூலம் தங்களிடமிருந்து முஸ்லிம்கள் நியாயத்தையோ நேர்மையையோ எதிர்பார்க்க முடியாதென்பதை அதிவிளக்கமாய்க் காட்டியுள்ளார்கள். அவர்களுக்கு மெஜார்ட்டியுள்ள இடங்களிலும், சௌகரியமுள்ள இடங்களிலும், அவர்கள் லீக் கட்சிகளுடன் ஒத்துழைக்க மறுத்து, நிபந்தனையின்றி தங்களிடம் சரண்புகுந்து தங்களது பிரதிக்ஞைப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டுமென ஆக்ஞாபித்தனர். லீக் டிகட்டில் சென்றவர்களை நோக்கி, உங்கள் கக்ஷியையும் வேலைத்திட்டத்தையும் கைவிட்டு முஸ்லிம் லீக்கைக் கலையுங்கள் என்று விடாமல் வற்புறுத்தினர். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் அவர்களுக்கு மெஜார்ட்டியில்லாததால் வேறு எந்த கோஷ்டியுடனும் சம்மந்தம் வைத்துக்கொள்ளுமாறு அங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. நிபந்தனையின்றி சரண் புகுந்து அவர்கள் பிரதிக்ஞைப்பத்திரத்தில் கையொப்பமிட்ட எந்த முஸ்லிம் மெம்பருக்கும் மந்திரி பதவி கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. அவர்களின் வலையில் சிக்கிய முஸ்லிம்கள், முஸ்லிம்களது நம்பிக்கையைப் பெற்றிராவிடினும் முஸ்லிம் மந்திரிகள்போல் கருதப்பட்டு வருகின்றனர். இவர்கள் காங்கிரஸுக்குச் சரண் புகுந்து நிபந்தனையின்றிக் காங்கிரஸ் பிரதிக்ஞையில் கையொப்பமிடச் செய்த விசுவாசமான சேவைக்காக முஸ்லிம் மந்திரிகளாக உலவிவர அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த துரோகத்தின் அளவுக்குத்தக்கபடி இவர்களுக்குச் சன்மானம் அளிக்கப்பட்டு வருகிறது. ஹிந்தி தேசிய பாஷையாகவும், வந்தேமாதர கீதம் தேசியப்பாடலாகவும் இருக்கவேண்டுமாம். காங்கிரஸ் கொடிக்கு எல்லோரும் தலை வணக்கம் செய்யவேண்டுமாம். இவை எல்லோர்மீதும் நிர்ப்பந்த முறையில் சுமத்தப்பட ஏற்பாடாய் வருகிறது. சொற்ப அதிகாரமும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருக்கையிலேயே ஹிந்துக்கள் ஹிந்துஸ்தானம் தங்களுக்காகவே இருக்கிறதென்பதைக் காட்ட முற்பட்டிருக்கின்றனர். காங்கிரஸின் தற்கால முறையால் வகுப்புச்சண்டை முதலியன அதிகரித்து அதனால் ஏகாதிபத்திய சர்க்காரின் பிடிப்பு இந்தியாவின்மீது அதிக வலுப்படும். தங்கள் நலம் பாதிக்கப்படாமலும் ராணுவம் தொடப்படாமலும் இருக்கும்வரை பிரிட்டிஷ் சர்க்கார் அவர்கள் இஷ்டப்படி நடக்க சுதந்தரமளிப்பார்கள்.

சிலர் முஸ்லிம் பிரதிநிதிகளுடையவோ, அல்லது முஸ்லிம் பொது ஜனங்களுடையவோ நம்பிக்கையைப் பெறுதவர்களென்பதை நன்கு தெரிந்திருந்தும் அச்சிலர்களை முஸ்லிம் மந்திரிகளாக நியமிப்பதற்கு கவர்னர்களும், கவர்னர் ஜெனரலும் உடந்தையாக இருக்கின்றனர். சிறுபான்மையோர் பாதுகாப்பு விஷயத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மேற்கொண்டுள்ள கடமையை கவர்னர்கள் அலக்ஷியஞ்செய்துவிட்டதால் முஸ்லிம்கள் நிர்க்கதியான நிலைமையிலிருந்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் பின்பற்றி நடக்கவேண்டிய முறை இன்னதென்பதை இனியேனும் உணர்ந்து அதன்படி அவர்கள் நடக்கவேண்டுமென வேண்டிக்கொள்கிறேன். முஸ்லிம்கள் தங்களது முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தவேண்டும். முஸ்லிம்களுக்குள் பிளவை உண்டுபண்ணுபவைகளைக் கண்டுபிடித்து அவைகளை அகற்ற முயற்சிக்கவேண்டும். முஸ்லிம்களிலுள்ள ஒரு கோஷ்டியார் பிரிட்டிஷாரை எதிர்பார்த்து நிற்பதிலுள்ள விபரீதப்பலனைத் தற்போது உணராவிட்டால் அவர்கள் அதனை பிறகு ஒருபோதும் உணரப்போவதில்லை. மற்றொரு கோஷ்டியார் தன் சுயநம்பிக்கையை இழந்து காங்கிரஸை எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆனால் முஸ்லிம்களோ தன்னம்பிக்கைக்கொண்டு தங்கள் கதியை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். தன்னம்பிக்கையுள்ளவர்களுக்கே அல்லாஹ் உதவி செய்வான்.

நமக்கு இதுபொழ்து வேண்டுவது உறுதியும் தன்னம்பிக்கை வாய்ந்தவர்களுமே. நமது உறுதியான நம்பிக்கையை உலகம் முழுவதும் எதிர்த்தபோதிலும் நாம் தனியாக நின்றுகூட போராடவேண்டும். முஸ்லிம்கள் பூர்ணமாக ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளாகி ஒற்றுமை மூலம் கிடைக்கும் அதிகாரத்தையும் பலத்தையும் பெறும்வரை நமது சக்தியையும் பலத்தையும் விர்த்தி செய்துகொண்டே போகவேண்டும்.

ஹிந்து சமூகத்தின் ஆதரவைப்பெற்ற ஹிந்து தலைவர்களிலெவரும் ஹிந்து முஸ்லிம் சமரஸ உடன்பாடுபற்றி கவலைப்படவோ அதில் உண்மையான விருப்பங் காட்டவோ காணோம். ஆகவே, பெரும்பான்மை சமூகத்துடன் சமரஸ உடன்பாடு எதுவும் சாத்தியமில்லை. சமத்துவமுள்ளவர்களிடையேதான் கௌரவமான ராஜி உடன்பாடு ஏற்படமுடியும். இரண்டு கக்ஷிகளும் பரஸ்பர மதிப்பும் பயமும் கொள்ளாவிட்டால் ராஜிக்கான உறுதிநிலை ஏற்படமாட்டாது. காங்கிரஸ் அதிகாரிகள் பலவாறு பேசுகின்றனர். ஹிந்து முஸ்லிம் பிரச்னையே இல்லை என்று ஒரு அபிப்பிராயமிருந்து வருகிறது. மற்றொருவர் முஸ்லிம்கள் கட்டுப்பாடற்று நிர்க்கதியாக இருக்கும் ஸ்திதியில் அவர்களுக்கு சில பதவிகளை அளித்துவிட்டால் அவர்களை நம் கைக்குக் கீழ்வைத்துக்கொள்ளலாமென அபிப்பிராயங்கொள்கிறார். ஆனால், தற்போது அகில இந்திய முஸ்லிம் லீக் உயிர் பெற்றுவிட்டதால் அவர்கள் நினைப்பது தவறேயாகும். காங்கிரஸ்காரர்கள் முஸ்லிம்களுக்குச் செய்து கொடுப்பதாக அளித்துள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதிருக்கும் நிலைமையில் காங்கிரஸ் தனது சக்தியை பெருக்கிக்கொண்டே போகிறது. முஸ்லிம்கள் இப்பொழுதுள்ள நிலைமையை நன்கு பரிசிலனை செய்து இந்தியாவெங்கும் ஒரேவித திட்டமான கொள்கையை ஏற்படுத்திக்கொண்டுவிசுவாசத்துடன் அதைப் பின்பற்றவேண்டும். நிபந்தனையின்றி நாம் கீழ்ப்படியவேண்டுமென்று காங்கிரஸ் முஸ்லிம்கள் கூறுவது பெரிய தவறாகும். பிறர் தயவையும் நல்லெண்ணத்தையும் நம்பி அடியுடன் சரண்புகுவதென்பது கோழைத்தனமாகும்.

அது முஸ்லிம் சமூகத்திற்கே துரோகஞ் செய்வதாகும். இந்த முறை பின்பற்றப்பட்டால் முஸ்லிம் சமூகம் நசித்துப்போகவேண்டியதுதான். அச்சமூகம் தேச வாழ்க்கையிலும் கவர்ன்மெண்டிலும் எவ்வித அந்தஸ்தையும் பெறாதுபோய்விடும். முஸ்லிம்கள் சரியான உணர்வு பெற்று ஒற்றுமையுடன் சிறந்த கொள்கைக்காகப் போராடுவதென்றிருந்தால் தான் அந்த சமூகம் பாதுகாக்கப்படும். "வகுப்புவாதி" "பிற்போக்காளர்" "பின்பாட்டுக்காரர்" என்னும் கூச்சல்களுக்காக நீங்கள் வெருண்டுவிடக்கூடாது. இப்படிக் கூறி முஸ்லிம்களை தாழ்மைப்படுத்த முயலும் பிரசாரத்தை நீங்கள் கண்டு கலங்கவேண்டாம்.

முஸ்லிம்களுடையவும் மற்றும் சிறுபான்மை வகுப்பினருடையவும் நன்மைகளை பாதுகாப்பது முஸ்லிம் லீக்கின் முக்கிய அடிப்படை நோக்கமாகும். இதனால்தான் லீக் காங்கிரஸின் கோபத்திற்கு ஆளாகி இருக்கிறது. இரண்டு வருடங்களுக்குமுன் நாம் என்ன செய்ய வேண்டுமென தீர்மானித்தோமோ அவைகளைத் தான் காங்கிரஸ் இதுபொழுது செய்து வருகிறது. சட்டசபைக்கு உள்ளோ, வெளியிலோ பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரோ மற்றவர்களோ முஸ்லிம்களை தங்கள் சுயநலத்திற்காக உபயோகித்துக் கொள்வதை முஸ்லிம் லீக் அனுமதிக்கப்போவதில்லை. காங்கிரஸ் என்ன பெருமை பேசிக்கொண்டபோதிலும் முஸ்லிம்களுக்கு தன்மீது நம்பிக்கையுண்டாகும்படி செய்யத் தவறிவிட்டது. முஸ்லிம் பொதுஜன தொடர்பு உண்டுபண்ணுவதாக காங்கிரஸ் கூறுவதெல்லாம் முஸ்லிம்களுக்குள் பிளவு ஏற்படுத்துவதும், முஸ்லிம் பொதுஜனங்களை அவர்கள் தலைவர்களிடமிருந்து பிரித்துவிடுவதுமே இதன் நோக்கமாகும். இது மிகமிக ஆபத்தான முயற்சியாகும். பட்டினி, ஏழ்மையென்று பேசுவதெல்லாம் ஜனங்களை அபேதவாதத்திற்குத் தயாராக்குவதேயாகும். இதற்கு இந்தியா நிச்சயம் தயாராயில்லை.

இந்தியாவின் அரசியலை நிர்ணயிப்பதற்காக வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளித்து, அவர்கள் மூலம் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக்கொண்ட ஜனப்பிரதிநிதி சபையைக் கூட்டும்படி இந்தியா மந்திரிக்கறிவிக்குமாறு தீர்மானத்தின்மூலம் ராஜப்பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டது பெரிய அறியாமையாகும். விஷயத்தின் தாரதம்மியத்தை உணரவில்லையென்பதையே இது காட்டுகிறது.

பாலஸ்தீன் பிரச்சினை

பாலஸ்தீன் பிரச்னை இந்திய முஸ்லிம்களின் மனதை வெகுதூரம் அல்லல்படுத்திவிட்டது

பிரிட்டிஷ் கொள்கை முற்றிலும் அரபியர்களைத் துரோகஞ் செய்வதாகவே இருக்கிறது. இங்கிலாந்து தனது உறுதிமொழியைமீறி நடந்திருக்கிறது. ராயல் கமிஷன் சிபாரிசு இதுபொழுது பாலஸ்தீனத்தைப் பொருத்தவரையில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் கக்ஷியைப் பூர்த்திசெய்து விடுவதாகவிருக்கிறது. ராயல் கமிஷன் திட்டத்தை சர்வதேச சங்கம் அங்கிகரிக்கவில்லை எனத்தெரிகிறது. பாலஸ்தீனத்தின் பிரச்சினை நேர்மையாகவும் தைரியத்துடனும் தீர்க்கப்படாதவரை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சரித்திரத்திலேயே ஒரு பெரிய மாறுதலுக்கு ஆரம்பமேற்பட்டுவிடுமென இங்கிலாந்துக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன். இந்திய முஸ்லிம்கள் பாலஸ்தீன் அராபியருக்கு பூர்ண ஆதரவளிக்கத்தயார். அராபியர் உறுதியாகவும், தைரியத்துடனும் தங்கள் நியாயமான உரிமைக்குப் போராடுவதில் முஸ்லிம் லீக் சார்பாக எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய முஸ்லிம்களின் பொறுப்பு

இந்திய முஸ்லிம்கள் ஒவ்வொரு மாகாணம் ஜில்லா, தாலுக்கா, கிராமம் இவைகளில் ஜனங்களின் முற்போக்கு, நன்மைக்கு உருவான வேலைத்திட்டத்தை நிர்ணயித்து அதனை அமுல் நடத்திவைக்க முன்வரவேண்டுமென யான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் முஸ்லிம்கள் பொருளாதார சமூக அரசியல் முன்னேற்றத்திற்கான வழியைத் தேடவேண்டும். ஜன நன்மைக்கான உருவான வேலைத்திட்டத்தில் மற்ற கக்ஷிகளுடன் சேர்ந்து ஒற்றுழைப்பதற்கு நாம் தயங்கவேண்டுவதில்லை. ஒவ்வொரு முஸ்லிம் ஸ்திரீ புருடர் குழந்தையும் லீக்கில் சேர்ந்து அதை வலுப்படுத்த வேண்டும். ஆயிரக்கணக்கில் முஸ்லிம்கள் கூட்டங் கூட்டமாக லீக்கில் அங்கத்தினராய்ச் சேரவேண்டும். நாம் நாடெங்கும் ஒற்றுமையை ஸ்தாபித்துக் காண்பிப்பதுடன் கட்டுப்பாடுடன் கூடிய சிப்பாய்கள் போல் தேர்ச்சிபெறவேண்டும். தேச நலனுக்காகவும் ஜனங்களது நன்மைக்காகவும் உண்மையுடன் உழைக்கவேண்டும். உழைப்பு, தியாகமின்றி யாதும் சாதித்து விடமுடியாது. நம்மைப் பலரும் பயமுறுத்தலாம், துன்புறுத்தலாம், நாம் கஷ்டப்படலாம். இதையெல்லாம் எதிர்த்து சமாளிப்பதன் மூலமே, கஷ்டங்களை ஏற்று அனுபவிப்பதன் மூலமே, உறுதியாக உங்கள் திட்டங்களைப் பின்பற்றுவதன் மூலமே நம் சமூகம் தனது உண்மையான பழைய பெருமையுடன் முன்வரக்கூடும். இந்தியாவிலுள்ள 8-கோடி முஸ்லிம்களும் கிஞ்சிற்றும் அஞ்சத் தேவையில்லை. அவர்கள் கதிமோக்ஷம் அவர்கள் கையிலேயேயிருக்கிறது. அவர்கள் ஒன்றுபட்டு நிற்கும் பக்ஷத்தில் எந்த எதிர்ப்பையும் சமாளிக்க முடியும். இதற்குள்ள மந்திர சக்தி அவர்கள் கையிலேயிருக்கிறது. முக்கியமான முடிவை நாம் உறுதியுடன் செய்யவேண்டும். எந்த முடிவும் செய்யும்முன் அதனை நூறுமுறை ஆலோசிக்கவேண்டும். முடிவு செய்தபின் உறுதியாக ஒன்றுபட்டு அதனை நிறைவேற்ற வேண்டும். உண்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். அது பொழுது அல்லாஹ்வின் உதவியால் நிச்சயம் வெற்றி நம்முடையதே. ஆண்டவன் அருள்புரிவானாக. ஆமீன்.

தீர்மானங்கள்

1. வஜீரிஸ்தான் சம்மந்தமாக இந்திய சர்க்கார் கையாளும் தற்போதைய கொள்கையை லீக்கின் இக்கூட்டம் கண்டிப்பதுடன் அதனுடைய முன்னேற்றக்கொள்கை இந்தியாவின் பொருளாதார அரசியல் நலன்களுக்கு மிகவும் பாதகமானதென்றே அபிப்பிராயப்படுவதால் எல்லைப்புறக் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

2. 1935-ம் வருஷத்திய இந்திய சர்க்கார் சட்டத்திலுள்ள விதிகளை மீறி சில மாகாணங்களில் காங்கிரஸ் கட்சிகள் மந்திரி சபைகளை ஏற்படுத்தியிருப்பதை இக்கூட்டம் ஆக்ஷேபிப்பதுடன் முஸ்லிம்களையும் இதர சிறுபான்மையினரையும் பாதுகாப்பதற்காக அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷ அதிகாரங்களை கவர்னர்கள் உபயோகிக்காதிருப்பதைக் கண்டிக்கிறது.

3. லாகூர் ஷஹீத்கன்ஜ் மஸ்ஜிதை வேண்டுமென்றே இடித்துத் தள்ளியது அனுவசியமாக இஸ்லாமிய மதத்தில் குறுக்கிடுவதாக இருப்பதால் அதனைக் கண்டிக்கிறது. மேலும் பிரிட்டிஷ் துருப்புகளின் பாதுகாப்பின்பேரில் பிரிட்டிஷ் துப்பாக்கிகளாலே பட்டப்பகலில் அது இடிக்கப்பட்டதால் அதனை முன்போலவே கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

4. பாலஸ்தீன் ராயல் கமிஷன் சிபாரிஸ்களும், காலனிகள் மந்திரி தமது கொள்கையை விளக்கி, பார்லிமெண்டு முன் அறிக்கை சமர்ப்பித்ததும் தங்கள் மதவுணர்ச்சிக்கும் உலக சமாதானத்தின் நலன்களுக்கும் விரோதமானவை யென்றும் அவற்றை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்றும் இந்திய முஸ்லிம்களின் சார்பாக இச்சபை பிரிட்டிஷாரைக் கேட்டுக்கொள்கிறது.

A. மாண்டேட் நிபந்தனைகளை அறபுகளும் இதர இஸ்லாமிய உலகமும் ஒப்புக்கொள்ளாததால் அராபிகளின் பிரஜா மதஉரிமைகள் பாதிக்கப்படாமலிருக்க அந்த மாண்டேட்டை ரத்து செய்துவிடவேண்டுமென்றும், பாலஸ்தீன்வாசிகள் தங்களுக்குகந்த ஆட்சி முறையை, சர்வதேச ஒப்பந்தங்களின்படி அவர்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட்ட பிரகாரம் ஏற்படுத்திக்கொள்ள உரிமை அளிக்கவேண்டுமென்றும் சர்வதேச அசம்பிளியின் இந்தியப் பிரதிநிதிகளுக்குப் போதிக்கவேண்டுமாய் இந்திய சர்க்காரை லீக் கேட்டுக்கொள்கிறது.

B. 1937 செப்டம்பர் 24, 25 தேதிகளில் நடைபெற்ற பாலஸ்தீன் மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தூது கோஷ்டியின் தலைவரிடமும் மெம்பர்களிடமும் லீக் பூர்ண நம்பிக்கை வைப்பதுடன் பாலஸ்தீன் அரபிகளின் குறைகளைத் தீர்ப்பதற்கு அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டுழைக்க வேண்டுமென்று அவர்கள் ஒவ்வொருவரையும் லீக் கேட்டுக்கொள்கிறது.

C. பாலஸ்தீனிலுள்ள யூதர்களுக்கு ஆதரவான கொள்கையை பிரிட்டிஷ் சர்க்கார் மாற்றாமலிருப்பார்களானால் இந்திய முஸ்லிம்களும், உலகிலுள்ள இதர இஸ்லாமியர்களும் பிரிட்டனை இஸ்லாத்திற்கு விரோதமாகவே நினைப்பார்களென்றும், அவர்களுடைய மதக்கோட்பாட்டின்படி எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுமென்றும் இக்கூட்டம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கிறது.

5. காங்கிரஸ் நினைப்பதுபோல் வந்தேமாதரக்கீதம் தேசியக்கீதமல்லவென்றும், அது வேண்டுமென்றே முஸ்லிம்களுக்கு விரோதமான மனோபாவத்துடன் எழுதப்பட்டிருக்கிறதென்றே அதன் பூர்வ சரித்திரம் காட்டுகிறதென்றும், முஸ்லிம்கள் ஆக்ஷேபிக்கும் அத்தகைய கீதம் சட்டசபையில் பாடப்படுவதன் கருத்து விளங்கவில்லை என்றும், மேற்படி கீதம் இஸ்லாத்திற்கு விரோதமானதுமட்டுமல்லாமல் தேசியத்திற்கும் விரோதமானதென்றும் இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

6. சுயேச்சை மாகாணங்கள் கொண்ட பெடரேஷன் முறையில் இந்தியா பூர்ண சுயேச்சை பெறவேண்டும். இந்த பெடரேஷன் திட்டத்தில் முஸ்லிம்களுடையவும் இதர சிறுபான்மையினர்களுடையவும் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

7. 1935-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தில் கண்ட அகில இந்திய சமஷ்டித் திட்டத்தை இக்கூட்டம் பலமாகக் கண்டிப்பதுடன் அத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதை எதிர்க்கிறது. மேலும் இத்திட்டமானது பொதுவாக இந்திய மகா ஜனங்களது நலனுக்கும் முக்கியமாக முஸ்லிம்களது நலத்திற்கும் தீங்குவிளைவிக்கக்கூடியதாக விருப்பதாய்க் கருதுவதுடன் அத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமலிருக்கும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை வற்புறுத்துகிறது.

8. சமூகங்களுக்குள் ஏகமனதான சமரச ஏற்பாடு இல்லாதிருப்பதால் தற்போது ஸ்தல ஸ்தாபனங்களின் விஷயத்தில் கூட்டுத்தொகுதி முறையை அமுலுக்குக் கொண்டுவருவது பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பில் கண்ட கருத்துக்கு முரண்பட்டதாகவிருக்குமென்றும், இதன்மூலம் ஸ்தல ஸ்தாபனங்களில் முஸ்லிம்களுக்கு உண்மையான பிரதிநிதித்துவமில்லாமல் போய்விடுமென்றும் லீக் அபிப்பிராயப்படுவதுடன் கூட்டுத்தொகுதி முறையை அமுலுக்குக் கொண்டுவரச்செய்யும் முயற்சிகளை எதிர்க்கும்படி மாகாண சட்டசபைகளிலுள்ள முஸ்லிம் மெம்பர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

9. பலுஜிஸ்தானத்தில் தற்போது எதேச்சதிகார ஆட்சிமுறை இருந்துவருவதால் இதர மாகாணங்களிலுள்ளதைப்போல் அதற்கும் ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்குவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை லீக் வற்புறுத்துகின்றது.

10. அஸ்லாம் நிலசெட்டில்மெண்டு முறை ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு ஜனங்கள் போவதைத் தடுப்பதாகவிருப்பதால் இதனை உடனே ரத்துசெய்யவேண்டு

மென்றும், இது குடியேற வருகிறவர்களுக்கு பெரும் கஷ்டத்தை விளைவிப்பதுடன் அவர்களை நிலமில்லாதவர்களாகவுமாக்கி விடுகிறதென்றும் லீக் கருதுகிறது.

11. காரியக்கமிட்டி பொருளாதார, சமூக, கல்வி சம்மந்தமாகவுள்ள வேலைத் திட்டத்தை உடனே தயாரித்து அவைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று லீக் ஆக்ஞாபிக்கிறது. காரியக்கமிட்டி அடியில் கண்ட காரியங்களைச் செய்வதற்கான வேலைத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். 1. தொழிற்சாலை தொழிலாளர்கள், இதர தொழிலாளர்கள் இவர்களது வேலை நேரத்தை நிர்ணயிக்கவேண்டும். 2. கூலியை நிர்ணயிக்கவேண்டும். 3. தொழிலாளரது வீட்டு வசதிகளைப்பெருக்கி அவற்றை ஆரோக்கியமுள்ளவைகளாய்ச் செய்யவேண்டும். 4. கிராமங்களிலும் நகரங்களிலுமுள்ளவர்களது கடன் பளுவைக்குறைக்க முயற்சிக்கவேண்டும். 5. அதிக வட்டிவாங்கும் முறையை ரத்து செய்யவேண்டும். 6. டிக்ரி பெற்ற கடன்களுக்கும், டிக்ரி பெறப்படாத கடன்களுக்கும் சரியான சட்டம் செய்யப்படும்வரை தவணைகளை வசூலிக்காமல் ஒத்திவைக்கவேண்டுமென்றுவிதி செய்யவேண்டும். 7. டிக்ரி நிறைவேற்றுவதற்காக வீடுகளை ஜப்தி செய்யவோ, அன்றி ஏலங்கூறவோ கூடாதென்று உத்திரவு பிறப்பிக்கும்படி செய்வது. 8. குடி பாத்தியதை நிரந்தரமாக இருக்கச் செய்வதுடன் நியாயமான வார, ரெவினியூ விகிதங்களை நிர்ணயிக்கச் செய்வது. 9. கட்டாய சேவக முறையை ரத்து செய்ய முயற்சிப்பது. 10. கிராம முன்னேற்ற வேலையை மேற்கொள்ளுவது. 11, குடிசைத் தொழில்களுக்கும் சிறிய கைத்தொழில்களுக்கும் ஆக்கமளிப்பது. 12, சுதேச சாமான்களுக்கும், முக்கியமாக கைநெசவுத் துணிகளுக்கும் ஆதரவளிப்பது. 13. கைத்தொழில் போர்டுகளை ஏற்படுத்துதல். 14. தரகர்கள் கொள்ளையடிப்பதைத் தடுப்பது. 15. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பது. 16. கட்டாய ஆரம்பக் கல்வி முறையைப் பெருக்கவும் மத்தியதர, சர்வகலாசாலைக் கல்வித்திட்டத்தைத் திருத்தியமைக்கவும் முயற்சிப்பது. முக்கியமாக சாஸ்திரீய கைத்தொழில் கல்வியை ஏற்படுத்தவும், துப்பாக்கிப் பயிற்சி அளிக்கும் சங்கங்களையும் ராணுவக் கல்லூரிகளையும் ஏற்படுத்தவும் முயற்சிப்பது. 17. மதுவிலக்கு முறையை அமுலுக்குக் கொண்டுவர முயற்சிப்பது. 18. இஸ்லாமிய வழக்கங்களுக்கு விரோதமான சம்பிரதாயங்களை முஸ்லிம் சமூகத்திலிருந்து ரத்து செய்து அவைகளைப் போக்க முயற்சிப்பது. 19. சமூகத் தேவைக்காகத் தொண்டர் படையைத் திரட்டவும், பூர்ண சுயேச்சை அடைவதற்கான வழிகளை ஏற்படுத்தவும் இந்த இலக்ஷியங்களுக்காக உழைக்கவும் எல்லா ராஜிய ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பும் இம்மகாநாடு கோருகிறது.

12. உர்தூ இந்தியாவின் பொதுப் பாஷையாக இருந்துவருகிறது. இந்து முஸ்லிம்களுக்கிடையே பல்லாண்டுகளாக ஏற்பட்டுவந்த நேச வளர்ச்சிக்குக் காரணமாக இந்த உர்தூ பாஷை வளர்ச்சியடைந்து வந்துளது. உர்தூ இந்தியாவின் பொதுப் பாஷையாக இருப்பதன் காரணமாகவே அதற்கு ஹிந்துஸ்தானி (ஹிந்துஸ்தானத்தின் பாஷை) என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த உர்தூபாஷை பாதுகாப்புக்கான வேலையை கவனிக்கும்படியாக உர்தூபாஷை பேசும் மக்களனைவர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இத்தீர்மானங்கள் நிறைவேறியதோடு கனம் அக்கிராசனர் தமது முடிவுரையில், இக்கூட்டம் மிக்க முக்கியமானதென்றும், சரித்திரபூர்வமானதென்றும், இம்மாதிரி காரியத்தையே கண்ணுகக்கொண்டுள்ள கூட்டம் இதற்குமுன் எப்பொழுதும் நடைபெற்றதில்லை என்றும், லீக் தனது முறையையும் வேலைத்திட்டத்தையும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டியிருக்கிறதென்றும், நாம் பெரும்பான்மை சமூகத்தினருக்குமட்டுமின்றி இந்தியாவிலுள்ள எல்லா சமுகத்தினருக்கும் சுதந்தரசாசனத்தை நாடுகிறோமென்றும், லீக் நியாயம், சமத்துவம் இவற்றை ஆதாரமாகக் கொண்டிருப்பதால் இவையில்லாவிட்டால் சகோதரத்துவமென்பதிருக்க முடியாதென்றும், நமது வேற்றுமைகள் எப்படியிருப்பினும் எல்லா வகுப்பினருடனும் நாம் சகோதரர்களாய்ச் சேர்ந்து வாழவிரும்புகிறோமென்றும், எந்த தீர்மானஞ் செய்தபோதிலும் அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய நாம் பிரதிக்ஞை செய்துகொள்ளவேண்டுமென்றும் கம்பீரமாகக் கூறி, மகாநாடு அழகிய முறையில் நடைபெற்று முடிந்ததற்கு சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்த உபசரணைக் கமிட்டியா

ருக்கும் முஸ்லிம் தேசியப்படையினருக்கும் நன்றி செலுத்திவிட்டு, லீக் மெம்பர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் வாழ்த்துக்கூறி, நாம் ஒன்றுபட்டால் நமது விருப்பங்களையும், அபிலாஷைகளையும் எந்த சக்தியும் எதிர்க்கமுடியாது; பத்திரிகைகள் இஷ்டப்பட்டதை எழுதலாம்; அவை இஷ்டப்பட்ட மகுடங்களளிக்கலாம்; ஆனால் அவைகள் விஷயத்தை முடிவு செய்துவிடப்போவதில்லை; இத்தகராரின் உள் கருத்தை ஆராய்ந்து பார்த்தால் ஹிந்துக்கள் முஸ்லிம்கள்மீது ஆதிக்கம் செலுத்த விரும்புவது தெரியவரும். முஸ்லிம்கள் பிறர் ஆதிக்கத்திலிருப்பதைவிட இறப்பதே மேலெனக் கருதவேண்டும் என்று கூறிமுடித்தார்.

இப்பூவுலகிற்கு இஸ்லாம் ஈந்த பேருபகாரம்

(பெரியக்கிருரம் கா. அ. அப்துல் ஹலீம் ஸாஹிப் வரைவது)

இஸ்லாத்தின் சூரியன் உதயமாகுதற்கு முன்னால் இப்பூவுலகின் ஒவ்வொரு பகுதியிலும் அஞ்ஞானம் தலைவிரித்தாடிக்கொண்டிருந்ததென்பது சரித்திரமறிந்த எந்த அறிவாளியும் மறுக்கமுடியா விஷயமாகும். பூமியின் எந்தப் பகுதியிலும் நற்குணமென்பது குதிரைக்கொம்பாகவே இருந்தது. உலகத்தின் நாலு பக்கங்களும் அறியாமை யென்னும் மேக மண்டலத்தால் மூடப்பட்டிருந்தது. ஒழுக்கமின்மை, தீயச்செயல்களின் வெள்ளம் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. சுருங்கக் கூறுமிடத்து மனித வர்க்கத்துக்குரிய எந்த அம்சமும் அவர்களிடத்து காணப்படவில்லை.

நமது ஞானக்கதிரவன் நபிகள்நாயகம்(ஸல்.) அவர்கள் பிறந்த தேசமாம் அரேபியாவானது உலகத்திய இதர தேசங்களைப் பார்க்கினும் மிக கேவல ஸ்திதியிலிருந்தது. நற்குணவொழுக்கம், நிர்ணயம் ஆகியவைகளின் நிலைமை முற்றிலும் நசித்துக்கிடந்தது. அவ்வரேபியர் விக்கிரக வணக்கத்தை சிறந்த ஒழுக்கமெனக் கருதினர். இறைவனிடம் அவ்விக்கிரகங்களுக்கு சுதந்திர உரிமை அளிக்கப்பெற்றிருப்பதாக எண்ணினர். கற்பனைத் தீர்ப்பு அவைகளிஷ்டப்படி மாற்றப்படுகிறதென்றும், மனிதர்களுக்கு ஏற்படும் லாப நஷ்டங்களனைத்தும் அவ்விக்கிரகங்களின் கைவசத்திலிருக்கிறதென்றும் நம்பியிருந்தனர். அதுபொழுது இஸ்லாம் தோன்றி தன் அபார சக்தியின் வேகத்தால் அதிவிரைவில் அக்கொள்கைகளை சின்னாபின்னஞ் செய்து, மக்களின் மனதைவிட்டு, இத்துற்கொள்கையை வேருடன் கெல்லி எறிந்துவிட்டு "வணக்கத்திற்குரியவன் ஆண்டவன் ஒருவனே; அவன் தனித்தவன்; அவன் கேள்வியற்றவன்; அவனுக்கு யாதும் இணை கிடையா; அவனே இக பரமனையும் சிருஷ்டித்தவனும் அதிபதியுமானவன்; சர்வ ஜீவகோடிகளுக்கும் இரணமளிப்பவனும் அவனேயாகும்" என்ற சத்தியக் கொள்கையை மக்களின் மனதில் பதியவைத்துவிட்டது. அனாச்சாரம் இருந்தவிடந் தெரியாது ஓடி மறைந்தது. இஸ்லாம் அரேபியாவின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் தன் ஒளியைப் பரப்பி பகலாக ஆக்கிவிட்டது. இதுவிஷயங்களை நன்காராய்ந்த ஐரோப்பாவின் 'மிஸ்டர் லைபான்' என்னும் சரித்திராசிரியர் தமது "லக்சரானெ இஸ்லாம்" என்னும் நூலில் கீழ்க்காணும் விஷயங்களை எழுதியுள்ளார்:—

"நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் கி. பி. 611-வது ஆண்டில் ஏகத்துவக்கொள்கையின்பக்கல் அழைக்காமலும் அக்காலை மன்பதைகளின் ஹிருதயங்களை விட்டும் நெருப்பு, தண்ணீர், கல்போன்றவைகளின் பெருமையை அப்புறப்படுத்தாமலும் விட்டிருந்தால், இன்று எத்தனையோ போக்குவரத்து சாதனங்களாகிய மோட்டார், புகை வண்டி, ஆகாய விமானம் போன்ற எதையும், இன்னும் யுத்தக் கருவிகளையும் இன்று நமது கண்முன் காண முடியாது. ஏனென்றால், எப்பொழுது ஜனங்கள் நெருப்பு, தண்ணீர், இரும்பு ஆகியவைகளை வணக்கத்திற்குரியதாகவும் பூஜைக்குரியாகவும் கருதினார்களோ, அதை ஒரு பொழுதும் உபயோகத்தில் கொண்டுவரமாட்

டார்கள். அதைக்கொண்டு எவ்வேலேயும் செய்யமாட்டார்கள். இஸ்லாம் நெருப்பு, தண்ணீர், இரும்பு போன்றவைகள் தெய்வமென்ற நம்பிக்கையை மனிதர்களின் ஹிருதயங்களை விட்டகற்றியதாலல்லவோ இன்று உலகம் அவைகளைக்கொண்டு பிரயோஜனமெய்துகிறது. இது இஸ்லாம் செய்த பேருபகாரமென்றே நான் கருதுகின்றேன்.''

(உர்து மொழிப்பெயர்ப்பு லக்சரானே இஸ்லாம் ப. 112)

இஸ்லாமும் அடிமைத்தனமும்

இஸ்லாம் உலகத்தவருக்களித்த உபகாரங்களில் இரண்டாவது உபகாரம் அடிமைகளின் முன்னேற்றமும் அடிமைத்துவத்தை ஒழித்ததுமாகும். இஸ்லாத்தின் சூரியன் இக்காசினியின்கண் தோன்றுமுன் இப்பூவுலகம் மனிதரென்ற முறையில் எல்லாம் சமமானவர்கள் என்ற விஷயத்தை மறந்திருந்தது என்று சரித்திரம் சாக்ஷியங் கூறிக்கொண்டிருக்கிறது. கி. பி. 571-ல் இப்பூவுலகம் நரபூஜையில் மூழ்கி கிடந்தது. தனவந்தர்களுக்கு தாழ்ந்த ஏழை மக்கள் சாஷ்டாங்கம் செய்துகொண்டிருந்தனர். தெய்வமென மதித்தனர். எங்கு நோக்கினும் தலைவர்களாயிருப்பவர்கள் தாழ்ந்த ஏழைமக்கள்மீது ஆதிக்கம் செலுத்திவந்தனர். அம்மக்களாலியலாத வேலைகளிலு மீடுபடச்செய்து துன்புறுத்திவந்தனர். சுருங்கக்கூறுமிடத்து ஏழை மக்கள் அத்தலைவர், தனவந்தர்களுக்கு அடங்கி ஒடுங்கி ஐக்கியப்பட்டு அவர்கள் உத்திரவுக்கு மாறுசெய்யாது தலைசாய்த்து சாஷ்டாங்கம் செய்வதே அவர்கள் ஜீவியத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. இஸ்லாம் தனது உண்மைத்துவத்தால் அதிவிரைவில் அடிமைகளை உச்சஸ்தானத்தில் கொணர்ந்துவிட்டது. மனிதர்களெல்லாம் சமமானவர்கள் என்ற தாவாவை எண்பித்துக் காட்டியது. இன்னும் இறைவனிடம் எவன் மிக பேணுதலுடையவனாகவிருக்கின்ருனோ, அவனே சிறப்பிற்கும், மேன்மைக்கும் அருகதையுள்ளவன் என்று பகிரதப்பிரசங்கம் புரிந்தது. தனக்குத்தான் உயர்விருக்கிறதென எண்ணி தாழ்ந்த ஏழைமக்கள்மீது ஆதிக்கம் செலுத்திவந்த செல்வம் படைத்த முரடர்களுடைய ஆதிக்கத்திற்கு அழிவுகாலம் பிறந்தது. இஸ்லாமிய சத்தியப் பிரசாரமானது சொற்ப காலத்தில் நிதி பூஜையை ஒழித்து சமத்துவமாலையை மன்பதைகளுக்குச் சூட்டியது. தோளோடு தோள், சேர்த்து வைத்தது. மாக்களைவிட மஹா கேவலமாய் மதிக்கப்பெற்ற மக்களுக்கு சிறப்பு, பெருமையின் கிரீடத்தை அணிவித்தது.

இஸ்லாத்தின் சமத்துவத்தை விளக்கும் கிறிஸ்துவ சரித்திராசிரியரான 'மார்க்ஸ்தாவூது' என்பவர் தமது கிரந்தமொன்றில், '' இஸ்லாம் அடிமைத்துவத்தையும் மனித வணக்கத்தையும் வேருடன் கெல்லி எறிந்துவிட்டது. ஏழை அடிமையர்கள்மீதுள்ள அநீதியை ஒழித்தது என்ற விஷயம் எவரும் மறுக்கமுடியாததாகும். இஸ்லாத்தின் திருத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வாயளவில்மட்டும் சமத்துவத்தை போதிக்கவில்லை. அதை அனுஷ்டானப் பூர்வமாகச் செய்து காட்டியுள்ளார்கள் என்பது எவரும் மறுக்கமுடியாத விஷயமாகும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

கி. பி. 611-ல் அரப் நாட்டில் எங்கு நோக்கினும் மானிட பூஜை மலிந்து கிடந்தது. தனவந்தர்கள், உயர்குலத்தில் பிறந்த தலைவர்கள் தங்கள் செல்வத்தாலும், பெருமையாலும் மமதைமேலீட்டால் தங்களையே மனிதரென்று மதித்தனர். தமக்கோர் நிகரில்லை என்று கருதினர். ஏழைமக்கள் அவர்களுக்கு வழிப்பட்டு நடக்கவேண்டும், ஊழியம் செய்யவேண்டும், கண் சமிக்கையின்பேரில் ஆடவேண்டும் என்றெல்லாம் சட்டமிட்டார்கள். சுருங்கக் கூறின் அவர்களுக்கு எதிரில் இதரர்கள் ஒரு அற்ப பிராணியாகக் கருதப்பட்டு வந்தனர். அடிமைகளுக்காக எந்த உரிமையும் இருந்ததில்லை.

இந்நிலைமையில் சமத்துவத்தை நிலைநாட்டப் பிறந்த சமத்துவத்தூதர் (ஸல்.) அவர்கள் தங்கள் மாமி மகளாரான ஜைனப் (ரலி.) அவர்களை தங்களிடமிருந்து விடுதலைபெற்றவரும், பரம ஏழையுமான, 'ஜைது பின் ஹாரிஸ்' என்றவருக்கு மணமுடித்து வைத்தார்கள். இச்சம்பவம் அக்கால தனவந்தர்களின் உள்ளங்களில் ஒரு பெரிய உணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. அதுமுதல் பணக்காரன், ஏழை, மேம்பட்டவன், தாழ்வானவன் என்ற பாகுபாடு ஒழியவாரம்பித்தது. இதேவிதமாக நமது நாயகத்தின் இணைபிரியாத் தோழர், 'பிலால்' (ரலி.) அவர்களும் அபிசீனியா தேசத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவராவர். இவர்களுக்கு வெளிரங்கத்தில் எந்த ஒரு அந்தஸ்தும் இல்லை. ஆனல் குரைஷிகளி

ஹுள்ள பெரிய பெரிய அமீர்களெல்லாம் 'பிலால்' (ரலி.) அவர்களை கண்ணியமாக மதித்தனர். அவர்களை, சங்கையான தலைவரென்று அழைத்தார்கள். இவ்விதமே மனக்கவர்ச்சி நிறைந்த உதாரணமொன்று இவண் குறிப்பிடுவோம்: நாயகம் (ஸல்.) அவர்களின் இறுதி காலத்தில் ஷாம் தேசத்தைநோக்கி அவணுள்ள அட்டூழியக்காரர்களின் கொட்டத்தை அடக்க பெரிய ஒரு சைனியம் அனுப்பப்பட்டது. அதில் பெரிய அமீர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். அப்படைக்கு "உஸாமா" (ரலி.) என்ற, அடிமையாயிருந்து உரிமை பெற்றவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இன்னும், ஸ்பெயின் தேசத்தின்மீது படையெடுத்த பொழுது அப்படைக்குத் தலைவராக 'தாரீக்' (ரலி.) என்ற பரம ஏழையான மாஜீ குலாமொருவரை நியமனம் செய்யப்பட்டது. அவராலேயே ஸ்பெயின் ஜெயிக்கப்பெற்று வெற்றிக்கொடி நாட்டப்பட்டது. ஸ்பெயினை கைப்பற்றிய முறையில் அவர்கள், உலகத்தின் கீர்த்திவாய்ந்தவர்களில் ஒருவராக விளங்குகிறார்கள்.

பைதுல் முகத்தஸ் (எருசலேம்) வெற்றியடைந்த பிறகு கலீபா—ஹஜ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள் பைத்துல் முகத்தஸிற்குப் பிரயாணம் செய்யநேரிட்டது. இப்பிரயாணத்தில் தங்களுடன் 'அப்லஹ்' என்ற நாமமுடைய குலாம் ஒருவரையும் அழைத்துச் சென்றார்கள். இந்தப் பிரயாணத்தில் இவர்களிருவர்களுக்கும் ஒரே ஒட்டகைதானிருந்தது. இதனால் இவர்களிருவரும் பாதையை பங்கிட்டுக்கொண்டார்கள். சிறிதுதூரம் ஹஜ்ரத் உமர்பாரூக் (ரலி.) ஒட்டகைமீதும் அதுபொழுது ஒட்டகையின் கடிவாளத்தை அவ்வடிமை கையில் பிடித்துக்கொண்டு முன்னால் நடந்துசெல்வதும், இதேவிதமாக ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் நடந்தும் அந்த குலாம் ஒட்டகைமீது ஏறிச்செல்லுவதுமாகவிருந்தது. இப்படியாக 'பைதுல் முகத்தஸ்' சமீபித்துவிட்டது. குலாம் ஒட்டகைமீதும் கலீபா ஹஜ்ரத் உமர்பாரூக் (ரலி.) அவர்கள் கால்நடையாகவும் செல்லும் முறை வருகிறது. அவ்வமையம் குலாம், கலீபா அவர்களை நோக்கி, "தாங்கள் ஒட்டகைமீது ஏறிக்கொள்ளுங்கள்; நான் கடிவாளத்தைப் பிடித்துச்செல்கிறேன்" என்று பலமுறை கேட்டுக்கொண்டும், 'கலீபா' அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 'கலீபா'வின் நோக்கப்படியே அந்த குலாம் ஒட்டகைமீதும் உமர்பாரூக் (ரலி.) அவர்கள் கால்நடையாகவும் பைதுல் முகத்தஸிற்குள் புகுந்தார்கள். என்னே! 'கலீபா' அவர்களின் நீதம்!! இஸ்லாத்தின் சமத்துவம்!!!

இன்று உலகத்தில் மிக ஒரு சிறிய அரசனாயினும் அவனுக்கும் அவனுடைய பணி ஆளுக்குமிடையில் இத்தகைய சம்பவம் நிகழ்வதை ஒரு விநடிகூட சகித்துக்கொண்டிருக்க மாட்டானென்பது திண்ணம். அரசனென்ன? ஒரு சாதாரண சீமானுக்கும் அவனின் வேலை ஆளுக்குமிடையே ஏற்படலாமென்று கருதுவதும் பகற் கனவாகும். இத்துணை தூரம் சமத்துவப்பிரியரான 'கலீபா' அவர்களை, இங்கிலையில் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் தயாராக காத்திருந்து வரவேற்று உபசரித்தார்கள். கலீபாவின் சமத்துவத்தின் மகிமைதானென்னே!

இச்சம்பவத்தில், உலக தயாளர், சர்க்கார மதீனா (ஸல்.) அவர்கள் ஏழைகள்மீது இரக்கம், தாழ்ந்தவர்களுக்கும் சங்கைசெய்யும் உணர்ச்சி முதலியவைகளை தங்கள் வழியைப் பின்பற்றிய சகாக்களுள்ளும் அமைத்துவிட்டார்கள் என்பதும் நமது நபிகள் பிரான் (ஸல்.) இவ்வுலக வாழ்க்கையை விட்டு மறைந்ததிற்குப் பின்னும், அச்சகாக்கள் தங்கள் பழைய நிலையில் ஸ்தரமாக இருந்திருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடைவிலங்கல். இன்னும் அதே தூயபோதனையின் காரணமாகத்தான் இன்றுங்கூட மஸ்ஜீதுகளிலும், மதசம்பந்தமான சகல வைபவங்களிலும், தனவந்தன், ஏழை, அடிமை, எஜமான் என்ற பாகுபாடின்றி ஒரே (ஸப்பில்) அணியில் தோளோடு தோள் சேர்த்து நிற்க, நங்கண்முன் காணுகின்றோம்.

இஸ்லாமும் பெண்களும்

இஸ்லாம் நம்மீது செய்த உபகாரங்களில் மூன்றாவது பெண்டீர்களுக்குச் செய்த உபகாரமாகும். இஸ்லாம்தான் பெண்டீர்கள்மீதுள்ள அநீதியை குழிவெட்டிப் புதைத்தது. இஸ்லாம் உதயமாவதற்குமுன் பெண்கள்மீது இழைக்கப்பட்டுள்ள அட்டூழியமும் அநீதியும் அளவிடவொண்ணாது என்பது எல்லா சரித்திராசிரியர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் விஷயமாகும். அவர்களுக்கும் ஆடுமாடுகளுக்கும் எவ்வித பாகுபாடும் காணப்படவில்லை. உதாரணமாக, கண்டவிடத்தில் அவர்களை காலால் உதைத்தல், இஷ்டப்பட்டவளை எவ்விடத்

திலும் விபசாரம்செய்து கற்பழித்தல், நிர்வாணப்படுத்தி மானபங்கப்படுத்தல் என்பன போன்ற பாதகச் செயல்கள் அக்காலை அதிகமாகத் தாண்டவமாடிற்று. புருஷன் மரணத்திற்குப்பின் பெண்ஜாதிக்கு எவ்விதமான உரிமையும் இருந்ததில்லை. இஸ்லாம் தோன்றி அவர்களை சங்கை, கௌரவத்திற்கு பாக்கியஸ்தர்களாக்கியது. இது இஸ்லாம் செய்த பேறுபகாரமன்றோ? இவ்வுண்மைகள் நியாய புத்தியுடைய எவரும் மறுக்கமுடியாத விஷயங்களாகும்.

இப்பொழுது நம்தென்னாட்டிலுள்ள முஸ்லிம் தனவந்தர்களிற் சிலர் தங்களிடம் இருக்கும் வேலை ஆட்களுக்கு ஷரீஅத்து ஆசாரங்களிலீடுபட அவகாசம் கொடுப்பதில்லை. இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு இக்காலை இளைஞர்கள் தொழுகை, நோம்புபோன்ற விதியான காரியங்களையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, தங்கள் ஊழியங்களிலேயே கவனஞ்செலுத்தி வருகிறார்கள். இது நஞ்சமத்துவ இஸ்லாத்தில் பெரிதும் வருந்தத்தக்க விஷயமாகும். நபிகள் பிரான் (ஸல்.) அவர்களை முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்ட முஸ்லிம்கள் மேல் கூறப்பெற்ற விஷயங்களில் நமது ஞானப்பிதா சர்வரேஆலம் (ஸல்.) அவர்களும், அன்னவர்களின் சகாக்களும் தங்களிடமிருந்த அடிமை, பணிஆட்களிடம் எவ்விதம் நடந்துகொண்டார்கள் என்பதையுணர்ந்து, தொழுகை போன்ற மார்க்க கட்டளைகளில் பங்கெடுத்துக் கொள்ள அவகாசம் கொடுத்து உதவிபுரிந்து இறைவனிடம் நற்கூலிபெற ஆண்டவன் அருள் புரிவானாக ஆமீன்.

ஹிஜாஸில் பயமின்மை

(ஹூஷ்யார்பூர் ஜனப் குலாம் ரஸூல் சாஹிப் வரைவது)

1935-ம் ஆண்டில் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றி திரு ரௌலாஷரீபை தெரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. யாங்கள் ஹஜ்ஜுக்கு முன்பே மதீனா முனவ்வராசென்று விட்டோமாகையால் திரு ரௌலாவின் ஜியாரத் முதலியவைகளை முடித்துக்கொண்டு யாங்கள் மக்கமா நகரை நோக்கிப் புறப்படத் தயாராக இருக்குங்கால், லுஹர் தொழுகை நேரத்திற்கு சற்றுமுன், "இன்று 'பாபுஸ்ஸலாம்' தலைவாயலுக்குச் சமீபத்தில் இரு திருடர்களுக்கு மார்க்க தண்டனை அளிக்கப்படும்" என ஒருவர் சப்தம் போட்டுக்கொண்டே சென்றார். அநீதி செய்தவர் இருவர்மீது அல்லாஹ்தஆலாவின் கட்டளை நிறைவேற்றப்படும் காக்ஷியைக் காண்பதற்காக குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே மக்கள் 'பாபுஸ்ஸலாம்' தலைவாயலுக்குச் சமீபத்திலுள்ள முச்சந்தியில் வந்து கூடிவிட்டனர்.

இதற்கு சற்றுநேரத்திற்கெல்லாம் இரு சிப்பாய்கள் 'பதவி' வகுப்பைச்சேர்ந்த இரு வாலிபர்களை கால்விலங்கு கைவிலங்குடன் அவ்விடம் கொண்டுவந்தார்கள். அதுபொழுது ஒருவர், "வானம் பூமி இவைகளைப் படைத்து ரக்ஷித்துக் காப்பாற்றிவரும் அல்லாஹ்தஆலா, யார் திருடுகிறானோ அவனுடைய இருகரங்களையும் துண்டித்துவிடவேண்டுமென்றும், யார் வழிப்பறி கொள்ளையடிக்கிறானோ அவனுடைய இருகால்களையும் சேர்த்து வெட்டிவிடவேண்டுமென்றும் கட்டளைப் பிறப்பித்திருக்கிறான் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்று கூறிக்கொண்டிருந்தார். உடனே கவர்ன்மெண்ட் ஆபீஸர் ஒருவர் அக்கைதிகள் இருவரையும், கைகால் நல்ல விதமாய் கட்டப்பட்டவர்களாய் தனித்தனியே ஒவ்வொரு கட்டிலின் மீது படுக்கவைத்தார். தீர்ப்பளித்த நியாயாதிபதியான ஜட்ஜ் அதுபொழுது அங்கு வந்து, "வழிப்பறிக்கொள்ளை புரிந்தார்களென்னும் குற்றம் இவ்விருவர்பேரிலும் ஏற்படுகிறது, நியாயத் தீர்ப்பளிக்கும் உயர்தரக் கோர்ட்டிலும் இக்குற்றம் உறுதி செய்யப்படுகிறது எனவே அல்லாஹ்தஆலாவின் கட்டளைப் பிரகாரம் இவ்விருவர்களின் ஒவ்வொரு கைகால்களை

மாற்றமாய் வெட்டிவிடவேண்டும்'' என்று அறிவித்தார். இவ்வறிப்பை செவியுற்றவுடன் டாக்டர் முன்வந்து அவ்விருவர்களின் வலதுகைகளின் மணிக்கட்டுகளிலும் இடதுகால்களின் கிரண்டை முளிகளிலிலும் மருந்து தடவினர்.

டாக்டர் சற்று பின்னே சென்றவுடன் கொலையாளி முன்வந்து தம்மிடமிருந்த கூரிய வாளைக் கையிலெடுத்தார். இதனைத் திருடர்கள் இருவரும் கண்ணுற்றவுடன் அழுது கூக்குரலிடுவதற்கு ஆரம்பித்தனர். உடனே கொலையாளி 'பிஸ்மில்லாஹ்' என்று கூறியவராய் அச்சதியர்களின் ஒவ்வொரு கைகால்களை மணிகட்டு கிரண்டை முளிவரை துண்டித்துவிட்டார். உடனே அவ்விருவர்களும் கட்டிலின்மீது படுக்கவைக்கப்பட்டவர்களாய் ஆஸ்பத்திரி கொண்டு சேர்க்கப்பட்டனர்.

துண்டிக்கப்பட்ட கைகால்களை மக்கள் பார்த்து உணர்ச்சிபெறுவதற்காக அவைகள் நடுமுச்சந்தியிலுள்ள கம்பத்தில் தொங்கவிடப்பட்டது. அந்த இடத்தில் ஒருவர் நின்றுகொண்டு "மக்காள்! யாராகிலும் இவ்வாறான குற்றம் புரிவார்களாயின் அல்லாஹ் தஆலா கட்டளையிட்டுள்ள சட்டப்பிரகாரம் இவ்வாறான தண்டனை அடைவரென்பது திண்ணம். மேலும், தூய்மை பொருந்திய சன்மார்க்கம் கட்டளையிடும் தண்டனைகளை நிறைவேற்றி வைப்பதில் யாருடைய சிபாரிஷும் அங்கீகரிக்கப்பட மாட்டாது. புத்திசாலிகளுக்கு இஃதோர் தக்க உணர்ச்சியாகும். இவ்வாறு தண்டனையை நிறைவேற்றி அச்சந்தீர்ந்திருப்பதை இங்கு நிலைநிறுத்தி வைக்கப்படுகிறது''யென்று இஷா நேரம்வரை உரத்த தொனியில் கூறிக்கொண்டே இருந்தார்.

சோதரீர்! ஹிஜாஸ் பிரதேசமாகிய தூய்மை பொருந்திய மக்கா முஅல்லாமா, மதீனமுனவ்வரா முதலிய இடங்களில் இதுபொழுது அல்லாஹ்வின் கிருபையால் தெய்வீகக் கட்டளை செல்படியாகிக் கொண்டிருக்கிறது. பொது சமாதானம், அச்சமின்மை இவைகளுக்குப் பங்கம் விளைவிப்பவர்களுக்கு சன்மார்க்கப்படி தண்டனை கொடுக்கப்படுகிறது. நமது இந்தியா தேதத்திலோ திருடர்கள், வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள், கொலைக்குற்றம் புரிபவர்கள் முதலானவர்களுக்கு ஏற்படும் தண்டனையின் விபரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உரோமப்பிரமாண விஷயத்தில் அதை விட்டுத் தப்பித்துக் கொள்வதற்கான பல்லாயிரக்கணக்கான வழிகளுண்டாயிருக்கின்றன. வல்லமை பொருந்திய பாரிஸ்டர்கள், வாயாடியான வக்கீல்களின் முழுப்பிரயாசையும், மக்களின் சிபாரிஷ்களும், ஜட்ஜ்களின் இரக்கமுள்ள மனங்களும், கடைசியாக மன்னிப்பு வேண்டுதல்களும், இராஜாக்கள் பட்டஞ் சூட்டு வைபவம் முதலிய சமயங்களில் நடைபெறும் பொதுவிடுதலைகளும் அநேக நேரங்களில் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்குள்ள காரணங்களாய் விடுகின்றன.

ஆனால், அல்லாஹ் தஆலாவின் கட்டளையோ, தண்டனையோ எந்தக் குற்றம் புரிந்தவருக்கும் எந்தவிதமான சிபாரிஷையோ, தயவு தாக்ஷணியத்தையோ இவ்வுலகில் அனுமதிப்பதாயில்லை. இக்காரணத்தினல்தான் இதுபொழுது இந்தியாவைவிட ஹிஜாஸில் களவு, கொள்ளை, வழிப்பறி, கொலை முதலியவைகள் மிகமிக சொற்பமாகவே நடைபெறுகின்றன. இஃதென்ன, மெள்ள மெள்ள அவைகள் இல்லாது ஒழிந்துபோய்விடும்படியான நிலைமைக்கு வரும் ஸ்திதியிலிருக்கிறது. எனவே, ஹிஜாஸ் பிரயாணஞ்செய்வோர் எவ்வித பயம், அச்சம் முதலியவைகளை மனதில் கொள்ளாது தைரியமாய்ச் செல்லலாம். ஒரு வெங்காயம் ரோட்டில்கிடந்து அதை எடுப்பதற்குயாராவது கீழே குனிந்தால் ஒரு 'பதவி' அந்த வெங்காயத்தை எடுத்துக் கொள்வதற்காக, ஏற்கனவே கீழே குனிந்த அந்த மனிதனை தனது வாளுக்கிரையாக்கி விடுவார் என்று நாம் கேள்வியுற்ற காலம் சென்று, ரோட்டில் 10 ஆயிரம் பவுன் கொண்ட மூட்டையொன்று கிடந்தாலும் அதனை எந்த பதவியும் திரும்பிப்பார்க்காது முகத்தைத் திருப்பிக்கொண்டு சென்றுவிடும்படியான நிலைமை அங்கேற்பட்டிருக்கிறதென்பதை நண்பர்கள் நன்குணர்வார்களாக.

இராக் தேசத்திலிருந்து ஒருகிழவி தன்னந்தனியே கிழம்பி ஹஜ்ஜை நிறைவேற்ற வருங்காலை, அந்தக்கிழவியை வழிமறித்து தொந்திரவு செய்யவோ, அவளிடத்திலிருப்பதைப்பிடுங்கிக் கொள்ளவோ யாரும் சக்திபெற மாட்டார்களென்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய சுபச்செய்தி நிகழ்வுறும்காலம் இதுவோவென நினைக்கவேண்டிய நிலைமையில் இதுபொழுது ஹிஜாஸ் மாகாணமிருந்துவருகிறது என்பதை நண்பர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வஸ்ஸலாம்.

தொழிலை கைக்கொண்டதனுலேற்பட்ட மாறுதல்

சோதரீர்!

நாமெல்லோரும் அறிவாற்றலை உபயோகித்து சகல காரியங்களையும் புரியவேண்டும். எல்லோரும் ஒன்றுசேர்ந்து முயற்சிக்கவேண்டும். சமயம் நிகழ்வுறும்போதே பிரயோசனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் இம் முறைகளைக் கையாள்வோமாயின் நம்முடைய நிலைமையே வேறுவிதமாய் மாறுதலடைந்துவிடும். பிறகு, நாம் என்னிலையிலிருந்தோம், இதுபொழுது இவ்வளவுதூரம் எவ்வாறு முன்னேற்றமடைந்துவந்தோம் என, ஆச்சரியப்படும் நிலைமைக்கு வந்துவிடுவோம்.

ஜப்பான் தேசத்தைப் பாருங்கள்! இற்றைக்கு சுமார் 75வருடங்களுக்குமுன் அது ஒன்றுமேயில்லாத நிலைமையிலிருந்தது. இதுகாலை வியாபாரம், கைத்தொழில், ராஜிய விவகாரம் முதலியவைகளில் அது உலகிலுள்ள சக்திகளிளெல்லாம் முதன்மையாக மதிக்கப்படுகின்றது. 75 வருட காலத்திற்குள் ஜப்பானில் இவ்வாருன பெரும் மாறுதலேற்பட்டிருக்கிறது.

1828-ம் ஆண்டில் ஜப்பான் முதன்முதலாக புதிய தோற்றத்தில் வெளிவந்தது. அந்த கவர்ன்மெண்ட் ஆரம்பமாகத் தனது ஐசுவரியத்தைச் செலவிட்டு தேசத்தில் கைத்தொழிற் சாலைகளை ஏற்பாடுசெய்து வெளி தேசங்களிலிருந்து இயந்திரங்களைத் தருவித்ததுடன் இன்ஜினீர்களையும், இரும்பு, பிடவை, காகிதம், கண்ணுடி முதலியவைகள் செய்வதில் பாண்டித்துவம் பெற்ற மேதாவிகளையும் அழைத்து அத்தொழிற்சாலைகளில் வேலை துவர்க்கம்செய்தது. இத்தொழிற்சாலைகள் தக்க முறையில் நடைபெற ஆரம்பமானவுடன் அவைகள் ஆங்காங்குள்ளவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

1892-ம் வருடத்திற்குள் அதன் நிலைமை என்னவாயிற்றென்ருல், கந்தகம், காகிதம், கண்ணுடித் தொழில்களிற் நிகரற்ற தேர்ச்சி பெற்றுவிட்டதால் அன்னியதேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்டுவந்த இச்சாமான்களெல்லாம் அந்தத் தேச மார்க்கட்டிலிருந்து ஒழிந்துவிட்டதென்றே கூறலாம். மேலும், இதர தேச மார்க்கட்டுகளில் ஜப்பான் தேயத்திய இச்சாமான்கள் நிறம்ப ஆரம்பித்தது. அதுபொழுது 20 லக்ஷம் கூலியாட்களுக்குமேல் வேலைசெய்யும் தொழிற்சாலைகள் ஜப்பானில் 2767 இருந்தது. பிறகு 1894-ல் இதன் எண்ணிக்கை 5985 வரை யுயர்ந்தது. மறுபடி 1902-ல் 7374-க்கு உயர்ந்தது. அதுகாலை, ஜப்பானில் உற்பத்தியாகும் அநேக சாமான்கள் வெளி தேசங்களுக்குக் கொண்டுபோகப் பட்டது.

1905-க்குப் பின் 10 வருடங்களுக்குள்ளாக ஜப்பானின் கைத்தொழில் உலகத்திலேயே ஒரு பெரும் மாறுதலை யுண்டுபண்ணி வைத்துவிட்டது. முன்னேற்றத்தின் வேகம் வெகு விரைவிலாய்விட்டது. ஜப்பான் சாமான்களை விரும்பி வெளிதேசத்து ஆர்டர்கள் வந்து குவிந்தவண்ணமாகவே இருந்தது. சாமான் உற்பத்தி ஏராளமாகிக் கொண்டேபோனது. இந்நிலைமையில் மகா யுத்தத்தின் அறிக்கை வெளியிடப்பட்டது. அதுபொழுது ஐரோப்பாவிலிருந்து சாமான்கள் வருவது தடைபட்டுப் போய்விட்டதால், உலகின் அநேக மார்க்கட்களில்ஐரோப்பிய சாமான்கள் காணப்படுவது அரிதாய்விட்டது. சாமான்களின் விலைகளும் அபரிமிதமாய்விட்டன. இதனுல் உலகிலுண்டான வியாபாரிகளெல்லாம் ஜப்பானுடன் வியாபார சம்மந்தத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதுபொழுது ஜப்பான் நிகரற்ற விதத்தில் தொழில் அபிவிர்த்தியில் தனது முழு பிரயாசையையும் செலுத்திதனது சாமான்கள் உலகம் முழுதிலும் பரவும்படிச்செய்தது.

1918-ல் ஜப்பானில் 22,391 தொழிற்சாலைகள்வரை ஏற்பட்டுப்போயிற்று. அங்குள்ள வாலிபர்கள் பொதுவாக ஜர்மனியிலுள்ள தொழிற்சாலை, ஸ்கூல்களில் தொழிற்காரியங்களைக்கற்றுக்கொண்டிருந்தனர். இதுவன்றி ஜர்மனியிலிருந்து தொழிற் சம்மந்தமான அநேக சாமான்களும், ரசாயன சம்மந்தப்பட்ட சாமான்களும் ஜப்பானுக்குத் தருவிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. இந்நிலைமையில் ஜர்மனி

யுத்தத்தில் பிரவேசிக்கவே ஜப்பானுக்கு இருவகையான பிரயோசனங்களேற்பட்டன. (1) ஜர்மன் தொழிற்சாலைகளில் வேலை பார்த்துக்கொண்டிருந்த ஜப்பான் வாலிபர்களெல்லாம் சுயதேசம் திரும்பி வந்துவிட்டனர்; (2) ஜர்மன் சாமான்கள் வருவது திடுகூறுய் நின்றுவிட்டது. இவைகளின்பயனுய்த் தொழிற் செய்பவர்களில் ஒரு வகுப்பார் ஜப்பானுக்குக் கிடைத்துவிட்டனர். ஜப்பான் எந்தெந்த சாமான்களுக்காக ஜர்மனி எதிர்பார்த்துக்கொண்டிருந்ததோ அந்த சாமான்களையெல்லாம் ஜப்பான் தானே தயார் செய்துக்கொள்ள முற்பட்டுவிட்டது. இந்நிலைமையில் ஜப்பானின் தொழில்களின் முன்னேற்றம் தீர்ச்சியான எல்லையை அடைந்துவிட்டது.

முஸ்லிம் சோதரர்காள்! மேலே கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் நீங்கள் பாடங் கற்றுக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வுலகிலேற்படக்கூடிய சகல மேன்மைகளும், முன்னேற்றங்களும் கஷ்டம் பிரயாசை புத்தி சாலித்தனம் ஒற்றுமை இவைகளின் பிரயோசனங்களேயாகும். இதுபொழுது நீங்கள் இவ்வழியைத் தெரிந்துகொள்ளாதுபோனுல், முன்னேற்றம், பெருமை, சங்கை மரியாதை இவைகளேற்படுமென கொஞ்சங்கூட ஆதரவு வைக்க வேண்டாம். இதுபொழுது, முஸ்லிம்களுக்கேற்பட்டுள்ள சங்கடம் யாதெனில், அவர்கள் முன்னேற்றமடைய விரும்புகின்றனர்; ஆனுல் கஷ்டமெடுப்பது, தைரியத்தைக் கையாளுவது இவைகளைவிட்டு பின்வாங்குகின்றனர். முஸ்லிம் வாலிபர்களின் எண்ணங்களைப் பரீக்ஷித்துப் பார்ப்போமாகில் அன்னேரில் 100-க்கு 90 பேர் தங்கள் முதியோர் சீக்கிரம் மரணமடைவதையும், தங்கள் மனுேவிருப்பப்படி புதிய நாகரீகத்திலீடுபட்டு, விதவிதமான உணவுகளை அருந்தி, வகைவகையான உடுப்புகளை அணிந்து, மனதிற்குவந்த மங்கையரை மணந்து உல்லாசச் சுகத்தோடு காலங் கழிப்பதையும் விரும்புகின்றனரென்பது நன்கு புலனுகும். இதற்கு மாற்றமாய் ஜப்பானிய வாலிபர்களின் ஹிருதயங்களைப் பரிசோதித்துப் பார்ப்போமாகில், அவர்களில் 100-க்கு 100 பேரும் தங்கள் தேசத்தைக் காப்பாற்றுவதற்காக தங்கள் இன்னுயிர்களை தியாகஞ் செய்யத் துணிந்தவர்களாகவும், தேச சேவகம்புரிய முற்படுபவர்களாகவும், தங்கள் தேகத்தைப் பலம் பொருந்தியதாகச் செய்பவர்களாகவும், தொழிற்களைக் கற்க விருப்பங் கொண்டவர்களாகவும், உலகில் பெயர், மரியாதை இவைகளை உண்டாக்க விருப்பங் கொண்டவர்களாகவும் இருப்பதைக் கண்டு கொள்வோம்.

இவ்விரு விருப்பங்களின் பலன் யாதாகுமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நமது வாலிபர்கள், முதியோர்கள் அரும் கஷ்டத்துடன் அருமையாய்ச் சம்பாதித்து வைத்திருந்த அபரிமித காணிபூமிகளை விற்றுவிட்டு சுவண்டி அனுபவிக்கின்றனர். இச்செயல் நாளுக்குநாள் கீழ்த்திசை அடைந்துகொண்டே வந்து இவர்களது வம்ச பரம்பரையின் நக்ஷத்திரம் என்றென்றைக்குமாக மறைந்துவிடும் ஸ்திதியில் கொணர்ந்து விட்டுவிடும். ஆனுல் ஜப்பான் வாலிபர்கள் ஒரு பக்கல் ஜெயக் கொடியை நாட்டிக்கொண்டே செல்கின்றனர். இன்னெரு பக்கல் இரத்தஞ் சிந்திக்கொண்டே இருக்கின்றனர். மற்றொரு பக்கல் கழுத்துகள் துண்டாடப்பட்டுக்கொண்டே யிருக்கின்றன. பிரக்யாதி என்னும் வானத்தில் நக்ஷத்திரங்களைப்போல் பிரகாசிக்கின்றனர். இன்னோர் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் கழிப்பதுடன் தங்கள் வகுப்பு, வர்க்கத்தாரின் அஸ்திவாரங்களையும் தக்க முறையில் கெட்டிப்படுத்திக்கொண்டே செல்கின்றனர். இவைகளையெல்லாம் கண்டு முஸ்லிம் இளைஞர்களும் தங்கள் அறிவு ஆராய்ச்சியைக்கொண்டு வேலை செய்வதற்கும், தங்கள் பெயர் கீர்த்தி பிரலாபமடைவதற்கும், தங்கள் வகுப்பாரின் நக்ஷத்திரம் சுடர்விட்டெரிவதற்கும் பிரயாசை எடுக்கலாகாதா? அதற்குள்ள நேரம் இன்னும் வரவில்லையா? முஸ்லிம் வாலிபர்களே! உஷார்! எழுமின், உழைமின்!!

புனித ரமலான் சமீபித்து வருகிறது. அம்மாதம் முழுதும் அன்பர்கள் அன்போடு நோன்பு நோற்று வல்லவனின் சன்மானத்தை வகையுடன் பெற்றுக்கொள்வார்களாக.

நான்கு முஸ்லிம் அரசாங்கங்களின் ஒற்றுமை

ஈரான், அப்கானிஸ்தான், இராக், துருக்கி ஆகிய நான்கு இஸ்லாமிய நாடுகளுக்கிடையில் ஒரு நேச உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையைப்பற்றிய சம்பாஷணைகள் சர்வதேச சங்கத்தில் சென்ற 1935-ம் ௵ அக்டோபர் மாதத்தில் இராக், ஈரான், துருக்கி ஆகிய அரசாங்கங்களுக்கிடையில் ஆரம்பமாயிற்று. பிறகு, அப்கானிஸ்தானமும் இதனைப் பூரணமாக ஆதரித்தது. இவ்வருஷம் ஜுலை மாதம் 7௳ ஈரான் தலைநகரான துஹ்ரான் பட்டணத்தில் மேற்கூறப்பட்ட நான்கு அரசாங்கங்களின் அந்நியநாட்டு மந்திரிகளால் இவ்வொப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. ஒரு பக்கல் ஐரோப்பாவிலுள்ள அரசாங்கங்கள் ஒன்றுக்கொன்று பிணங்கிக்கொண்டும், ஒன்று மேலொன்று சீறி விழுந்துகொண்டும், உள்நாட்டுச் சண்டைகளில் ஈடுபட்டுக்கொண்டும் இருக்கின்றன. மற்றொருபக்கல் தூரகிழ்ப்பிரதேசத்தில் ஜப்பானும் சீனவும் சண்டைபோட்டுக்கொண்டிருக்கின்றன. இவ்வித நிலைமையில் இவ்விரு நாடுகளுக்கும் மத்தியில் உள்ள இஸ்லாமிய அரசாங்கங்கள் தங்களுக்குள் அனுக்கிரமிப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் இருப்பதை இஸ்லாமிய உலகம் வரவேற்கும் என்பதிற் சந்தேகமில்லை. தவிரவும், எதிர்காலத்தில் இஸ்லாமிய உலகிற்கு ஏற்படப்போகிற அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் இது ஒரு நற்குறியாக இருப்பதுடன் இதர இஸ்லாமிய அரசாங்கங்களுக்கு முன்மாதிரியாகவும் இருக்கிறது. இந்த உடன்படிக்கையின் மூலமாக இஸ்லாம் மதம் சமாதானத்தையும் அமைதியையும் விரும்புகிறதென்பது வெளியாகுவதுமல்லாமல் ஐரோப்பிய மகாயுத்தத்தில் அடிபட்டு எஞ்சிய இஸ்லாமிய அரசாங்கங்கள் காலத்தின் போக்கைக் கையும் இறந்த காலத்தைய அனுபவத்தையும் படிப்பினையாகக்கொண்டு தங்களது சக்திகளை ஒன்றுதிரட்டவும், அவைகளைப் பலப்படுத்தவும் ஆரம்பித்துவிட்டன என்பதும் வெளியாகிறது. மேலும், இஸ்லாமிய அரசாங்கங்களின் இந்த ஐக்கியத்தினால் உலக சமாதானத்திற்கு எவ்விதப்பங்கமுமுண்டாகுவதில்லை யாதலால் இவ்வரசாங்கங்கள் சர்வதேச சங்கத்தின் நோக்கங்களை ஆதரிக்கின்றனவென்றும் விளங்குகிறது.

இஸ்லாமிய கிலாபத் பீடம் வீழ்த்தப்பட்ட பிறகு இஸ்லாமிய ஒற்றுமைக்காகப் பலன் தரத்தக்க முறையில் எடுத்துக்கொண்ட முதலாவது முயற்சியாக இது இருப்பதால் இதனை இஸ்லாமிய உலகம் முழுவதும் வரவேற்கிறது. இந்நான்கு அரசாங்கங்களும் இவ்வுடன்படிக்கையின்மூலம் ஐக்கியமாகிவிட்ட பிறகு ஸுஊதி அரசாங்கம், யமன், எகிப்து முதலிய இஸ்லாமிய அரசாங்கங்களும் இவ்வுடன்படிக்கையில் சேர்ந்துகொள்வது தூரமல்ல. இவ்விதமாக இஸ்லாமிய ஒற்றுமை ஏற்படுவதால் மறுபடியும் முன்னேற்றமும், நாகரீகமும் ஏற்படுவதற்குரிய பாடம் உலகிற்குக் கிடைக்கும் என்பதிற் சந்தேகமில்லை. மேனாட்டிலும், கீழ்நாட்டிலும் விநாசத்திற்குரிய சண்டைகளும், பொருளாதாரம், வாழ்க்கைமுறை முதலியவைகள் சம்பந்தமான போராட்டங்களும் நடந்துகொண்டிருக்கிற இச்சமயத்தில், இவ்வுடன்படிக்கை மிகவும் அவசியமாகவே இருந்தது. தவிரவும், வல்லரசுகளுக்கிடையில் நேசம், உறவு ஏற்படுவதற்குரிய சமிக்ஞைகளைக்கூட காண முடியாமலிருக்கிற இச்சமயத்தில் இஸ்லாமிய நாடுகள் ஐக்கியமடைவது மிகவும் அவசியமாகும். மகா யுத்தத்தால் ஏற்பட்ட பொருள் நஷ்டத்தைவிட்டு உலகம் இன்னமும் விடுதலையடையாமலிருக்கும்போது மற்றொரு மகா யுத்தத்திற்கு அடிகோலப்படுகிறது. ஸ்பெயின் தேசத்தில் உள்நாட்டுக் கலகம் என்ற திரைமறைவில் வல்லரசுகள் தங்கள் மனப்புழுக்கத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகின்றன. இவ்வித நிலைமையில் நான்கு இஸ்லாமிய நாடுகளின் இவ்வொற்றுமை உலகிற்கு நல்ல சமிக்ஞையாகும். இஸ்லாமிய அரசாங்கங்களின் மூலமாக இந்த சமிக்ஞை தோன்றியதைக் குறித்து நாம் மிகவும் சந்தோஷமடைகின்றோம். இவ்வுடன்படிக்கையின்

அஸ்திவாரக் கொள்கையாகிய அமைதி உலகம் முழுவதும் பரவ எல்லாம் வல்ல இறைவன் உதவிபுரியவேண்டும்.

துஹ்ரான் உடன்படிக்கை

துருக்கி, ஈரான், இராக், அப்கானிஸ்தான் ஆகிய அரசாங்கங்களின் நேச உடன்படிக்கை ஷை அரசாங்கங்களின் அந்நிய நாட்டு மந்திரிகளால் துஹ்ரான் ஸஅதாபாத் மாளிகையில் 1937 ஜூலை 8உ மாலை 5-மணிக்குக் கையொப்பமிடப்பட்டது. அதன்பின் அடியிற் கண்ட அறிக்கை வெளியிடப்பட்டது. அவ்வறிக்கை வருமாறு :—

ஈரான், இராக், அப்கானிஸ்தானம், துருக்கிக் குடியரசு ஆகிய நான்கு அரசாங்கங்களின் அன்னிய நாட்டு மந்திரிகள் இன்று 8-7-1937 'ஸஅதாபாத்' மாளிகையில் இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட்டனர். இவ்வுடன்படிக்கையைப்பற்றிய பேச்சு வார்த்தைகள் 2-10-1935-ல் ஜினீவாவில் இராக், ஈரான், துருக்கி ஆகிய அரசாங்கங்களின் பிரதிநிதிகளால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அப்கானிஸ்தானம் இதனைப் பூரணமாக ஆதரித்தது.

இவ்வுடன்படிக்கை மேற்கண்ட நான்கு அரசாங்கங்களில் உண்மையோடுங் கூடிய ஒற்றுமையினுடையவும் நேசத்தினுடையவும் பயனாக ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின் மூலமாக இவ்வரசாங்கங்களுக் கிடையிலுள்ள சம்பந்தங்களில் ஏற்பட்டுள்ள நேச உணர்ச்சி வெளியாகின்றது. மேலும், இவ்வரசாங்கங்களின் பொதுநலன்களையும் நேசத்தையும் இவ்வுடன்படிக்கை உறுதி செய்கிறது. அப்கானிஸ்தான், துருக்கி, இராக் ஆகிய அரசாங்கங்களின் அந்நிய நாட்டு மந்திரிகள் துஹ்ரான் பட்டணத்திற்கு விஜயம் செய்திருந்த காலத்தில் மந்திரி சபைத் தலைவர் ஹிஸ் எக்ஸலன்ஸி மஹ்மூதுகான் அவர்களையும் அந்நிய நாட்டு மந்திரி ஹிஸ் எக்ஸலன்ஸி இனயத்துல்லாகான் ஸாமி அவர்களையும் பலமுறை கண்டு சம்பாஷணை செய்தார்கள். இச்சம்பாஷணை நடைபெற்ற காலத்தில் இந்நான்கு அந்நிய நாட்டு மந்திரிகளும் தங்கள் தங்கள் தேசத்தின் சொந்த நலன்களையும் பொது நலன்களையும் பற்றி நன்கு விவாதித்துத் தங்களுக்குள் பூரண ஒற்றுமையும் ஏகோபித்த அபிப்பிராயமுமிருக்கிறதென்பதை ருஜுப்படுத்திக்கொண்டனர்.

உடன்படிக்கை நிபந்தனைகள்

1. இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட அரசாங்கங்கள் தங்களுக்குள்ள உள்நாட்டு வெளிநாட்டு வியவகாரங்களில் ஒருவருக்கொருவர் விரோதமாகத் தலையிடுவதில்லை என்று வாக்களிக்கின்றன.

2. இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட அரசாங்கங்கள் தங்களுக்குள்ள எல்லைப்புறங்களை மதித்து நடந்துகொள்ளும் என்று உறுதி கூறுகின்றன.

3. சர்வதேச சங்கப் பிரச்னைகள் எதுவும் இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகளின் பொது நன்மைக்குப் பாதகமேற்படக் கூடியதாக இருக்குமாயின் இது சம்மந்தமாக இவைகள் கலந்து ஆலோசனை செய்துகொள்ளும்.

4. வேறு ஒரு அரசாங்கம் அல்லது அரசாங்கங்கள் இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட ஒரு நாட்டிற்கு விரோதமாக ஆக்கிரமிப்புச் செய்யுமாயின், ஆக்கிரமிப்புச் செய்கிற அரசாங்கம் அல்லது அரசாங்கங்களுடன் எக்காரணத்தைக்கொண்டும் கலந்துகொள்ளாது என்பதாக இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகள் வாக்களிக்கின்றன. ஆக்கிரமிப்பு என்பதற்கு அர்த்தம் வருமாறு :—

(a) யுத்த அறிக்கை.

(b) ஒரு அரசாங்கத்தின்மீது இன்னொரு அரசாங்கம் யுத்த அறிக்கை செய்தோ அல்லது அறிக்கை செய்யாமலோ ஆயுதந்தாங்கிய பட்டாளத்தைக்கொண்டு தாக்குதல்.

(c) இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட ஒரு அரசாங்கத்தின் பிரதேசத்தில் அல்லது கப்பலில், அல்லது ஆகாயவிமானத்தில் வேறு அரசாங்கத்தின் தரை, கடல், ஆகாயப்படைகள் யுத்த அறிக்கையிட்டு அல்லது யுத்த அறிக்கையில்லாமல் படையெடுத்தல்.

(d) படையெடுப்பவருக்கு நேர் முகமாக அல்லது மறைமுகமாக உதவி புரிதல்.

இவ்விதமான காரியங்கள் ஆக்கிரமிப்புச் செய்வதாகக் கருதப்படும். ஆனல், அடியிற் கண்ட நடவடிக்கைகள் ஆக்கிரமிப்புச் செய்வதாகக் கருதப்படமாட்டா.

(a) மேலே கூறப்பட்ட ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காக நியாயமான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளல்.

(b) சர்வதேச ஒப்பந்தத்தில் 16-வது ஷர்த்துப்படி எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள்.

(c) சர்வதேச சங்கத்தின் கௌன்சில் அல்லது அஸம்பிளியின் தீர்மானப்படி எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள், அல்லது முதலில் பலாத்காரமாகத் தாக்கிய தேசத்தின்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டால், சர்வதேச சங்கத்தின் 15-வது விதியின் 75-வது உட்பிரிவின்படி நடந்துகொள்ளல்.

(d) 1928ஹு ஆகஸ்டுமீ 27வ ஏற்பட்ட பாரிஸ் யுத்த ஒழிப்பு உடன்படிக்கைக்கு விரோதமாக இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகளில் ஏதேனும் ஒன்று வேறு அரசாங்கத்தின்மீது படையெடுத்தால் படையெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு உதவிபுரிதல்.

5. இந்த உடன்படிக்கையின் நான்காவது நிபந்தனை மீறப்படுவதாக அல்லது மீறப்படப் போவதாக இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகளில் ஒன்று புகார் செய்யுமானால் உடனே இவ்விஷயத்தைச் சர்வதேச சங்கத்தின் கௌன்சிலின் கவனத்திற்குக் கொண்டு வரும். இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட நாடுகள் இது சம்மந்தமாக எடுத்துக் கொள்ளும் கூட்டு நடவடிக்கையை இந்த ஷர்த்து பாதிக்காது.

6. இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகள் ஒன்றுக்கு விரோதமாக மற்றொன்று ஆக்கிரமிப்புச் செய்யுமாயின் ஆக்கிரமிப்புச் செய்கிற நாட்டுக்கு முன்னறிவிப்புச் செய்யாமலே மற்றிரண்டு நாடுகளும் ஆக்கிரமிப்புச் செய்கிற அரசாங்கத்துடன் இவ்விடன்படிக்கையை ரத்துச்செய்துவிடும்.

7. இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகளின் ஒன்றின் எல்லைகளுக்குள் ஆமைதி சமாதானத்தைக் குலைக்கவோ அல்லது சட்டப்படி தோல்வியுண்டாக்கவோ ஆயுதந் தாங்கிய கூட்டங்கள் தங்கள் நாடுகளில் ஏற்படாவண்ணம் தடை செய்யும் பொறுப்பை இவ்வரசாங்கங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

8. இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகள் சென்ற 1928ஹு ஆகஸ்டுமீ 27வ ஏற்பட்ட யுத்த ஒழிப்பு உடன்படிக்கை ஏற்பட்டபோதே தங்களுக்குள் ஏதேனும் அபிப்பிராய வித்தியாசமோ, தப்பருத்தமோ ஏற்பட்டால் அது எவ்வளவு சிக்கலாக இருந்தாலும் சமாதானத்தின் மூலமாக அதனைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதை உணர்ந்திருக்கின்றன. இப்பொழுது அந்த நிபந்தனையை அங்கீகரித்து அதனை ஊர்ஜிதம் செய்கின்றன; இந்த ஷர்த்தை நிறைவேற்றிவரும் என்பதாக வாக்களிக்கின்றன.

9. சர்வ தேச சங்க உடன்படிக்கையில் கண்டுள்ள எந்த விதியையும் இந்த உடன்படிக்கையில் கண்டுள்ள எந்த நிபந்தனையும் ரத்துச் செய்யாது.

10 இந்த உடன்படிக்கை பிரஞ்சு பாஷையில் எழுதப்பட்டது. இதன் நகல்கள் இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட ஒவ்வொரு அரசாங்கத்திலும் இருந்துவரும். இந்த உடன்படிக்கை ஐந்து வருஷகாலம்வரை அமுலில் இருக்கும்.

இந்த காலம் முடிவடைவதற்கு ஆறுமாத காலத்திற்கு முன்னதாக இதனை மாற்ற வேண்டும் என இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகளில் எதுவும் நோட்டீஸ் விடாதிருப்பின் இந்த உடன்படிக்கை இன்னும் 5 வருஷகாலத்திற்குப் புதுப்பிக்கப்பட்டதாகவே கருதப்படும். இவ்விதமாக இதன் தவணை முடிவதற்கு ஆறு மாதத்திற்கு முன் இதனை மாற்றவேண்டும் என்று இதில் சம்மந்தப்பட்ட நாடுகளில் எதுவும் நோட்டிஸ் கொடுக்காவிடில் அப்புறம் 5 வருஷகாலத்திற்கு இது புதுப்பிக்கப்பட்டதாகவே ஒவ்வொரு 5 வருஷ தவணை இறுதியிலும் கருதப்படும். இதில் சம்பந்தப்பட்ட ஒரு நாடு தன்னை மாத்திரம் இதிலிருந்து விலக்கிக்கொண்டால், அதனைத்தவிரவுள்ளமற்ற நாடுகள் தங்களுக்குள் இவ்வுடன்படிக்கையை அமலில் வைத்துக்கொண்டிருக்கும்.

இவ்வுடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகள் தங்கள் அரசாங்கச் சட்டப்படி இவ்வுடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்யவேண்டும். இன்னும் இவ்வுடன்படிக்கை சர்வதேச சங்கத்துப் பொதுக் காரியதரிசியால் பதிவு செய்து கொள்ளப்படுவதுடன், இதர அங்கத்தினர்களுக்கும் அறிவிக்கப்படும்.

இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகள் இந்த உடன்படிக்கையை அங்கீகரித்தற்குரிய தஸ்தாவேஜ்கள் ஈரான் அரசாங்கத்தில் இருந்துவரும். இந்த உடன்படிக்கையில் சம்மந்தப்பட்ட நாடுகளில் இரண்டு இதனை ஊர்ஜிதம் செய்த ரிகார்டுகள் கிடைத்தவுடன் இவ்வுடன்படிக்கை அவ்விருநாடுகளுக்கு மிடையில் அமலில் வந்துவிடும்.

சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்து அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அன்பர்களில் அநேகர் இதுவரை சந்தா ரூபாயை அனுப்பி வைக்காமலே இருக்கின்றனர். சிலர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளையும் அனுப்பிக் கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவதினால் வீண் செலவேற்படுகிறது. ஆதலால், அன்பர்கள் இம்மாதக் கடைசிக்குள் தங்கள் பாக்கிகளை அனுப்பி வைக்குமாறு கோருகிறோம். இல்லாவிடின், வருடக் கடைசியாகிய அடுத்த டிசம்பர் மாதப் பிரதி வி. பி. செய்து அனுப்பி வைக்கப்படுமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிலோன் சந்தா நேயர்கள் :—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானால் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய சிலோன் பகுதிகளிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை நேரில் நமக்கனுப்பியாவது, அல்லது நமது சிலோன் ஏஜண்டு மெஸ்ஸர்ஸ் **A. M. K.** ஹாஜி ஸ்டோர் (220, 2-ம் குறுக்கு தெரு, கொழும்பு) இடமாவது கொடுத்தாவது ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபால் கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதார்களுக்கும் தனித் தனியே தபால் எழுதுவதுகொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் நடைபெறும் இவ்வருடத்திற்குரிய சந்தா பாக்கியை உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினங், சிங்கப்பூர், மலாயா :—இவ்விடங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள், நடைபெறும் ஆண்டுக்குரிய சந்தா பாக்கியை தாமதமின்றி அனுப்பிக் கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரித்து அபிவிர்த்திக்குக் கொண்டுவருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மானேஜர்.

மஃரிபத்துல் ஔகாத் (நேரங்களின் விபரம்)

நோன்பு வைக்கும் நேரம், நோன்பு திறக்கும் நேரம், சூரிய உதயம் முதலியவைகளை இதன்கீழ் குறிப்பிடுகிறோம். இதிற் கண்ட நேரங்கள் சென்னை நகருக்கு உரியனவாகும். சென்னைக்கு நேர்மேற்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் கூட்டியும் நேர்கிழக்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் குறைத்தும் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும். இதுவன்றி கீழே குறிப்பிட்டுள்ள நேரங்களில் அஸ்தமனத்தை 5 நிமிஷம் பிந்தியும் சுப்ஹையும், சூரியோதயத்தையும் 5 நிமிஷம் முந்தியும் அனுஷ்டிப்பது நலம்.

இதனடியில் சில முக்கியமான ஊர்களையும் அவைகள் சென்னையைவிட்டு எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதையும், அவ்விடத்திலுள்ளவர்கள் கூட்டிக்கோள்ளவேண்டிய நிமிஷங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குச் சமீபத்திலுள்ளவர்கள் அதற்கேற்றவாறு தங்கள் ஊரின் நேரத்தை நிர்ணயித்துக்கோள்வார்களாக.

ரமலான் மீ	1உ 7	8உ 14	15உ 21	22உ 28	29உ 30
நேரங்கள்	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.
ஸஹர் முடிவு	4—25	4—27	4—29	4—30	4—32
சுப்ஹுசாதிக் (மெய் வெள்ளை)	4—50	4—52	4—55	4—56	4—57
சூரியோதயம்	6—8	6—9	6—12	6—14	6—15
சூரியாஸ்தமனம்	5—45	5—43	5—41	5—40	5—40

முக்கிய பட்டணங்கள்

ஊர்	மைல்	நி	ஊர்	மைல்	நி
விழுப்புரம்	56	3½	தாராபுரம்	193	11¼
திருவண்ணாமலை	59	4	பெங்களூர்	187	10¾
கொழும்பு	25	1½	கோயமுத்தூர்	241	14
இராமேஸ்வரம்	70	4	காஞ்சிவரம்	43	2½
பட்டுக்கோட்டை	67	4	வேலூர்	81	4½
மன்னார்குடி	35	2	ஆற்காடு	81	4½
நாகப்பட்டணம்	31	2	தூத்துக்குடி	147	8½
தஞ்சாவூர்	80	4	ராமநாதபுரம்	103	6
சீர்காழி	39	2	புதுக்கோட்டை	201	12
சிதம்பரம்	42	2	திருச்சினாப்பள்ளி	111	6½
பரங்கிப்பேட்டை	37	2	சேலம்	144	8½
கூடலூர்	37	2	தர்மபுரி	147	8½
செங்கல்பட்டு	22	1	மேட்டுப்பாளையம்	236	14
வாணியம்பாடி	126	7	உதகமண்டலம்	248	14½
திருநெல்வேலி	180	10½	மதுரை	150	8
திண்டுக்கல்	162	9½	சிவகங்கை	124	7½

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madras & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T., Madras.